# பொருள் அடக்கம்

சித்திரபானு மலர் — ஆடி இதழ்


| | | | |
|---|---|---|---|
| தம்பதிகளின் பிரிவு | — | ... | 5 |
| அதிகாரம் கைமாற வேண்டும் | — | ... | 8 |
| பொம்மலாட்டமா? பித்தலாட்டமா? | — | ... | 9 |
| எகிப்து நடுநிலைமை வகிப்பதேன்? | — | ... | 11 |
| கதம்பம் | — | ... | 15 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் | — | 'ராமய்யா' | 19 |
| வைகுண்டத்தில் ஜாபாலி | — | ரா. ஸ்ரீ. தேசிகன் | 22 |
| இதயம் அறியா உலகம் | — | கே. சுந்தரம்மாள் | 25 |
| தியாகம் | — | பூவாளூர் சுந்தரராமன் | 31 |
| நல்ல புத்தி | — | எஸ். கிருஷ்ணன் | 36 |
| நம்பிக்கையின் வெற்றி | — | கமலா பத்மநாபன் | 42 |
| போஸ்டாபீஸ் | — | 'ஹரிணி' | 49 |
| ஜஹ்னுர்பேகம் | — | 'அமரன்' | 54 |
| ரதி மன்மத பரிணயம் | — | 'மாரார்' | 60 |
| வழி வேண்டுவோர் | — | 'குமுதினி' | 65 |
| புதிய புத்தகங்கள் | — | ... | 71 |


குறிப்பு:— காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களதே. அவைகளுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# இண்டோ-கம்மர்ஷியல் பாங்க், லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: } மாயவரம். சென்ட்ரல் ஆபீஸ்: } சென்னை.

செலுத்தப்பட்ட மூலதனமும் க்ஷேமநிதியும் } ரூ. 19,58,836/:-

**கிளை ஆபீசுகள்:**

அம்தல்வல்சா
அனகபள்ளி
கள்ளிக்கோட்டை
சிதம்பரம்
காஞ்சீபுரம்
ஈரோட்
காரைக்குடி
கும்பகோணம்
மதுரை
நாகைப்பட்டணம்
பாலக்காடு
புதுக்கோட்டை
சீர்காழி
தாடேபள்ளிக்கூடம்
தஞ்சாவூர்
திருநெல்வேலி
திருவாரூர்
தூத்துக்குடி
திருச்சினுப்பள்ளி
வெல்லூர்
விருதுநகர்
விஜயநகரம்

**சென்னை ஆபீசுகள்:**

மைலாப்பூர்
மாம்பலம்
திருவல்லிக்கேணி
சைனுபஜார்
அரண்மனைக்காரத்தெரு

எல்லாவிதமான பாங்க் நடவடிக்கைகளும் நடத்தப்படும்.

**S. N. N. சங்கரலிங்கய்யர்,**
மானேஜிங் டைரெக்டர்.



# வெளிவந்துவிட்டது!

**1842ல் தமிழ் நூல்கள்** எவ்வளவு தமிழுலகத்துக்குத் தெரிந்திருந்தன? அந்தக் காலத்துத் தமிழருக்குச் சங்க நூலைப்பற்றி ஏதாவது தெரியுமா? **சிலப்பதிகாரம்** படித்திர்களா? அநேகமாக இல்லையென்றே சொல்லவேண்டும்.

**1942-ல் தமிழில் அளவற்ற இலக்கிய** நூல்களை நாம் படிக்கிறோம். சங்க நூல்களை ஆராய்ந்து பிரசங்கம் செய்கிறோம். புஸ்தகம் எழுதுகிறோம்.

**இந்நிலைக்குக் காரணமான பெரியார் யார்? அவரே!**

மஹாமஹோபாத்யாய டாக்டர் **உ. வே. சாமிநாதையர்**

அத்தமிழ் வள்ளலது ஜீவிய சரித்திரம் மிக எளிய நடையில் 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பு ஆசிரியர் ஸ்ரீ கே. சுந்தரராகவன் பி. ஏ, அவர்களால் எழுதப் பெற்றது.

**ஆச்சரியமான நிகழ்ச்சிகள்**
**அருமையான வரலாறுகள்**
**அழகிய படங்கள் அடங்கிய உயர்ந்த பதிப்பு**

**மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்** அவர்கள் முகவுரையும் **மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள்** சிறப்புரையும் உள்ளது.

ரூ. **1—0—0**

(தபால் சிலவு வேறு) உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள்.

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

# காவேரி

சித்திரபானு
மலர் 1

"சென்றிடு வீரெட்டு திக்கும்
கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."
—பாரதியார்

ஆடி
இதழ் 12

225524

# தம்பதிகளின் பிரிவு

***ராஜாஜி*** காங்கிரஸிலிருந்து விலகிவிட்டார். தன் வாழ் நாளில் பாதிக்கு மேல் அதற்காகப் பாடுபட்டு வந்தார்; தமிழ் நாட்டில் அதன் கொள்கைகளைப் பரவச் செய்தார்; தமிழ் மக்கள் தியாகத்திலும் தேச சேவையிலும் பின்வாங்க மாட்டார்கள் என்பதை உலகத்திற்கு நிரூபித்தார்; காங்கிரஸ் முழக்கத்தை எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும், வீடுகளிலும், ஒலிக்கச் செய்தார்; காங்கிரஸ் பதவியேற்றபொழுது, சென்னை பிரதம மந்திரியாக இருந்து தமிழ் நாட்டிற்கு பிரக்யாதி வரும்படி செய்தார். அப்படிப்பட்டவர் இன்று காங்கிரஸிலிருந்தே விலகும்படி நேரிட்டுவிட்டது.

ராஜாஜி லக்ஷ்ய வாழ்க்கையைக் கைக்கொண்டவர். தன்னலம் என்பதையே அறியாதவர். புத்தி கூர்மையிலும் வாக்சாதுர்யத்திலும் இந்தியாவிலேயே நிகரற்றவர். காந்திஜியின் மதிப்புப் பெற்ற தலைவர். தமிழ் மக்களின் அன்பிற்குப் பாத்திரமானவர். அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கு சமமாக நின்று உதவியவர். இன்று இந் நெருக்கடியான நிலைமையில் விலக அவர்வேண்டிய காரணமென்ன?

அவர் விலகும்படியான நெருக்கடியை அவருக்கு விளைவித்த 'பெருமை' தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியைச் சார்ந்தது. அது தமிழ் நாட்டிற்கு வேறு என்ன நன்மையைச் செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும், இந்த பெரிய 'நன்மை'யைச் செய்திருக்கிறது. இந்தியாவிற்கே பெரிய மதிப்பிற்குரிய தலைவராக விளங்கிய சூரியனை காங்கிரஸிலிருந்து பிரகாசிக்க இயலாதவாறு செய்துவிட்டது. தமிழ் மக்கள் மனதிலும் ஒரு படிப்பினையைக் கற்பித்துவிட்டது. மக்களின் ஒப்பற்ற தலைவர் மீது ஒழுங்கீன நடவடிக்கையாம்! என்ன குற்றத்திற்காக?

காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் ஒன்றான ஹிந்து—முஸ்லிம் பிரச்னையைத் தீர்க்க ஒரு வழி கண்டுபிடித்து அதை தேச மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி பிரசாரம் செய்ததற்காக. இதில் என்ன தவறு? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இவ்வழியை ஒப்புக்கொள்ளவில்லை. அந்த அபிப்பிராய பேதத்தினால் ராஜாஜி தன் காரியக் கமிட்டி பதவியை ராஜினாமா செய்துவிட்டு காங்கிரஸ் அங்கத்தினர்களிடம் மனமாற்றம் ஏற்படுத்துவதின் பொருட்டு பிரசாரம் செய்ய முன்வந்தார். இது எல்லோரும் அறிந்த விஷயம். ஆனால், தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு இது பிடிக்கவில்லை. ராஜாஜி சென்றவிடமெல்லாம் அக் கமிட்டியில் சிலர் சென்று எதிர்ப் பிரசாரம் செய்தார்கள். இது சரியான முறையே. ஆனால் அத்துடன் நிற்க அவர்களுக்கு மனமில்லை. ராஜாஜி மீது அவர்களுக்கு ஆத்திரம் அதிகரித்தது. அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் விதிகளுக்கு மாறாக நடந்ததாக அவர்மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு ராஜாஜியைக் காங்கிரஸிலிருந்தே துரத்திவிட வேண்டுமென்ற அவா போலும்! அதற்கேற்ப, சென்னை மாகாண சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்களின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு தினம் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் ஒருக்கால் ராஜாஜியை மறுபடியும் தெரிந்து எடுத்துவிடப் போகிறார்களே என்று எண்ணி தமிழ்நாடு சட்டசபை அங்கத்தினர்கள் இவர்களுக்கு ஒரு கட்டளை விடுத்து அவ்வங்கத்தினர்கள் த. நா. கா. க. தலைவரின் ஆக்ஞையின்படிதான் தேர்தலில் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ராஜாஜி இந்த சம்பவங்களையெல்லாம் கண்டு மனம் தாளாமல் தன் சட்டசபை அங்கத்தினர் பதவியையும் காங்கிரஸ் அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்யத் தீர்மானித்துவிட்டார். அவர் செய்து வரும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைப் பிர

சாரம் தேசத்திற்கு இத்தருணத்தில் இன்றியமையாதது. ஆகையால் அதைவிட முடியாது என்ற கருத்தினாலும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாருடன் இவ் விஷயத்தில் போராட மனமில்லாததினாலும், இவ்வாறு விலகிக்கொள்ள தான் நிச்சயித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.

**"நான் செய்யும் பிரசாரம் காங்கிரஸ் விதிகளுக்கு மாறானதல்ல. சென்ற முப்பது வருஷங்களாக எனக்கு காங்கிரஸில் உள்ள அனுபவத்தின் பேரில் நான் என் பிரசாரத்தை வெகு ஜாக்கிரதையாக நடத்தி வருகிறேன். காங்கிரஸ் ஒரு தேசீய ஜனநாயக சபை. மாறுபட்ட அபிப்பிராயத்தை அதன் அங்கத்தினர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது, அல்லது அதன் அபிப்பிராயத்தை மாற்றும்பொருட்டு பிரசாரம் செய்யக்கூடாது என்று சொல்லும்படியான விதிகள் அதில் கிடையாது"** என்று ஓர் அறிக்கையில் சொல்லியிருக்கிறார் ராஜாஜி.

ராஜாஜி கூறும் யோசனையில் நம்பிக்கையில்லாமலிருக்கலாம்; அவர் பிரசாரம் செய்வதில் அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆனால், அதற்காக அவர்மீது நடவடிக்கை எடுப்பதென்பது ஜனநாயகத்துக்குகந்த முறையாகாது. காங்கிரஸ் ஒரு மகத்தான ஸ்தாபனம். அதில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள். லக்ஷக்கணக்கான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அதைக்காட்டிலும் நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலோர் அதன் கொள்கைகளில் அனுதாபங்காட்டி வருபவர்கள். இப்படிப்பட்ட பெரிய ஸ்தாபனத்தில் அதன் சில குறிப்பிட்ட தலைவர்களுக்கு மாறான அபிப்பிராயமே தலை தூக்கக்கூடாதென்றால் அதிலிருந்து அறிவாளிகள் வெளியேறநேரிடும். அதுவும் கொள்கைகளை வகுக்கும் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் வந்தால் அதற்கு அடக்குமுறை பிரயோகம் மகா விபரீதமான வழி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செய்த காரியம் காங்கிரஸின் கியாதியை வளர்க்கக்கூடியதாக இல்லை. இத்தகைய செய்கைகள் ஐம்பத்தைந்து வருடமாக அரும்பாடுபட்டு வளர்த்த தேசிய ஸ்தாபனத்தின் களங்கமற்ற பெயரைக்குலைப்பதற்கு அடிகோலினதாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு ஏன் இந்த குறுகிய புத்தி? இதனால் ராஜாஜியை பயமுறுத்தி திருத்திவிடலாம் என்று எண்ணிற்று! ராஜாஜியின் பூர்வ சரித்திரத்தை சற்று அது புரட்டியிருந்தால் இது சாயாது என்று தெரிந்துகொண்டிருக்கும். டாக்டர் ராஜன் விஷயத்திலும் சரி, தான் பிரதம மந்திரியாயிருந்தபொழுது கொண்டு வந்த சட்டதிட்டங்களிலும் சரி, ஜெயிலிலிருந்து வந்த பிறகு அவர் செய்துவந்த பிரசாரங்களிலும் சரி, அவர் எத்தகைய எதிர்ப்புக்கும் அசையாது திட சித்தத்துடன் தன் காரியத்தை சாதிப்பவர் என்பது தெரிந்திருக்கும். இது மட்டுமா? தனது குரு காந்திஜியின் அபிப்பிராயத்துக்கு மாறாக காங்கிரஸை பூனா தீர்மானம் செய்யச் செய்தது ராஜாஜி. ஒரு முறை தேசத்திற்கு உகந்தது என்று பட்டால் எவ்வித இடையூறையும், தியாகத்தையும் பொருட்படுத்தாது அதைத் தொடர்ந்து பின்பற்றுவது தான் தலைவர்களுக்குகந்த லக்ஷணம். பதவி மோகங்கொண்டவர்கள் இதைச் செய்ய இயலாது தான். இதை தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி உணரவில்லையே என்று வருந்துகிறோம்.

அல்லது ராஜாஜியை பிரசாரம் செய்ய விட்டால் அவர் சொல்வதின் தத்துவம் மக்கள் மனதில் படிந்துவிடும், ஆகையால் அவர்மீது நடவடிக்கை எடுத்து அவருக்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிடவேண்டுமென்று எண்ணியிருக்கவேண்டும் தமிழ் நாடு காரியக்கமிட்டி. அவர் சொல்லும் விஷயம் தேசத்திற்கு உகந்ததல்ல, தப்புப் பிரசாரம், என்று இவர்களுக்குத் தோன்றினால் அதற்கு எதிர்ப் பிரசாரம் செய்வது தான் முறை. இப்படி எதிர்ப் பிரசாரம் செய்து சமாளிக்க முடியாதவன் தான் தண்டோ உபாயத்தைக் கையாள முன் வருவது. இதைக் கமிட்டியார் உணராமலில்லை. எதிர் பிரசாரம் செய்து பார்த்தார்கள். பிறகுதான் இந்த நடவடிக்கையைத் துவக்கினார்கள். இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று, அவர்கள் பிரசாரத்தில் வெற்றி பெறாமல் திரும்பியிருக்கவேண்டும். அல்லது இம்முறையில் நம்பிக்கையை இழந்து தண்டோ உபாயத்தை கையாண்டிருக்கவேண்டும். இதைத் தவிர வேறு காரணம் எதுவும் இருக்கமுடியாது.

காங்கிரஸ் நிர்வாகிகள் உள்நாட்டு விஷயங்களில் அஹிம்ஸா முறையைக் கையாளக் கடமைப்பட்டவர்கள். சாவதான முறையில் எதிரியின் மனதை மாற்றுவதுதான் அஹிம்ஸா முறை. வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டவனை நடவடிக்கை எடுப்பேன் என்று பயமுறுத்தி, தான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை விட்டு விடும்படி செய்வது அஹிம்ஸா முறையாகாது. தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி இவ்விஷயத்தில் ஹிம்ஸா முறையைக் கையாள முன்வந்துவிட்டதைக் குறித்து மனம் வருந்துகிறோம்.

பிரிட்டிஷ் கவர்மெண்டார் இந்நாட்டில் யுத்த ஆரம்பத்தில் இந்திய தற்காப்பு சட்டத்தின்படி பேச்சு சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து அடக்குமுறையைக் கையாள ஆரம்பித்தார்கள். நாடெங்கும் அதற்குக் கண்டனம் பிறந்தது. ஆயினும் அது நின்ற பாடில்லை. மகாத்மா காந்தி பேச்சு சுதந்திரத்தை இந்நாட்டில் நிலைநாட்டுவதற்காக ஓர் இயக்கம் ஆரம்பித்தார். அச்சுதந்திரத்தைக் காக்க, தமிழ்நாட்டிலும் அநேகர் சிறை சென்றனர். இன்று தமிழ் நாடு காரியக் கமிட்டியில் வீற்றிருக்கும் தலைவர்கள் தான் அதற்கு முன்னணியிலிருந்து பேச்சு சுதந்திர இயககத்தை நடத்தினார்கள். இது வாசகர்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கலாம். பொது மேடைகளில் ஏறி பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். என்ன பிரதிக்ஞை? பேச்சு சுதந்திரம் இந்நாட்டில் நிலைக்கும் வரை நாங்கள் சட்டமறுப்பு செய்வோம் என்றார்கள். அதன் பலனாய் ஏதேனும் நடந்ததா என்ற பிரச்னை இங்கு எழவில்லை. சிறை சென்றார்கள். மறுபடியும் அவர்கள் சிறைசெல்லவில்லை. ஆகையினால் அவர்கள் பாடுபட்ட பேச்சு சுதந்திரம் கிடைத்திருக்க வேண்டுமென்றுதான் நாம் எண்ணவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பேச்சு சுதந்திர இயக்கத் தலைவர்கள் இன்று ராஜாஜியின் பேச்சு சுதந்திரத்தை பறிமுதல் செய்ய முற்பட்டுவிட்டார்கள் என்றால் நம்மால் நம்பவே முடியவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் சிறைகளில் வாசம் செய்ததினால் அவர்களின் சர்வாதிகாரவாடை இவர்களுக்கும் அடித்துவிட்டது என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது.

ராஜாஜியும் அந்த இயக்கத்தில் சிறை சென்றவர்தானே? அவர் அதிலிருந்து ஒரு படிப்பினை கற்றிருக்கிறார். என்ன அது? பேச்சு சுதந்திரத்தைக் காப்பாற்ற எதையும் தியாகம் செய்யலாம் என்பது தான் அது. ஆகையினால் அவர் காங்கிரஸில் வகித்துவந்த எல்லா பதவிகளையும் விட்டுவிட்டார் (அங்கத்தினர் பதவி உள்பட).

இதனால் என்ன? அவர் பிரசாரத்தைக் கேட்க தமிழ் நாட்டில் மக்கள் கூடாமல் போய்விடுவார்களா? அல்லது அவர் வாக்வன்மை குன்றிவிடுமா? தமிழ் மக்கள் அவரை இன்னும் அதிகமாக கௌரவிப்பார்கள் என்பது திண்ணம். தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி செய்த காரியத்தின் பயனென்னவென்றால் ஒப்பற்ற தலைவரை காங்கிரஸிலிருந்தே மிக நெருக்கடியான சமயத்தில் விரட்டியடித்ததைத் தவிர வேறொன்றுமில்லை. இதனால் ராஜாஜியின் பிரசாரத்திற்கு யாதொரு குந்தகமும் ஏற்படாது.

சென்ற முப்பது வருஷ காலமாக தமிழ்நாட்டில் காங்கிரஸ் என்றால் ராஜாஜி என்ற சப்தமும் எழாமல் போகாது. எங்கு கண்டாலும் அவர் பெயர் முழங்கும்; அவர் படத்தோற்றம் மக்கள் கண்முன் நிற்கும். காங்கிரஸும் ராஜாஜியும் இணைபிரியாத தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். இன்று இவர்கள் பிரிக்கப்பட்டுவிட்டார்கள். இத்தொண்டாற்றின காரியக்கமிட்டி அங்கத்தினர்களுக்கு வரும் தேர்தலில் தமிழ் மக்கள் புத்தி கற்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆனால் ராஜாஜி சொல்லிவிட்டார்: "நான் இந்நாளும் ஏறிவந்த வண்டி சேற்றில் மாட்டிக்கொண்டுவிட்டது. ஆகையினால் அதனின்றும் இறங்கி அதன் சக்கரத்தைபள்ளத்தினின்று தூக்கப் பாடுபட வேண்டியிருக்கிறது. அது முடிந்தபின் மறுபடியும் வண்டிக்கு வந்துவிடுவேன்" என்று தமிழ் மக்களுக்கு உறுதி கூறியுள்ளார். இது வெகு சீக்கிரத்தில் கைகூடுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

# :: அதிகாரம் கைமாறவேண்டும் ::

"எவ்வித நிபந்தனையுமின்றி யுத்தத்தில்சிக்கியுள்ள பிரிட்டிஷாருக்கு நாம் உதவவேண்டும்" என்ற மன நிலைக்கும், "பிரிட்டிஷ் அதிகாரம் இந்நாட்டிலிருந்து அறவே வாபஸ் ஆகவேண்டும்" என்ற முடிவிற்கும் எவ்வளவு வித்யாஸம்! மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாஸம்.

மஹாத்மாவின் மன நிலையில் இத்தகைய மாறுதல் என்றால் பொது ஜனங்களிடையே எவ்வித மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்று சொல்லாமலேயே விளங்கும். பேச்சு சுதந்திரத்திற்காக ஓர் போராட்டத்தை ஆரம்பித்தாரல்லவா? அப்பொழுது பிரிட்டிஷாரின் யுத்தப்போக்குக்கு எவ்வித குந்தகமுமின்றி அதை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினார். சில குறிப்பிட்ட ஜனப் பிரதிநிதிகளை மட்டும் அவ்வியக்கத்தில் கலந்துகொள்ள அனுமதித்தார். பொதுஜன இயக்கமாக அதை மாற்றவேண்டுமென்ற நாட்டினரின் கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார். ஆனால் இன்று, பொது மக்கள் இயக்கம்தான் ஆரம்பிக்கப்போவதாக அறிவிக்கிறார். இதிலிருந்து என்ன தெளிவாகிறது? பிரிட்டிஷாரிடமிருந்த நம்பிக்கை பறந்தோடிவிட்டது. மனக்கசப்பு அதிகரித்துவிட்டது. பிரிட்டிஷ் பிடி நாளடைவில் தளர்ந்துவிடும் என்று எண்ணிவந்த மனம் விரட்டினாலொழிய என்றும் தளராது என ஏக்கங்கொண்டுவிட்டது போலும்!

நாட்டிலுள்ள இம்மனோபாவத்தைத்தான் இன்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் பிரதிபலிக்கிறது. "பிரிட்டிஷ் அதிகாரம் இந்நாட்டிலிருந்து வாபஸ் ஆகவேண்டும்". எதற்காக? "அன்னிய ஆட்சி மக்களின் மனோபாவத்தையும் அடிமைப்படுத்தி சீர்கேடான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. இந்நிலையில் எதிரி தாக்குதல் ஏற்படுமானால், மக்களை எழுப்பி அதைச் சமாளிக்க முடியாது. மனித சமூகத்தையே அழித்துவரும் நாட்ஸி முறை, பாஸிஸ்ட் முறை இவைகளின் அட்டூழியத்தை அடக்க சுதந்திரமின்மையால் இந்தியா உதவியளிக்க முடியவில்லை. ஆகையினால் அதற்கு உடனே விடுதலைவேண்டும். பிரிட்டிஷ் அதிகாரம் நாட்டு மக்களிடத்தில் மாற்றப்படவேண்டும்."

இதை எப்படிச் செய்வது? பிரிட்டிஷார் யாரிடம் தங்கள் அதிகாரத்தை ஒப்படைப்பது? "பிரிடிட்ஷ் அதிகாரம் வாபஸானஉடனே இந்தியாவிலுள்ள பொறுப்புவாய்ந்த ஆண்களும் பெண்களும் கூடி இந்திய மக்களின் எல்லா முக்கியமான தொகுதியினர்களின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்துவார்கள். இவ்வரசாங்கம் பிறகு இந்தியாவுக்கு ஒரு நிரந்தர அரசியல் அமைப்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டும். அக்கூட்டம் எல்லா மக்களுக்கும் திருப்திகரமான இந்தியா கவர்மெண்டை வகுக்கும். சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் கவர்மெண்டாரின் பிரதிநிதிகளும் இவ்விரு தேசங்களுக்குள் வருங்காலத்தில் இருக்கவேண்டிய தொடர்பைப்பற்றியும், இவ்விரு தேசங்களும் நேச நாடுகளுடன் கூடி எதிரி தாக்குதலை எவ்வாறு சமாளிப்பது என்பதைப்பற்றியும் திட்டம் வகுக்கும்."

"பிரிட்டிஷ் கவர்மெண்டார் இந்நாட்டில் இருந்து வாபஸாகும் இந்த யோசனையை ஒப்புக்கொள்ளாது, இந்தியாவின் சுதந்திரத்திற்கு வாளாக இருப்பார்களானால், மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் ஓர் அஹிம்ஸா யுத்தத்தை பிரிட்டிஷார் மீது தொடுக்க நேரிடும்" என்று கூறியிருக்கிறது அ. இ. கா. கமிட்டி.

அச்சு நாடுகள் முன்னேறி 'வருகின்றன; ரஷ்யாவில் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது; தூரக்கிழக்கிலும் வெகு சீக்கிரத்தில் ஜப்பான் மறுபடியும் தலைவிரித்தாட ஆரம்பிக்கலாம். இந்நிலையில் இந்திய மக்களிடையே கிளர்ச்சி என்றால் யுத்தப் போக்குக்கு குந்தகம்தான். இதை நினைத்து இந்திய மக்களை வாய் பொத்தியிருங்கள் என்றால் கேட்கமாட்டார்கள். இன்று இந்தியர்கள் இருக்கும் மன நிலைமையில் பிரிட்டிஷாருக்கு எதிரிடையாக ஒரு இயக்கம் ஆரம்பமாகுமானால் அதைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது சந்தேகம்தான்.

பிரிட்டிஷார் இதை நன்கு உணரவேண்டும். நாளைக்கு விட்டுக் கொடுக்க நேரிடுவதை இன்றைக்கே மனமாற அளித்துவிடுவது அரசியல் அறிவாகும்; ராஜிய தந்திரமும் கூட. இந்தியாவின் நிரந்தர நட்பைப் பெறுவதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம். பிரிட்டிஷார் கௌரவத்தைப் பொருட்படுத்தாமல் இந்தியாவை சமரசப்படுத்த உடனேயே முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# பொம்மலாட்டமா, பித்தலாட்டமா?

வைசிராய் நிர்வாக சபை ஒரு பொம்மலாட்டம். அதில் நடிக்கும் நபர்கள் தங்கள் சுய உணர்ச்சியில் நடிக்கவில்லை. சூத்திரதாரியான இந்தியா மந்திரி அமெரி இழுத்த இழுப்புப்படிதான் அவர்கள் நடிக்கிறார்கள். இதை இந்திய மக்கள் கண்டுகொண்டாங்கள். உண்மையை மறைப்பதற்காக சூத்திரக்காரர் இந்திய பொம்மைகள் சிலவற்றை அதில் சேர்த்துக்கொண்டார். எனினும், பொம்மை பொம்மைதான் என்றார்கள் இந்திய மஹா ஜனங்கள். "இது வெறும் பித்தலாட்டம். சூத்திரக்காரன் மறைந்தாலொழிய இதை நாங்கள் உண்மையான நாடகம் என்று நம்ப முடியாது, அதற்கு ஆதரவும் கொடுக்க முடியாது" என்று உரைத்துவிட்டார்கள்.

பார்த்தார்கள் பொம்மலாட்ட அதிகாரிகள். பொதுஜன ஆதரவுக்காகத்தானே இவ்வளவு ஆர்பாட்டம், அது கிட்டாமல் போனால் என்ன பயன் என்று யோசித்தார்கள். ஒரு விசித்திர வழி கண்டுபிடித்தார்கள். 'இந்திய பொம்மைகளை இன்னும் அதிகப்படுத்து, ஆனால் அவைகளுக்கு முக்கியத்வம் கொடுக்காமல் இதைச் செய்யவேண்டும்' என்றார்கள். இதன்படி இன்று இந்த ஆட்டத்தில் பதினைந்து பொம்மைகள் நடிக்கச் செய்யப்பட்டிருக்கின்றன. சூத்திரக்காரன் முக்கியமான பாத்திரங்களையெல்லாம் தன் இனத்தாரைக் கொண்டே நடிக்கச்செய்திருக்கிறான்.

ஒரு நாடகத்தில் பாத்திரங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைதான் இருக்கும். பின் எப்படி அதை அதிகப்படுத்துவது? சில்லரை பாத்திரங்களை இரட்டித்தும் கூறு போட்டும் பிரதான நடிகர்களுக்கு எவ்வித குந்தகமுமின்றி இது செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியர்கள் இதைக் கண்டுகொண்டார்கள். நாடக மேடைக்குச் சமீபத்திலிருந்தால் சூத்திரக்காரனின் கயிறும் பாத்திரங்களின் நிஜ ஸ்வரூபமும் புலப்படுவது இயல்பே. அதுவும் சந்தேகங்கொண்ட மக்களுக்கு இது விளங்காமல் போகுமா? இதை சூத்திரக்காரன் அறியாமலில்லை. பின் ஏன் இப்படிச் செய்கிறானென்றால் தூரத்திலுள்ள மக்களையாவது ஏமாற்றத்தான். தான் விற்க வந்த கிழ மாட்டை மாட்டுக்காரன் இளம் மாடு என்றால் அதன் அருகாமையிலுள்ளவன் அதன் பல்லைப் பிடித்துப் பார்த்தால் உண்மை விளங்கி விடுமல்லவா? இந்திய மக்கள் இதைச் செய்தார்கள். பற்கள் உண்மையைக் கூறிவிட்டன. கிழ மாடுதான்; உதவாக்கரை என்று உதறித் தள்ளப்பட்ட மாடு; செக்கு இழுக்கத்தான் லாயக்கு; வண்டியில் கட்டி முன்னுக்கிழுத்துச்செல்லக்கூடிய மாடு அல்ல என்று சொல்லிவிட்டனர்.

இதற்குத்தான் வைசிராய் நிர்வாகசபை விஸ்தரிப்பு என்று பெயர். "யுத்தம் நடத்துவதில் இந்தியப் பொதுஜன அபிப்பிராயத்தைச் சேர்த்துக்கொள்ளவும், யுத்த முயற்சியினால் ஏற்படும் அதிக வேலை பளுவை சமாளிப்பதின் பொருட்டும், இன்று அமுலிலிருந்துவரும் அரசியல் சட்ட வரம்பிற்குட்பட்டு இந்த விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்கிறது" என்று அரசாங்கத்தார் விடுத்த அறிக்கை ஒன்று கூறுகிறது. இதை சற்று ஆராய்வோம்.

"யுத்தம் நடத்துவதில் இந்திய பொதுஜன அபிப்பிராயத்தை சேர்த்துக்கொள்ள" என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருட்டு யுத்த காபினெட்டிலும், பஸிபிக் யுத்த கவுன்ஸிலும் இந்தியாவின் சார்பாக கலந்துகொள்ள ஸ்ரீ. ராமசாமி முதலியாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இந்நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் அல்லது முஸ்லிம் லீக் அல்லது ஹிந்து மஹாசபை இவைகளின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாகயிருப்பார்கள். அரசியல் விஷயங்களில் இந்திய அபிப்பிராயத்தை அறிய வேண்டுமென்றால் இவைகளின் தலைவர்களை கலந்துகொள்ள வேண்டியது அவசியம். இதில் அடிபடாத அபிப்பிராயம் இந்தியப் பொதுஜன அபிப்பிராயமாகாது. ஸ்ரீ ராமசாமி முதலியார் இந்த வகுப்புகளில் எதிலும் சேர்ந்தவரல்ல. ஆகையால் பொதுஜன அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல அவருக்கு யோக்யதை கிடையாது. பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதிநிதித்வம் வாய்ந்த சட்டசபை அங்கத்தினர்கள் ஒருவாறு பொதுஜன அபிப்பிராயத்தை பிரதிபலிக்கக்கூடும். ஜனநாயக

முறையில் ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியினரை பொதுத் தேர்தலில் எதிர்த்துநிற்கும் பொழுது தங்கள் தங்கள் திட்டங்களை எடுத்துக்கூறி மக்களின் ஆதரவைப் பெறுவது வழக்கம். அப்படித்தான் சென்ற சட்டசபை பொதுத் தேர்தல் நடந்தது. அதில் ஸ்ரீ ராமசாமி முதலியார் தோல்வியுற்றார். அதாவது அவரைப் பொதுமக்கள் தங்கள் சார்பாகப் பேச லாயக் கற்றவர் என்று கருதி ஒதுக்கியிருக்கவேண்டும். அல்லது அவர் திட்டம் அவர்களுக்கு ஏற்றதாகயிருந்திருக்காது. பின் அவர் ஏன் பொருக்கப்பட்டார்?

பிரிட்டிஷார் வைசிராய் சபை பொம்மலாட்டத்தில் சில பொம்மைகளை இந்தியத் தோற்றமுள்ளதாகச் செய்தார்களல்லவா? அப்படிப் பொறுக்கி எடுக்கப்பட்ட பொம்மையில் ஸ்ரீ ராமசாமி முதலியார் ஒருவர். இவர் சில ஆண்டுகளாக இந்திய அரசாங்க மேடையில் நடித்து வருகிறார். பிரிட்டிஷ் சூத்திரதாரி இழுத்த இழுப்புக்கு நன்றாக வளைந்து கொடுத்து வருகிறார்போலும்! ஆகையினால் இவரை யுத்த 'காபினெட்டில்' இந்தியாவின் சார்பாக வீற்றிருக்குமாறு செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தார் விடுத்துள்ள அறிக்கைப்படி, இவர் இந்திய பொதுஜனப் பிரதிநிதி அல்ல, அமெரி ஆட்டிவைக்கும் தலையாட்டி பொம்மையில் ஒருவர்.

"யுத்த முயற்சியினால் ஏற்படும் வேலைகளைச் சமாளிக்கவும்" இந்த விஸ்தரிப்பு என்று மற்றொரு காரணம் கூறப்பட்டதல்லவா? இதைச் சற்று கவனிப்போம். யுத்த நெருக்கடியினால் உண்மையிலேயே அரசாங்கத்துக்கு வேலை கடுமைதான். முக்கியமாக பாதுகாப்பு இலாகா, உள்நாட்டு இலாகா, பொக்கிஷ இலாகா இவைகளில் அதிகம். ஆனால் இவைகளில் ஒரு விஸ்தரிப்பும் கிடையாது. பாதுகாப்பு இலாகாவில் உதவாக்கரை விஷயங்களை எல்லாம் ஒருங்கே சேர்த்து அதை ஒரு புதிய மெம்பரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்தியர்கள் வசம் பாதுகாப்பு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று உலகத்திற்குப் பறை சாற்றவே. பாதுகாப்பு அங்கத்தினர் பதவி ஒரு சாயாக்கிரஹம். யுத்த மெம்பர் என்ன சொல்லுகிறாரோ, செய்கிறாரோ அதை ஒத்துத்தான் இவரும் பேசவேண்டும், செய்யவேண்டும். இதுதான் இன்று செய்யப்பட்டிருக்கும் செப்பிடு வித்தை.

மந்திரவாதி ஏமாற்றப் பார்ப்பது சகஜம் தான். ஆனால் அவன் வித்தை செய்வதில் கொஞ்சம் சாமர்த்தியம் காட்டவேண்டும். பெயரளவில்தான் அவன் மந்திரவாதி. உண்மையில் அவன் தந்திரவாதிதானே! அவன் உண்மையான வஸ்து ஒன்றை வேறொரு உருவெடுத்து விட்டதாகக் காட்டும் பொழுது, தான் ரகசியமாக அந்த வஸ்துவை மாற்றுவதை சபையிலுள்ளவர்கள் பார்க்காமல் செய்தானானால் அவனைக் கெட்டிக்காரன் என்று புகழ்ந்து விட்டுச் செல்லுகிறோம். ஆனால் அவன் செய்யும் சூழ்ச்சியை வெளிப்படையாக பிறர் அறியும்படி செய்வானாகில் அவனை என்னவென்று நினைப்போம்? படு முட்டாள் என்று சொல்லி நகைத்துக் கொண்டு ஒரு வெறுப்புடன் அப்புறம் செல்வோம். இன்று பிரிட்டிஷ் கவர்மெண்டார் விஸ்தரிப்பு விஷயத்தில் செய்யும் சூட்சி படு முட்டாளான மந்திரவாதியின் செயலுக்கு ஒத்ததாக இருக்கிறது.

பிரதிநிதித்வம் வாய்ந்த இந்தியர்களை வைசிராயின் சபையில் கலந்துகொள்ளும்படி செய்யவேண்டுமாயின் மத்திய சட்ட சபை அங்கத்தினர்களை சில பிரதிநிதிகளைப் பொருக்குமாறு ஏன் கேட்டிருக்கக் கூடாது? அவர்கள் ஜனப்பிரதிநிதிகள் தானே? அல்லது அவர்கள் பிரதிநிதித்வத்தை இழந்துவிட்டார்கள் என்றால் ஏன் அச்சபையின் ஆயுளை நீடித்துக்கொண்டே போகவேண்டும்?

இதையெல்லாம் யோசித்தால் உண்மையில் பிரிட்டிஷ் கவர்மெண்டார் வேண்டுவது பொதுஜனப் பிரதிநிதிகளல்ல, இந்தியப் போர்வையைப் போர்த்துக்கொண்ட பிரிட்டிஷ் தாஸர்கள். தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களைப் பார்க்குங்கால் அவர்களுக்கு பொதுஜனத்தொடர்பு எவ்விதத்திலும் இல்லை என்பது நன்கு விளங்கும். அவர்கள் பிரபலஸ்தர்கள் தான்; அவர்களில் சிலர் திறமை வாய்ந்தவர்களும் கூட. ஆனால் மக்களின் உள்ளத்தை உணராதவர்கள்; அவர்களின் சுதந்திர உணர்ச்சியில் யாதொரு அனுதாபமும் கொள்ளாதவர்கள். இந்தியாவுக்கு எதிரித் தாக்குதல் அபாயம் நெருங்கியிருக்கும் இத் தருணத்திலும் இத்தகைய தலையாட்டிகள் பதவியில் வீற்றிருப்பது இந்தியாவின் துர்பாக்கியம். இவர்களில் சிலர் சுதந்திரமாக காரியங்களைச்செய்ய எண்ணலாம். ஆனால் பொதுஜன

ஆதாவின்மையால் பிரிட்டிஷ் எஃகு வசம்பிற்குள் அகப்பட்ட பிறகு சூத்திரதாரி சொற்படி தான் அவர்கள் நடிக்க நேரிடும்.

பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்கு தூரக்கிழக்கில் இவ்வளவு தோல்விகள் எற்பட்டும் புத்தி வரவில்லையே என்று நாம் வருந்துகிறோம். சூத்திரக்கயிற்றை இந்தியத் தலைவர்களிடத்தில் கொடுத்தாலொழிய யுத்த நிலைமையைச் சமாளிக்க முடியாது. வைசிராய் சபை விஸ்தரிப்பினால் இந்தியாவை யுத்த முயற்சியில் ஈடுபடச் செய்யமுடியாது. அதிகாரம் கை மாறவேண்டும். இல்லையேல் கூழுக்கும் ஆசைப்பட்டு மீசைக்கும் ஆசைப்பட்டவன் கதிதான். இந்த விபரீத புத்தியை பிரிட்டன் விடுக்குமா என்ற சந்தேகம்தான் நமக்கு?

நியூ ஸ்டேட்ஸ்மென் என்ற பிரபலபிரிட்டிஷ் பத்திரிகை கிரிப்ஸ் தூது முறிந்ததைக் குறித்து ஒரு தலையங்கம் எழுதிற்று. அதில் இந்தியாவின் நிலைமையைப் பரிசிலனை செய்து பின் வரும் முடிவு கட்டிற்று:—

"எங்கள் அபிப்பிராயத்தில் இந்தியாவுக்கு வேண்டியது நீண்ட சட்டதிட்ட முறைகள் கொண்ட வைசிராய் நிர்வாக சபையல்ல. சக்திவாய்ந்த மண்டை கொழுத்த பொதுப் பாதுகாப்பு கமிட்டிதான் அதற்குத் தேவை. நாட்டில் தலைமை வகித்துச் சமாளிக்க அக்கமிட்டி சக்திவாய்ந்ததாக இருக்கவேண்டும். நாட்டினரை உற்சாக மூட்டி எழுப்பும் செல்வாக்கையும் அது பெற்றிருத்தல் அவசியம். நாம் இந்திய சிறுபான்மையோரின் உரிமைகளைக் காப்பாற்றித் தீருவோம் என்று வற்புறுத்திக் கூறுவதைக் கண்டு இந்திய மக்கள் நம் உரிமைகளையும் என்றாவது விட்டுக்கொடுப்போமா என்று சந்தேகிக்கிறார்கள். முஸ்லிம் சிறுபான்மையோருக்கு நம்முடைய பாதுகாப்பு அனாவசியம். சேனைப்படையில் அவ்வகுப்பினர் அதிகம். காங்கிரஸில் தலைமை வகிப்பது ஒரு முஸ்லிம் மதத் தலைவர். பிரபலமான முக்கிய இந்தியக் கக்ஷிகளின் நிர்வாகிகள் அடங்கிய கூட்டு மந்திரி சபைதான் இன்று இந்தியாவில் யுத்த காலத்தில் அமைக்கக்கூடிய ஜனநாயகம். ஜின்னா இதில் கலந்துகொள்ள மறுப்பாரானால் அது வருந்தத் தக்கதே. ஆனால் பஞ்சாப், வங்காளம், ஸிந்து முதலிய மாகாண பிரதம மந்திரிகள், இன்னும் அநேக பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் தலைவர்கள் இதில் கலந்துகொண்டு ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்களை உபயோகித்துக்கொள்ளலாம். பிரிட்டிஷ் கவர்மெண்டார் தைரியமாக தேசீய அரசாங்கத்தை உடனேயே ஏற்படுத்தவேண்டும். இந்தியா ஆபீஸைத்துலைத்தெரியவேண்டும்."

★

# எகிப்து நடுநிலைமை வகிப்பதேன்?

ஜர்மானியர்கள் எகிப்திற்குள் புகுந்து முன்னேறி வருகிறார்கள். ஆயினும், எகிப்து அரசாங்கம் நடுநிலைமை வகித்து வருகிறது. இன்று அந் நாட்டில் ஜர்மானியர்களை எதிர்த்துப் போர் புரிவது பிரிட்டிஷ் படைதான். இதைக் கண்டு நாம் ஆச்சரியப்படக்கூடும். எகிப்தில் தேசிய அரசாங்கம் தான் நடைபெறுகிறது. மக்கள் சுதந்திர வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். அப்படியிருந்தும் எகிப்து துருப்புகள் பிரிட்டனுடன் கூடி எதிரியை விரட்ட முன் வரவில்லை. இதற்குக் காரணமென்ன? எகிப்து மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி அற்றுப்போய்விட்டதா? அல்லது அவர்கள் அச்சு நாடுகளுடன் ஐக்கியப்பட விரும்பி இப்படி அசிரத்தையாய் இருக்கிறார்களா?

இல்லவே இல்லை. இந்தியாவில் ஜப்பானியப் படையெடுப்பு இன்றோ நாளையோ என்று இருக்கிறதல்லவா? ஆயினும், இந்திய மக்கள் முழு மனதுடன் யுத்தத்தில் ஈடுபடச் சம்மதியாதிருப்பதேன்? இதற்கு பிரிட்டிஷார் தான் பொறுப்பாளி என்ற பதில் உடனே வரும். அதே காரணம்தான் எகிப்து மக்கள் இன்று யுத்தத்தில் கலந்துகொள்ளாததற்கும். இதை சற்று ஆராய்வோம்.

உயர்தர எண்ணெ உற்பத்தியாகும் மூலஸ்தானங்கள் மத்தியக்கிழக்கில் அநேகம் உள்

என. அவைகளிலிருந்து சுமார் இருநூறு லக்ஷம் டன் எண்ணெய் ஒரு வருஷத்தில் எடுக்கப்படுகின்றது. ஈரானில் மட்டும் வருஷத்திற்கு நூறு லக்ஷம் டன்னும், ஈராக்கில் நாற்பது லக்ஷம் டன்னும் எடுக்கப்படுகின்றன. பாரஸீக வளைகுடாவிலுள்ள ஆபடான் என்னும் துறைமுகத்தில் உலகத்திலேயே பிரம்மாண்டமான எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஸூயஸ் துறைமுகத்தில் பிரிட்டிஷ் கடற்படைக்கு வேண்டிய பாதியளவு எண்ணெய் பிரம்மாண்டமான டாங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. மாசூல் என்ற எண்ணெய் உற்பத்தி ஸ்தலத்திலிருந்து குழாய்களின் வழியாக 'ஹெய்பா' என்னும் பாலஸ்தீன நகருக்கு எண்ணெய் கொண்டு வரப்பட்டு அங்கு வருஷம் ஒன்றுக்கு 20 லக்ஷம் டன் சுத்தம் செய்யப்படுகிறது. பாரஸீக வளைகுடாக் கடலிலுள்ள துறைமுகங்களிலிருந்துதான் மத்தியக் கிழக்குக்கு 'ஸப்ளை' வருகிறது. இந்த எண்ணெயை அங்கிருந்து வெளி தேசங்களுக்கு ஏற்றிச்செல்ல பிரத்யேகமாக அமைக்கப்பட்ட 'டாங்கர்'கள் தேவை. இவை பிரிட்டனுக்கு ஏராளமாக உண்டு. அவைகள் ஸூயஸ் கால்வாய் வழியாக தூரக்கிழக்கில் உற்பத்தியாகும் எண்ணெயை ஏற்றிச்செல்வது வழக்கம். ஆகையால்தான் எகிப்து தேசத்திலுள்ள அக் கால்வாயை இன்று ஹிட்லர் தாக்க முற்பட்டிருக்கிறார்.

மேலும், மத்தியக்கிழக்கிலுள்ள நாடுகளனைத்தும் முஸ்லீம் நாடுகள். அவைகளை பிரிட்டனுக்கு விரோதமாகக் கிளப்பி, அந்நாடுகளைக் கைப்பற்றும் பொருட்டு ஹிட்லர் நெடுநாளாக பிரசாரம் செய்து வருகிறார். பாலஸ்தீனம் அந்நாடுகளில் ஒன்று. அதை பிரிட்டிஷார் தங்கள் கண்காணிப்பு நாடாக (protectorate) நடத்தி வருகிறார்கள். அந்நாட்டில்தான் முஸ்லிம் மதம், யூதர்களின் மதம், கிருஸ்துவர்களின் மதம் எல்லாம் உதித்தன. ஆகையினால், இம்மதத்தினர்களனைவரும் அதைத் தங்கள் புண்ணிய பூமியாகக் கருதுகின்றனர். அந்நாட்டில் யூதர்களும் அராபியர்களும் அதிகம். 1914ம் வருஷத்திற்கு முன்பு பாலெஸ்தீனத்தில் யாதொரு மத அல்லது இனக்கிளர்ச்சி கிடையாது. சென்ற உலக மகா யுத்த சமயத்தில் அராபியர்கள் நிறைந்த மத்தியக்கிழக்கு நாடுகள் அனைத்தும் துருக்கி சாம்ராஜ்யத்தின்கீழ் இருந்துவந்தன. சில அராபியர்கள் அவ்வாதிக்கத்தினின்று பிரிந்துபோக வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தனர். இதைப் பயன்படுத்திக் கொண்டு சென்ற யுத்தத்தில் நேச தேசங்கள் அவர்களுடைய உதவியை வேண்டி அவர்களைக் கலகம் செய்யுமாறு தூண்டின. யுத்த இறுதியில் அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. பாலஸ்தீனத்திலுள்ள யூதர்களும் நேச நாடுகளுக்கு உதவி புரிந்தார்கள்.

யுத்த முடிவில் பிரிட்டிஷார் விடுத்த 'பால்பர் அறிக்கை'யின் படி பாலஸ்தீனம் யூதர்களின் தாய் நாடு என்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைக் கண்டதும் முஸ்லிம்களுக்கு மனக் கலக்கம் ஏற்பட்டது. 1920ம் ஆண்டில் இது காரணமாக பாலஸ்தீனத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டு ரத்த வெள்ளம் ஓடிற்று. முஸ்லிம்களுக்குத் தலைமை வகித்து இக்கிளர்ச்சியை நடத்தியவர் ஜருஸலத்தின் கிராண்ட் மப்டி, ஹாஜ் அமீன் எல் ஹூஸேன் என்ற முஸ்லீம் பெரியார். அவர் சொற்படி பிரிட்டிஷ், பிரஞ்சு ஆதிக்கங்களின் கீழுள்ள முஸ்லிம்கள் 'ஹோம்' கவர்ன்மெண்டாருக்கு ஒரு யாதாஸ்து அனுப்பினார்கள். யூதர்களுக்கு பாலஸ்தீனத்தை தாய் நாடு என ஒப்புக்கொண்ட 'பால்பர் அறிக்கை'யை உடனே வாபீஸ் வாங்காவிட்டால் இஸ்லாமிய மதத்தினரின் உதவி இந்த யுத்தத்தில் அவர்களுக்குக் கிட்டாது என்று அதில் தெளிவு படுத்தப்பட்டது. கலவரம் ஏற்பட்டு நிலைமை வெகு குழப்பமாக நெடுநாள் வரை இருந்து வந்தது. ஐரோப்பாவிலிருந்து ஹிட்லரால் விரட்டியடிக்கப்பட்ட யூதர்கள் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறினார்கள். அராபியர்களின் புரட்சியை பிரிட்டிஷார் பலாத்காரத்தினால் அடக்கினார்கள். அவ்வியக்கத்தின் தலைவரான கிராண்ட் மப்டியை அந்நாட்டிற்குள் நுழையக்கூடாதென தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஹிட்லர் இந்த யுத்தத்திற்கு ஆயத்தமாகி வருகிறார் என்பதைக் கண்டதும் தூரக்கிழக்கு நிலைமையை ஒருவாறு சீர்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் பிரிட்டிஷாருக்குப் பிறந்தது. எனவே, பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் 1937ல் அராபியர்களைத் திருப்தி செய்ய முன் வந்தார். ஆயினும் அவர்கள் நிம்மதியடையவில்லை. யுத்த இறுதியில் அமெரிக்க யூதர்கள் சொற்படிதான் பிரிட்டன் நடிக்க நேரிடும்; ஆகையால் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் சலுகை காட்டி முஸ்லிம்களை விட்டுக்

கொடுத்து விடுவார்கள் என்று அராபியர்கள் எண்ணி வருகிறார்கள். இவ்விஷயத்தில் முஸ்லிம்களுக்கு பிரிட்டிஷாரிடமுள்ள அதிருப்தி இன்னும் மறையவில்லை. மேலும், கிராண்ட் மப்டியின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை வாபீஸ் செய்யப்படமாட்டாது என்று கூறப்பட்டது. இதற்குக் காரணம் அவர் கொலை, கொள்ளை முதலிய குற்றங்கள் செய்திருக்கிறாரென்றும், அவைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் மன்னிக்க முடியாதென்றும் சொல்லப்பட்டது. 25 கோடி முஸ்லிம்கள் அவரைத் தெய்வமாகக் கருதி வருகிறார்கள். பாலஸ்தீனப் பிரச்னை அவர்கள் மனதில் உறுத்திக் கொண்டிருக்குங்கால் அந்த இயக்கத்தின் தலைவர் நாட்டினின்றும் தூரத்தியடிக்கப்பட்டு பிரிட்டிஷ் பிரசாரத்தில் தூற்றப்பட்டு வருகிறாரே என்ற ஆத்திரம் அவர்களிடையே இருந்துவருகிறது.

இந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்களின் உதவியினால் பிரிட்டனை மத்தியக்கிழக்கு நாடுகளிலிருந்தே விரட்டியடித்துவிடலாம் என்ற எண்ணம் ஹிட்லருக்கு. ஈராக்கிலுள்ள எண்ணை உற்பத்தி ஸ்தலங்களை எளிதில் பிடித்துவிடலாமென்று திட்டம் போட்டுக் கொண்டு இன்று ஸூயஸ் கால்வாய்க்கருகே போரைத் துவக்கியிருக்கிறார் ஹிட்லர்.

மேலும், ஸூயஸ் கால்வாய் பிரிட்டனின் உயிர்நாடி என்று கூறுவதுண்டு. ஆகையால் அதைப் பிடித்தால் பிரிட்டனுடைய மதிப்பிற்கே ஒரு பெருத்த ஹானியை உண்டுபண்ணலாமென்ற எண்ணமும் ஹிட்லருக்குண்டு. உண்மையில் இன்று ஸூயஸ் கால்வாய் அவ்வளவு முக்கியமானதல்ல. இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களிலிருந்து கிளம்பும் பிரிட்டிஷ் கப்பல்கள் முழுவதும் ஆப்ரிக்காவிலுள்ள நன்நம்பிக்கை முனையைச் சுற்றித்தான் செல்ல வேண்டியிருக்கிறது. மத்தியதரைக் கடல் வழியாக அநேகமாக ஒன்றும் எடுத்துச் செல்லப்படுவதில்லை. ஆயினும் ஸூயஸ் கால்வாய் அச்சு நாடுகள் வசம் மாறிவிட்டால் அராபிய உலகத்தில் ஒரு மனமாற்றம் உண்டாகக்கூடும்.

இந்த ஸூயஸ் கால்வாய் எகிப்தில் இருக்கிறது. பிரிட்டனுக்கும் அந்நாட்டு அரசாங்கத்தாருக்கும் எவ்வித தொடர்பு இருக்கிறதென்று ஆராய்வோம். எகிப்தின் அரசர், பரூக், முஸ்லிம் அரசர்களுக்குள் மிகச் செல்வாக்குள்ளவர். முஸ்லிம் மக்களை பிரிட்டனுக்கு எதிரிடையாக ஹிட்லர் கிளப்பிவிட முயன்று வருவதினால் இம்மன்னர் பிரிட்டனிடம் கொண்டுள்ள மனநிலை மிக முக்கியமானதாகும். எகிப்து நாட்டிலுள்ள ஸூயஸ் கால்வாயை பிரிட்டன் தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொண்டிருப்பதைப்பற்றி இம்மன்னர் என்ன அபிப்ராயம் கொண்டுள்ளார் என்பதையறிந்தால் அவர் மன நிலை நமக்குத் தெளிவாகும். இதற்குப் பழைய சரித்திரத்தைச் சற்றுப் புரட்டிப்பார்க்கவேண்டும்.

முதன் முதலாக 1882ல் பிரிட்டன் எகிப்தை ஆக்கிரமித்துக்கொண்டது. 1914ல் அதன் ஆதிக்கம் ஒரு கண்காணிப்பாக (Protectorate) மாறிற்று. இந்த இரண்டு ஆதிக்கத்திலும் ஸூயஸ் கால்வாயை பிரிட்டனே தன் ஆளுகைக்குள்ளாக வைத்து வந்தது. 1922ல் எகிப்துக்கு சுதந்திரமளிப்பதாக பிரிட்டன் ஓர் அறிக்கை விடுத்தது. அதில்கண்ட ஒரு ஷரத்தின்படி சமரஸப் பேச்சின்பேரிலும் இருதரப்பினரும் ஸ்நேக பாவத்தில் விட்டுக் கொடுப்பதின்பேரிலும் பிறகு சில உடன்படிக்கைகள் செய்துகொள்ளும்வரை ஸூயஸ்கால்வாய் பிரதேசம் பிரிட்டிஷார் ஆதிக்கத்திலேயே இருந்துவருமென்று குறிப்பிடப்பட்டது. இந்த சமரஸப்பேச்சு ஒரு முடிவுக்கு வர 1922லிருந்து 1936வரை ஆயிற்று. இவ்வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஆங்கிலோ—எகிப்து உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. அதன்படி:

1. பிரிட்டிஷ் ஆகாயப்படைக்கு எகிப்து முழுமையிலும் தடையின்றி சுற்றித்திரிய உரிமையுண்டு.

2. மத்தியதரைக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற்படை அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தை சில குறிப்பிட்ட வருஷங்கள்வரை, தானே உபயோகித்துக்கொள்ளும்.

3. எகிப்திலுள்ள பிரிட்டிஷ் சேனை சமாதான காலத்தில் ஸூயஸ் கால்வாய்ப் பிரதேசத்தில் இருந்துவரும். ஆனால், யுத்தகாலத்தில் அது எகிப்து முழுமையிலும் பரவிச்செல்ல அதற்குப் போக்கு வரத்துச் சாதனங்களை எகிப்து அரசாங்கம் அளிக்கவேண்டும்.

ஸூயஸ் கால்வாயைக் காப்பாற்றுவது பிரிட்டனுக்கு இன்றியமையாதது என்று கருதப்பட்டாலும் அதற்கு எகிப்து அரசாங்கம் உதவவேண்டுமென்று பிரிட்டன்

வேண்டவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் போக்குவரத்து சாதனங்களைக் காப்பாற்ற எகிப்துப் பிரதேசத்தில் இட வசதியைத்தான் பிரிட்டன் கேட்டது. உடன்படிக்கையின் ஏழாவது ஷரா இதை ஸ்பஷ்டமாக விளக்குகிறது. இதுதான் பிரிட்டிஷார் எகிப்து நாட்டிற்கு முழு சுதந்திரம் அளிப்பதற்காகக் கேட்ட கைம்மாறு. யுத்த காலங்களில் எகிப்து சண்டையிலீடுபடாத நண்பராக இருந்து உதவினால் போதுமென்றுதான் பிரிட்டன் உடன்படிக்கையை வகுத்தது. எகிப்து தேசத்தில் கேடிவ் இஸ்மெயில் அரசாண்ட காலத்தில் (1863—1879) ஒரு பிரபலமான படை இருந்தது. அமெரிக்க நிபுணர்கள் உதவியினால் தயாரிக்கப்பட்டு வெகு திறமை வாய்ந்ததாக இருந்தது. அது மத்திய ஆப்பிரிக்கா வரை படையெடுத்துச் சென்று முஸ்லிம் கொடியை அங்கெல்லாம் நிலைநாட்டிற்று. இதைக்கண்டு பொறாமைகொண்டு ஐரோப்பிய நாடுகள் சூழ்ச்சிசெய்து மன்னர் கேடிவ் இஸ்மெயிலை ராஜ்யத்தினின்று ஓடச் செய்தன. அவ்வரசர் ஓடியபின் பிரான்ஸும் பிரிட்டனும் ஒன்றுகூடி எகிப்து சேனையை அடியோடு அழிக்க முற்பட்டன. ஸூடான் பிரதேசத்திலிருந்து எகிப்து பின்வாங்க நேரிட்டது. பிறகு அதன் சேனை கிச்னரால் முறியடிக்கப்பட்டு அடியோடு நாசமாயிற்று. அன்றிலிருந்து எகிப்துக்கு பிரத்யேகமாக நல்ல சேனைப்படையில்லாமலேயே செய்யப்பட்டு வந்தது. 1936ல் ஆங்கிலோ—எகிப்து உடன்படிக்கை ஏற்பட்ட பொழுது எகிப்துக்கு நவீன சாதனங்களுடன் கூடிய சேனை எதுவும் கிடையாது. ஆகையினால்தான் பிரிட்டன், தான் செய்துகொண்ட உடன்படிக்கையில் எகிப்தின் உதவியை யுத்த காலங்களில் நாடவில்லை. இன்று எகிப்து ஒரு படை திரட்டி பிரிட்டனுக்கு உதவ இயலாதிருக்கிறதென்றால் அதற்குப் பொறுப்பாளி பிரிட்டன்தான்.

இந்த யுத்தம் மூண்டதிலிருந்து மன்னர் பரூக் பிரிட்டிஷாருக்கு உடன்படிக்கையின்படி என்ன வசதிகள் அளிக்க வேண்டுமோ அவையனைத்தையும் அளித்து வருகிறார். மன்னர் பரூக் இன்று பிரிட்டனுடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு கிளப்புவாரானால் அச்சு நாடுகளுக்கு அபரிமிதமான பலம் ஏற்பட்டுவிடும். ஸிரியா, ஈராக், ஸாடி அரேபியா இம்முஸ்லிம் நாடுகளெல்லாம் அவர் பக்கம் சாயும். அப்படியில்லாமல் பிரிட்டன் பரூக் மன்னரை தங்களுடன் தீவிரமாக யுத்தத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்று வற்புறுத்தினாலும் அவர் பிரஜைகள் முஸ்லிம்களுக்குப் புண்ணிய பூமியான பாலஸ்தீனத்தை யூதர்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்த பிரிட்டனுக்காக சண்டையில் தங்களை ஈடுபடச் செய்வதை தங்கள் முழு பலத்துடன் எதிர்ப்பார்கள். இதனால் எகிப்தில் கலவரமும் புரட்சியுமேற்பட்டு ஸூயஸ் கால்வாய்க்கே பந்தோபஸ்து குறையும். ஆகையினால்தான் ஜர்மானியர்கள் எகிப்துப் பிரதேசத்தில் புகுந்து முன்னேறிக்கொண்டிருந்தபோதிலும் எகிப்து அரசாங்கம் சண்டையிலீடுபடாதிருப்பது. மன்னர் பரூக் ஆங்கிலோ-எகிப்து உடன்படிக்கையைக் காப்பாற்றித்தரவே "மயில் வாஹனத்திலுள்ள சுப்ரமணியர்" போல் நடித்து வர வேண்டியிருக்கிறது. அந்நாட்டில் சிலர் அச்சுநாடுகளுக்குள்ள யூதப் பகையை பயன்படுத்திக்கொண்டு அவர்களுடன் ஒத்துழைத்து பாலஸ்தீனத்திலிருந்து யூதர்களை விரட்டியடிக்க வேண்டுமென்று வற்புறுத்தலாம். மேலும் இன்று கிராண்ட்மப்டியானவர் ஹிட்லருடன் இருந்து வருகிறார். ஆனால், மன்னர் பரூக் இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் தன் கடமையைச் செய்து வருவது பிரிட்டனுக்கு பெருத்த நன்மை செய்வதாகும்.

மேலும் 1939ல் ஆங்கிலோ—எகிப்து ஒத்துழைப்புப் பத்திரத்தை (Anglo Egyption Accord) வகுத்த பிரிட்டிஷ் ராணுவ நிபுணர்கள் எகிப்து நாட்டினரின் சுயமரியாதைக்கு மாறாக, வேண்டுமென்றே, அதை யுத்தத்தில் தீவிர உதவி செய்யும் நாடாகச் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. ஸூயஸ் கால்வாய் பிரதேசத்தைக் காக்கும் பொறுப்பை பிரிட்டிஷாரே பிரத்தியேகமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் எகிப்துக்கு அப்பொறுப்பில் பங்கு கொடுப்பது தவறென்றும் கருதினார்கள்.

இன்று எகிப்து அரசாங்கம் பிரிட்டிஷாருக்குக் காட்டிவரும் நட்பு யுத்தப்போக்குக்கு இன்றியமையாதது. அவர்கள் முரண்டிக்கொண்டால் மத்தியக்கிழக்கிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் அவர்களைப் பின்பற்றி முரண்டும். எகிப்து அரசாங்கம் சண்டையிலீடுபடவில்லையே என்று அவர்களிடம் குற்றம் சாட்டாமல் அவர்களளித்துவரும் நட்புக்கு பிரிட்டன் என்றும் நன்றியுள்ளதாக இருக்கவேண்டும்.

# கதம்பம்

## மாரடைப்பு!

இந்தியாவிலும் சட்டசபைகளிருந்ததாகப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம்! சிலர் பார்த்திருக்கலாம்! ஆனால் யுத்தம் ஆரம்பித்தவுடன் இந்த சட்டசபைகளுக்கு 'மாரடைப்பு' ஏற்பட்டு பேச்சு மூச்சு இல்லாமல் சவம்போல் கிடக்கின்றன! சட்டசபை கட்டிடங்களில் வௌவால்கள், பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்களும் பேரன் பேத்திகள் எடுத்துக் கொண்டு சுகமாக வாழ்கின்றன. பொதுஜன அபிப்பிராயத்தை ஒத்து நடந்தால் யுத்தத்தில் வெற்றிபெறுவது முடியாதென்பதாக இந்திய சர்க்கார் எண்ணங்கொண்டுள்ளார்கள். வைசிராயும், கவர்னர்களும் சர்வாதிகாரிகளாகிவிட்டார்கள். ஜனநாயக தத்துவங்களெல்லாம் காற்றில் பறந்துவிட்டன. சட்டசபைகளுக்கு உயிர் இருந்துவருவதுபோல் வெளி உலகத்தாருக்குக்காண்பிக்க சட்டசபைகளின் ஆயுட்காலம் நினைத்தவாறு நீடிக்கப்பட்டு வருகிறது. தேர்தல்கள் நடத்தினால் ஆபத்து வந்துவிடும் என்றெண்ணி தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை.

சீமையில் என்ன நடக்கிறது கவனிப்போம். பார்லிமெண்டு கூட்டம் யுத்தகாலத்தில்தான் அவசியமென்றெண்ணி நினைத்தமாத்திரத்தில் கூட்டப்படுகிறது. பிரதம மந்திரியை ஜனப் பிரதிநிதிகள் கசக்கிப் பிழிகிறார்கள். கேள்விகள் கேட்டு பிராணனை வாங்குகிறார்கள். குறை கூறுகிறார்கள். யோசனை சொல்லுகிறார்கள். எல்லாம் தேச நலத்தை முன்னிட்டே. பார்லிமெண்டின் ஆதாவு அன்னியில் பிரதம மந்திரி சர்ச்சில் துரை யாதொன்றும் செய்ய முடிகிறதில்லை. சர்ச்சிலும் பொதுஜன அபிப்பிராயத்துக்கு பயப்படுகிறார். பொதுஜன ஆதரவை பலவகையிலும் வேண்டுகிறார்.

சமீபத்தில் விண்ஸர் (Windsor) என்ற தொகுதிக்கு உபதேர்தல் நடந்தது. தலை போகிற யுத்த நெருக்கடியிலும் தேர்தல் நடத்தப்பட்டதென்றால் ஆச்சரியமல்லவா?

ஆனால் இந்த தேர்தலில் ஒரு புது விசேஷம். சர்க்கார் கட்சியினர் ஒருவரும், தனி நபர் ஒருவரும் போட்டியிட்டார்கள். சர்க்கார் கட்சி நபருக்கு சர்க்காரின் பக்கபலம் அபரிமிதம். சர்ச்சில் துரை உள்பட எல்லா மந்திரிகளும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். கடைசியில் சர்க்கார் கட்சி நபர் ஜயித்தாலும் ஓட்டுவித்யாசம் மிகச்சொற்பமே.

யுத்தத்தின் பெயரால் சாக்குப் போக்குகள் சொல்லி பொதுஜன அபிப்பிராயத்தை இந்தியாவில் புறக்கணிப்பதுபோல் சீமையில் முடியாது என்பது விளங்கவில்லையா? காரணம்? இந்தியா அடிமை நாடு, இங்கிலாந்து..........!

## ஒரு கதை

ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒரு தெருவில் நெருப்புப்பற்றி சில வீடுகள் எரிந்துகொண்டிருந்தன. அந்தத் தெருவில் குடியிருந்த சர்க்கார் அதிகாரி ஒருவன், மேல் அதிகாரிக்கு கடிதம் எழுதி தபாலில் சேர்த்தான். மேல் அதிகாரி இரண்டு தினங்கள் கழித்து தபாலைப் பார்த்துவிட்டு இன்னொரு அதிகாரிக்கு அனுப்பிவைத்தார். அந்த அதிகாரி 'விஷயம் பூர்வமாக அறிவிக்கவும்' என்று 'நோட்' எழுதி தானே அதை வைத்துக் கொண்டுவிட்டார்.

1942ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் 'ஆகார உற்பத்திக் கூட்டம்' (Food Production Conference) மத்திய சர்க்காரால் கூட்டப்பட்டது. இந்தவிதமான கூட்டத்தாலும், கமிட்டியாலும் உருப்படக்கூடிய காரியம் எதுவும் நடக்காது என்று நாம் பலமுறை கூறியிருக்கின்றோம். 'ஆகார உற்பத்திக் கூட்டம்' என்ன செய்ததென்று நினைக்கிறீர்கள்? ஆகார உற்பத்திக்கு வழி தேடுவதை விட்டு 'ஆகார ஆலோசனை மத்திய கவுன்சில்' (Central Food Advisory Council) என்ற

ஒரு கமிட்டியை உற்பத்தி செய்யத் தீர்மானித்தது! இது சென்ற ஏப்ரல் மாதத்தில்.

திடீரென்று ஜுலை மாதத்தில் இதைப்பற்றி அரசாங்கத்துக்கு மறுபடி ஞாபகம் வந்தது. இப்பொழுதாவது ஏதாவது ஆகார உற்பத்தியைப்பற்றி செய்தார்களா? முன்பு ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்திய கமிட்டிக்கு இப்பொழுது மெம்பர்களை பொறுக்கியிருக்கிறார்கள்; அவ்வளவுதான்! இந்த கமிட்டி யோசனை சொல்ல வேண்டிய (செய்ய வேண்டியதல்ல!) வேலைகளைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகாரங்களைப்பற்றிய எல்லா சமாசாரங்களையும் கமிட்டி தெரிந்துகொள்ளுமாம். ஒரு 'பிளான்' போடுவதைப்பற்றி யோசிக்குமாம். யோசனையும் அதிகாரிகளுக்குச் சொல்லுமாம்.

இந்த கமிட்டி படித்து, யோசித்து, முடிவு சொல்லி, அதை சர்க்கார் கவனித்து, ஒரு முடிவிற்கு வந்து ஏதாவது காரியமும் நடத்த உத்தேசிக்கும்போது அநேகமாக யுத்தம் முடிந்துவிடலாம். 'யுத்தம் முடிந்து விட்டபடியால் கவனிக்கவேண்டிய அவசியமில்லை' என்று சர்க்காரும் பழையபடி சும்மாயிருந்துவிடலாம்! மக்களின் தலைவர்கள் பதவியில் இல்லாவிட்டால் இவ்விதமாய்த்தான் காரியங்கள் நடக்கும் என்பதை சிந்தித்து உணருங்கள்.

## தலைகீழ்ப் பாடம்

'கிரிப்ஸ் தூது' முறிந்தவுடன் அடக்குமுறை இந்தியாவில் தாண்டவமாடுமென்று பலர் எதிர்பார்த்தார்கள். அது சரியாய்ப் போய்விட்டது. பத்திரிகைகளின் சுதந்திரம் பலவிதமாய்ப் பறிக்கப்படுகின்றது. ஜாமீன்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஒரிஸா மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்தவர் இன்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரால் கைதியாக்கப்பட்டு ஒரு 'பஸ்' வண்டியில் ஏற்றிச் செல்லப்படுகிறார்.

இந்தத் திருவிளையாடல்களெல்லாம், யுத்த முஸ்திப்புகளெல்லாம், இந்தியாவின் பாதுகாப்பு நிமித்தம் செய்யப்படுவதாகச் சொல்வதைக்கண்டு சிரிப்பதா, அழுவதா என்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

இந்தியப் பாதுகாப்புக்குச் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. படைகள் திரட்டுவது, ஆகாய விமானங்கள் தயாரிப்பது, டாங்குகளை உற்பத்தி செய்வது இவைகள் எல்லாவற்றையும் விட தலைவர்களை கைது செய்வதும், பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வதும்தான் இந்தியப் பாதுகாப்புக்குச் செய்ய வேண்டிய முக்கிய வேலைகள் என்று அரசாங்கம் நினைப்பதைக் காலத்தின்கூற்று என்றுதான் சொல்லவேண்டும்.

யுத்தத்தில் வெற்றிபெற மக்களின் ஆதரவும், ஊக்கமும், நல்லெண்ண மனோபாவமும் அவசியமென்று ராணுவ நிபுணர்களும் எண்ணுகிறார்கள். அதை வளர்க்க சுதந்திர நாடுகளில் வெகுவாகப் பாடுபடுகிறார்கள்.

இந்தியாவில் நடப்பது தலைகீழ்ப்பாடமாக இருக்கின்றது. இதை சிந்தித்து உணர அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

## சனியும் சுக்கிரனும்

"பிறந்தால் வெள்ளைக்காரனாகப் பிறக்க வேண்டும், சார்" என்று சொல்லி நுழைந்தார், ஸ்ரீமான் பொதுஜனம். விஷயத்தை விளங்கச் சொல்லுமாறு வேண்ட, அவர் 'அளந்ததாவது:

"யுத்தத்தின் பெயரால் புதிய புதிய உத்தியோகங்கள் சிருஷ்டி செய்யப்படுகின்றன. யாருக்கு? உம்மையும் நம்மையும் உத்தேசித்து அல்ல. நாம் எல்லோரும் ரூ. 18 சம்பளப் பேர்வழிகள். வெள்ளைக்காரர்களை உத்தேசித்துத்தான். பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் நம்மவர்கள் உயிருக்கு மன்றாடிக்கொண்டு ஓடி வந்து சேர்ந்தார்கள். வெள்ளைக்காரர்களும் வந்து சேர்ந்தார்கள். நம்மவர்களுக்கு எங்கு சென்றாலும் சனி பின்தொடர்ந்து வருகிறது. வெள்ளைக்காரர்களுக்கு சுக்ர தசை அடித்துக்கொண்டே வருகிறது. நம்மவர்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு வந்தார்கள். வெள்ளைக்காரர்கள் சீமையிலிருந்து யாதொன்றும் கொண்டு வராமல் அகப்பட்டதைச் சுருட்ட வந்தவர்களாகையால் அவர்களுக்கு எவ்வித கஷ்டமாவது நஷ்டமாவது கிடையாது.

இந்தியாவிற்கு வந்ததும் முதல்தர வரவேற்பு. பெரிய உத்யோகங்களெல்லாம் அவர்களுக்கே. வேலை காலியில்லை என்ற பதில் அவர்களுக்குக் கிடையாது. இப்படிக் கண்ட

படி வெள்ளைக்காரர்களை கொழுத்த சம்பளம் கொடுத்து நாம் வேலையிலமர்த்திக் கொள்ள வேண்டிய அவசியமுண்டா? கிடையாது.

சமீபத்தில் பம்பாய் ஹைகோர்ட் நீதிபதி இந்தியர் ஒருவர் உபகாரச் சம்பளம் பெற்று விலகினர். இதுதான் சமயம் என்று பர்மாவிலிருந்து வசதியுடன் வந்த வெள்ளையர் ஒருவர் அந்த ஸ்தானத்தில் தூக்கிப் போடப்பட்டார். இன்னொரு வெள்ளையனுக்கு 'War Resources Committee' என்ற ஒரு இலாகா புதிதாக சிருஷ்டி செய்யப்பட்டு அதில் உத்தியோகம். இந்த நாற்றம் கொச்சி சமஸ்தானத்திலும் பரவும் போலிருக்கிறது. அங்கு பிரதம நீதிபதி பதவிக்கு ஒரு வெள்ளையனைப் போடப்போவதாக வதந்தி. இப்படி எங்கு பார்த்தாலும் வெள்ளையர்கள் மயமாக நிறைப்பப்பட்டிருப்பதின் காரணமென்ன? நம் கழுத்திலுள்ள அடிமைச் சுருக்கை அழுத்தமாகச் செய்வதற்குத் தானே என்று தோன்றுகிறது."

## இரத்தத்தின் நிறமென்ன?

இதுவரை மனிதனின் இரத்தம் சிவப்பு நிறமென்றுதானே உறுதியாய் நம்பி யிருந்தோம்? ஆனல் இப்பொழுது அதைப்பற்றி யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. கருப்பு மனிதனின் இரத்தம் மஞ்சள் நிறமென்று அமெரிக்க ஆராய்ச்சி நிபுணர்கள் முடிவு கூறினல் நாம் நம்பித்தான் தீரவேண்டும்!

'அவன் தம்பி அங்கதன்' என்ற வசனம் போல் நிறத்திமிரில் எல்லா வெள்ளைக்காரர்களும் ஒரே மனப்பான்மைதான் கொண்டுள்ளவர்கள்.

'இரத்த சகாயம் செய்யுங்கள்' என்று எல்லா தேச சர்க்கார்களும் ஓலமிட்டு வரும் சங்கதி எல்லோருக்கும் தெரிந்ததே. இரத்தத்தை சேமித்துவைக்க 'பாங்கிகள்' எல்லா தேசங்களிலும் இருக்கின்றன. யுத்தத்தில் காயங்கள் ஏற்பட்டு மரணத் தறுவாயிலிருப்பவனுக்கு 'இரத்த ஊட்டம்' ஆச்சரிய பலன் தருவதாகத் தெரிகிறது.

இந்த 'இரத்த சகாய பாங்கி'க்கு அமெரிக்காவில் கருப்பு மனிதர்கள் என்று சொல்லப்பட்ட நீக்ரோக்களே (Negroes) முன்வந்தார்கள். வெள்ளையர்கள் 'இரத்த தானம்' வாங்கிக்கொள்ள முன்வந்தார்களேதவிர கொடுக்க முன்வரவில்லையாம். இப்படி 'இரத்த தானம்' செய்ய வந்த, குண்டோதரன்மாதிரி திடகாத்திரமுள்ள நீக்ரோக்களை வெளியே போகச் சொல்லிவிட்டார்களாம். அப்படிச் செய்தது செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) என்றுல் நம்மை திடுக்கிடச் செய்கிறது.

இதைப்பற்றி ஒரு பாதிரியார் "கருப்பன் இரத்தம் வெள்ளையனுக்கு கெடுதல் செய்யாது. நல்லதுகூட என்று ரசாயன சாஸ்திரங்கள் கூறினும் ஜனநாயகத்தில் கருப்பன் இரத்தம் உதவாது என்று ஆட்சேபிக்கும் மனப்பான்மையுடைய வெள்ளையனது நோக்கத்துக்கும் மதிப்பு கொடுக்கவேண்டும். இதுதான் ஜனநாயக முறை!" என்று உளறியுள்ளார்.

இதைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளில் பலத்த விவாதம்.

இப்படி விவாதம் நடைபெறுவதைக்கண்டு 'The New York Department of Welfare' என்ற சங்கம் 'இரத்த பாங்கி' நடத்துவதை நிறுத்திவிட்டது!

வாய்கிழிய பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் துரை முதல் தோட்டி வில்லியம்ஸ் வரை 'இனி எல்லா நாட்டிலும் எல்லா மக்களுக்கும் சகல உரிமைகளுண்டு, மக்களின் சுதந்திரத்தை நிலைநாட்டவே இந்த யுத்தம்' என்று வாய் ஓயாமல் கத்துகிறர்களே, பின் ஏன் இந்த நிறத்திமிர்? 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்' என்ற மாதிரியில் அல்லவோ சங்கதியிருக்கிறது!

## கைகண்ட மருந்து

இப்பொழுது சர்க்கார் பலமாக பிரசார முன்னணியில் ஈடுபட்டிருக்கிறுர்கள். ஆபீஸில் ஆனந்தமாய்த் தூங்கிக் காலங் கழித்து வந்த ஆபீஸர்கள் முச்சந்தி முனையிலும் கூட்டங்கூடத் தயங்குவதில்லை. கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களும், தாஸர்களும் பேசுகிறுர்கள். எதற்காகக் கூட்டம்? என்ன பேசவேண்டும்? எப்படிப் பேசினல் பலன் ஏற்படும்? இந்த சங்கதிகளைப்பற்றி யாருமே யோசித்ததாகக் காணோம். 'கடனைக் கழித்துத் தொலையவேண்டும்' என்று ஏதேதோ சொல்லிவிட்டுப் போய்விடுகிறுர்கள்!

சர்க்கார் தரப்பில் பிரசங்கம் செய்பவர்களெல்லாம் 'ஐந்தாம் படை' என்ற வார்த்தையை அடிக்கடி உபயோகிக்கிறுர்கள். 'ஐந்தாம்

படை' என்றால் என்ன? என்று கேட்டால் வாயில் வந்தவாறும், மனம் போனவாறும், கற்பனா சக்திக்கு எட்டிய வரையிலும் பிதற்றுகிறார்கள். 'வைசிராய் அந்தப் பதத்தை உபயோகித்தார், கவர்னர் அதைப்பற்றிக் குறிப்பிட்டார், ஆகையால் நாமும் அந்தப் பதத்தைப்பற்றி குறிப்பிடாவிட்டால் அழகல்ல' என்றுதான் 'ஐந்தாம் படை' 'ஐந்தாம் படை' என்று கதறுகிறார்கள். அந்தோ பரிதாபம்! இதுவா பிரசார முறை?

இந்த 'ஐந்தாம் படை' என்பதைப்பற்றி சற்று ஆராய்வோம். 'எதிரிகளின் அன்பர்கள்' என்பார், சிலர். 'பிரிட்டிஷ் ஆட்சியை விரும்பாதவர்கள்' என்பார் சிலர். 'வதந்திப் பிரியர்கள் என்பார் மற்றும் சிலர். 'யுத்த சமாசாரங்களைப் பற்றி பகிரங்கமாய்ப் பேசுபவர்கள்' என்றும் சொல்வோருண்டு; ஒன்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்லலாம். 'ஐந்தாம் படை' என்பதைப்பற்றி யாருக்கும் திட்டமான அபிப்பிராயம் கிடையாது. இது ஐரோப்பாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மனோ வியாதி. வீண் சந்தேகத்தினால் ஏற்பட்டது; மக்கள்பேரில் நம்பிக்கையில்லாததினால் ஏற்பட்டது. இவ்வளவுதான் நாம் 'ஐந்தாம் படை' என்பதைப்பற்றி சொல்லக்கூடும்.

இந்த மனோ வியாதி இந்நாட்டை அடிமைப்படுத்தி ஆளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆட்டி வைப்பதைக் கண்டு நாம் வருத்தப்படுகிறோம். வியாதிக்கு மூலகாரணமான 'சந்தேகத்தை' ஒழிக்கப் பாடுபடுவதாகக் காணோம்.

இதற்கு மருந்தும் உண்டு, கைகண்டமருந்து. ஆனால் சற்று கசப்பான மருந்து. குணத்துக்கு 'காரண்டி'! அது என்ன? மக்களை நம்பி அரசாங்கப் பொறுப்பை மக்களிடமே ஒப்புவித்து கவலையற்று இருப்பதுதான். பைத்தியக்கார யோசனை என்று சொல்லலாம். ஆனால் சற்று சிந்தித்தால் உண்மை விளங்கும்.

'ஐந்தாம் படை' என்று உண்மையிலேயே ஒன்று இருந்தாலும் மேமேலே கண்ட மருந்தை உபயோகித்தவுடன் சூரியனைக் கண்ட பனி போல் அது மறைந்து ஒழிந்துவிடும்!


## ஸ்ரீமதிகள்!

மதியை மயக்கும் மாலை நேரம். மன்மதனின் திருவிளையாடல் மாலை நேரத்திலே. நாரிமணிகள் 'நீட்டாக' அலங்காரம் செய்துகொண்டு, தலையில் ஒரு சுமை புஷ்ப மூட்டையை ஏற்றித் தாங்கிக்கொண்டு ஒய்யார நடை நடந்து உல்லாசமாக யாத்திரை கிளம்ப மாலை நேரமே ஏற்றது. புருஷர்களை சாகசங்களால் கசக்கிப் பிழிந்து வேண்டிய வரங்களை பெற்று அடிமைகொள்ள அதுவே தருணம்!

இந்த சாகஸக் கொஞ்சல்கள் மனித வர்க்கத்துக்குமட்டும் தனி உரித்தானதல்ல. கேவலம் கொசுக்கள்கூட இதே முறையை அனுஷ்டிக்கின்றன! கொசுக்களில் ஆண், பெண் என்ற வித்யாசமுண்டென்றும், மாலை வேளைகளில் பெண் கொசுக்கள் மட்டுமே உலாவித் திரியுமென ஒரு ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்.

வாஸ்தவம். காலை வேளையில் சாக்கடை 'சமுத்திரத்தில்' பெண் கொசுக்கள் குளித்துவிட்டு மாலை வேளையில் கிணற்றிலும் நீராடி, விட்டிலுள்ள நல்ல பதார்த்தங்களையெல்லாம் ருசி பார்த்துவிட்டு, இனியகீதம் பாடிக்கொண்டு குஷால் பறக்க பவனி கிளம்புகின்றன. மானிடப்பிறவிகள் இந்த சங்கீத சுகானுபவ ஆனந்தத்தில் ஆழ்ந்துவிடுகிறார்கள்! மனிதன் அந்த சங்கீத இன்பத்தை சரியாய் அனுபவித்து உணருகிறானா என்பதை சோதிக்க (ஸ்ரீமதிகள்) பெண் கொசுக்கள் மனிதனை நன்றாய் ஆலிங்கனம் செய்து அவனது சரீரத்தை நாசூக்காகக் கிள்ளி இரத்த பானம் செய்கின்றன! மனிதன் கையைத் தட்டியோ அல்லது உடம்பில் தாளம் போட்டோ ஸ்ரீமதிகளின் மதுகார கான இனிமையை ஆமோதிக்கிறான். அதைக்கண்டு ஸ்ரீமதி கொசுக்கள் நாணம் கொள்ளுகிறார்கள். சற்று அப்பால் சென்று பிணக்கு செய்கிறார்கள். மறுபடி கீதம் பாடிக்கொண்டு நெருங்குகிறார்கள். இன்னும் கொஞ்சம் இரத்த பானம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? மனிதன் துன்பமடைகிறான். இதையறியாமல் ஸ்ரீமதிகள் மேலும் மேலும் இரத்த பானம் செய்கின்றன. இந்த சுகத்தினால் மனிதன் நித்திரையையும் விலக்கி விடுகிறான். ஸ்ரீமதிகளுடன் கொஞ்சி யுத்தம் புரிகிறான்.

இப்படிப்பட்ட ஸ்ரீமதிகளின் கொண்டாட்டத்தையும், குதூகலத்தையும், இனிய கானத்தையும் அனுபவிக்காத மானிடப் பிறவிகள் உண்மையில் முன் ஜன்மத்தில் மகா கொடிய பாபத்தைச் செய்திருக்கவேண்டும்!




# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

'ராமய்யா'

சென்ற மாதம் முழுதும் அம்மாஞ்சியும் நானும் யுத்த சமாசாரத்தைத் தவிர வேறு ஒன்றும் ரேடியோவில் கேட்கவில்லை. காடி ஆட்டம் நடக்கும்போது பூஜை எப்படி செய்வது? ஆகவே தற்சமயம் நான் வெறும் கையால் முழம்போட வேண்டியிருக்கிறது. ஆயினும் அம்மாஞ்சியைப்போல் ஒரு மனிதனுடன் வருஷம் மூன்னூற்று அறுபத்திஐந்து நாளும் வசித்துவந்தால், எழுதவும் பேசவும் விஷயம் இல்லாமல் போகாது. சங்கீத சம்பந்தமாக படித்தும் ஆராய்ச்சி செய்தும், கேட்டும் அனுபவித்த அம்மாஞ்சி எடுத்துக் காட்டிய சில விஷயங்களைப்பற்றியும், சில கிளைக் கதைகளையும் இங்கு எழுதுகிறேன். கவனியுங்கள் (தயவுசெய்து!) இவைகள் பல தினங்களில் பல சந்தர்ப்பங்களில் சொன்னபோதிலும் ஒரே பிரசங்கத்தில் அம்மாஞ்சி விளக்கியதுபோல் நான் கீழே எழுதிவிடுகிறேன்.

சங்கீதத்தில் நிபுணன், வித்வான், உஸ்தாத் என்ற வாக்குக்ளுககு நம் தேசத்தில் காலத்துக்குத் தகுந்தமாதிரி அர்த்தம் உண்டென்பது நீங்கள் தெரிந்துகொண்டீர்களா? ஆதிகாலத்தில், அதாவது, இதிஹாஸ புராணங்கள் காலத்தில், நாரதரும் தும்புருவும் பந்தயம் போட்டுக்கொண்டு ஹனுமாரை மத்தியஸ்தம் செய்ய வேண்டுகையில், அவர் 'குண்டக்ரியை' என்ற ராகத்தைப்பாடி பாரையை உருக்கினர் என்ற ஐதீகத்தால் வித்வாம்ஸம் என்பது ஜீவனில்லாத வஸ்துக்களையும் வசீகரிக்கும் சக்தி யுள்ளவனுக்கே உரிமை என்று ஏற்படுகிறது. இதற்குப்பின் ஹனுமாருக்கே கர்வ பங்கம் ஏற்பட்டது என்றும். அவரும்கூட ஸ்வரதேவதைகளில் ஒருவரை அபஸ்வர கானத்தால் மூர்ச்சையாக்கினர் என்றும் புராணம். ஆதிகாலத்தில் இத்தகைய மகா புருஷர்களாகிய சிரஞ்சீவிகளே வித்வான்களாகப் பட்டம் சாற்றிக்கொள்ளவில்லையாம். அக்காலங்களில் சங்கீதம் என்பது எவ்வளவு தேவகானமாகவும் சுஸ்வரகானமாகவும் இருந்திருக்கவேண்டும்?

இதற்கு அடுத்த காலத்தை எடுத்துக்கொள்வோம்; அதாவது ராஜாக்களும், பாதுஷாக்களும், சங்கீத அபிமானிகளாக விளங்கி, வித்வான்களை ஆஸ்ரயித்து கலையை விருத்திசெய்த

காலம். அந்தக் காலங்களில், இந்தியர் மாத்திரம் அல்ல, அயல்நாட்டுக் காரரும், வெள்ளையரும்கூட, தேசிய கர்நாடக சங்கீதத்தில் ஈடுபட்டிருந்ததாக அறிகிறோம். ஸர் வில்லியம் ஔஸ்லி (Ouseley) கர்னல் மெடோஸ் டெய்லர், என்ற சரிதாசிரியர்கள் இந்திய சங்கீத சம்பந்தமாக ஏராளமாக எழுதியிருக்கின்றனர். தாக்ஷிணாத்ய கானத்தைக் குறித்து வெகு விஸ்தாரமாக எழுதியிருக்கும் அரிய நூல் ஒன்று காப்டன் டே (Captain Day) என்பவராலாகும். இவர்களெல்லாம் பல சமஸ்தான அதிபதிகளின் ஆதரவால் இந்து தேச கானத்தைக் கேட்டு, அனுபவித்து விஷயம் அறிந்து, நூல்களைப் பிரசுரித்துள்ளார்கள்.

மேற்கூறிய காலத்தில் நிஜமான சமர்த்தரே வித்வான்களானார்கள். சரித்திரங்களில் குறித்திருக்கும் அநேக கதைகளால் இது விளங்குகிறது. அக்பர் சக்கிரவர்த்தியின் காலத்தில் நடந்த இரண்டு சம்பவங்களைக் கவனிப்போம்.

மீர் டான்ஸன் (Mir Tansen) என்பவர் ஒரு மஹா வித்வான். இவர் ஒரு நாள் இரவில் பாடவேண்டிய ஒரு ராகத்தை பகலில் பாடினாராம். உடனே பகல் இருண்டு, அவருடைய சாரீரம் அரண்மனையைச் சுற்றி எவ்வளவு தூரம் பரவிற்றோ, அந்த இடமெல்லாம் இருண்டு கிடந்ததாக சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அதே அக்பர் சக்கரவர்த்தியிடத்தில் நாயுக் கோபால் என்ற ஒரு பிரபல வித்வான் இருந்தார். ஒரு நாள் அக்பர் வித்வானை 'தீபக்' என்ற ராகத்தைப் பாடச் சொன்னார். வித்வான் வேண்டாம் என்று எவ்வளவோ வேண்டிக்கொண்டும் சக்கரவர்த்தி இணங்கவில்லை. பிறகு கோபால் ஜமுனா நதிக்குள் கழுத்தளவு ஜலத்தில் நின்றுகொண்டு ராகத்தை ஆலாபனம் செய்யுங்கால், அவரைச் சுற்றிலும் ஜலம் கொதித்துத் தத்தளித்து, கடைசியில் வித்வானே ஜ்வாலையில் பஸ்மமாக ஆய்விட்டாராம். மேற்கூறிய இரண்டு கதைகளையும் ஸர் வில்லியம் ஔஸ்லி எழுதிய புஸ்தகத்தில் படிக்கலாம்.

தீபக் ராகத்தின் மகத்துவம் மைசூர் மகாராஜாவின் சன்னிதியிலும் ஒரு சமயம் ஆவிர்பவித்ததாக நாம் அறிகிறோம். சமஸ்தான தேவாலயத்தில் தூண்டா விளக்கு ஒன்று அணைந்துவிடவே, அதை ஸ்பரிச தோஷமின்றி ஏற்றவேண்டும் என்று அரசன் வேண்டுகையில், ஆஸ்தான வித்வான் தீபக் ராகத்தைப்பாடி விளக்கை ஏற்றுவித்ததாக எழுதியிருக்கிறது.

புன்னாக வராளி ராகத்தை 'புங்கி' என்ற வாத்தியத்தால் ஒரு பாம்பாட்டி வாசித்து, எல்லிசபூர் என்ற ஊரில் தன் தோட்டத்தில் நாகப்பாம்புகளை வசீகரித்துப் பிடித்ததாக மெடோஸ் டெயிலர் என்பவர் எழுதியிருக்கிறார். இதே ஆசிரியர் 'மேகரஞ்சனி' அல்லது 'மேகமல்லர்' என்ற ராகத்தின் சக்தியைக் குறித்தும் எழுதியிருக்கிறார். இந்த ராகத்தைப் பாடி வித்வான்கள் மழை பொழியச் செய்ததைத் தான் கண்டதாகவும் கூறியிருக்கிறார்.

நம் நாட்டு சங்கீதத்தின் புராதன மகத்துவத்தைக் குறித்து பிரபல ஆங்கிலேயர்கள் எழுதியதைக் கேட்டு நாம் 'சபாஷ்' எனலாம்! ஆனால் தற்கால ரீதியைக் கவனித்தால் முற்றிலும் துக்கிக்க வேண்டியதுதான். அத்தகைய ராஜாக்களும் பாதுஷாக்களும் போன இடம் புல்லும் முளைத்துவிட்டதல்லவா? அக்காலத்து ஆஸ்தான வித்வான்கள் தம் பிரபுக்களின் நிழல்கள் போலல்லவோ வசித்து வந்தனர். இக்காலத்திலோ சமஸ்தானம் ஒரு மூலை, வித்வான் வசிப்பது மற்றொரு மூலை. வருஷத்துக்கு இரண்டு முறையோ மூன்று முறையோ மலேரியா ஜுரம் போல் வித்வான் தன் கடனைச் செலுத்த சமஸ்தானத்துக்குப்போய் வந்தால் போதும். வித்வான்களுடைய யோக்கியதைகளைப்பற்றித்தான் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. நாயக் கோபால் தீபக் ராகத்தைப் பாடித்தானே பஸ்மம் ஆய்விட்டதாகக் கதை. தற்கால வித்வான்கள் சாந்தமான சாவேரி ராகத்தைப் பாடினாலும் கேட்பவர்கள் சரீரங்களே கொதிப்பெடுத்துப் போகின்றன. முன் காலத்தில் வித்வான்கள் தம்மை ஆஸ்ரயித்த பிரபுக்களின் க்ஷேமத்தையும் நன் மதிப்பையும் கோரி நடந்துகொண்டனர். தற்காலத்திலோ வித்வான்களுக்கு தம்மை விரும்பும் ரசிகர்கள் ரயில்வண்டி சிநேகிதர்கள்போல்தான். இருக்கவும் கிடக்கவும் இடம் கொடுக்கும் வரையில் பரம ஆப்தம்; பிரயாணம் முடிந்தவுடன் வேகமாய் நடந்துவிட வேண்டியதுதான்.

தற்கால ரீதியை எடுத்துக்கொள்ளுவோம். சங்கீதம் என்பது ராஜ காரியமாயிருந்த நிலை

யிலிருந்து, பொதுஜன காரியமாக வந்திருக்கிறது. ராஜாக்கள், மடாதிபதிகள், ஜமீன்தார்கள் இவர்களுடைய ஆதரவிலிருந்து பொது மக்களின் ஆதரவில் ஈடுபட்டிருக்கிறது. இது மெச்சத் தகுந்த விஷயமே. ஆனால் இதனால் விளைந்த தீமை என்னவென்றால் வித்வான்கள் பாடு பெரிய திண்டாட்டமாய்ப் போய்விட்டது. 'ஊருக்கு ஒரே தேவடியாள், யாருக்கு ஆடுவாள்' என்பதுபோல நானாவித சபைகள், பொதுக்கூட்டங்கள், ரசிகர்கள், அரிசிகர்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள், நடுத்தர உத்தியோகஸ்தர்கள், மாணாக்கர்கள், பார்ப்பனர்கள், அவர்களல்லாதோர், இன்னும் பலவித வர்க்கத்தினர் மத்தியில் சமரசமாகப்பாடி, கியாதிபெற்று சம்பாவனையும் பெறக்கூடிய வித்வான்கள் திக்விஜயம் செய்தாலும் காணப்படமாட்டார்கள்போலல்லவோ இருக்கிறது. ஒரு பிரபுவினிடத்திலோ அல்லது ஒரு இயக்கத்தில் மட்டுமே ஈடுபட்டோ இருக்கும் வித்வான் நிர்தாக்ஷண்யமாகவும் நிர்பயமாகவும் தம் கானத்தைப் பிரயோகிக்கலாம். நூற்றுக்கணக்கான மக்களை ஒரே சமயத்தில் சந்தோஷிக்கவேண்டும் என்பவன் கதையில் கழுதையைச் சுமந்த கிழவன்போலல்லவோ ஆவான்?

'சங்கீத வித்வான்' என்பவன் யாவன்? கரண்டி செய்பவனே கருமான், தமக்கை பிள்ளையே மருமான் என்பதுபோல், பாட்டுப் பாடுபவனே வித்வான் எனலாம்! கந்தப்பிள்ளை சாவடி முனிஸிபாலிடி பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் பாட்டு வாத்தியார் கூட சங்கீத வித்வான்தான்! அவரும் ரேடியோவில் ஆறு மாதத்துக்கு ஒரு முறை இருபத்திநான்கு ரூபாய் பதினைந்து அணா பெற்றுக்கொண்டு (ரசீது ஸ்டாம்புக்கு ஒரு அணா கழித்து)ஒரு வர்ணம், மூன்று கீர்த்தனை, ஒரு விருத்தம், ஒரு ஜாவளி, ஒரு தில்லானா பாடிவிடுகிறாரோ இல்லையோ? அவருடைய படமும் 'இந்தியன் லிஸனர்' பத்திரிகையில் வெளி வந்துவிடுகிறது. இது நிற்க, ஸினிமா ஸ்டுடியோக்களில் திரைக்குப் பின்னால் சங்கீதம் பாடும் ஆட்கள் எல்லாரும் வித்வான்களே. பேசும் படங்களில் நடிக்கும் நக்ஷத்திரங்களைப்பற்றித்தான் சொல்லவேண்டிய அவசியமில்லை. சர்வகலாசாலைகளில் போதிக்கும் சங்கீத ஆசிரியர்களைப்பற்றி நமக்கு பேசவே யோக்கியதை இல்லை. அவர்களுக்கு 'வித்வான்' பட்டமும் போதாதென்று 'புரொபஸர்' பட்டம் கிடைத்துவிடுகிறது. அவர்களிடம் படித்து பரீக்ஷை தேறுகிறவர்களுக்கே வித்வான்கள் என்ற பட்டங்கள் கிடைக்கின்றன.

ஆகவே அக்பர் போன்ற பாதுஷாவுக்குப் பதிலாகவும், மைசூர் மஹாராஜாவைப் போன்ற அதிபதிக்குப் பதிலாகவும் தற்காலத்தில் வித்வான்களை சிருஷ்டிக்கும் தன்மையுள்ளவர்கள்—சிருஷ்டிகர்த்தாக்கள்—யாவர்? முனிஸிபாலிடி கமிஷனர்கள்! இவர்களல்லவோ சங்கீத உபாத்தியாயர்களை நியமிக்கிறவர்கள்? பிறகு சர்வ கலாசாலைகளிலுள்ள செனேட், ஸிண்டிகேட் அங்கத்தினர்கள், பிறகு சினிமா ஸ்டுடியோ தலைவர்கள். ரேடியோ ஸ்டேஷன் டைரக்டர், உதவி டைரக்டர், ப்ரோகிராம் டைரக்டர், இன்னும் சில்லரை தேவதைகள்! இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஒருவனை யழைத்து, அவனுக்கு ஜவ்வாது பொட்டும் மயில்கண் வேஷ்டியும் போட்டுவிட்டால் அவனே வித்வான் ஆவான்!

இன்னும் ஒரு வகுப்பினரை நான் விட்டுவிட்டேன். அது யாரென்றால் சொந்தப் பணம் சிலவுசெய்து தங்கமெடல்கள் செய்து ஒரு பெரிய உத்யோகஸ்தரைக்கொண்டு அவைகளைப் பரிசுகளாகக் கொடுக்கச்சொல்லி பிரபலம் அடையும் பாடகர்கள். பத்து மெடல்கள் சேர்ந்தால் அவைகளின் ஸ்வர்ண ஜ்வாலையே வித்துவத் மேடையில் ஏற்றும். மெடல்களைப் பரிசு கொடுத்து தங்கள் கழுத்தில் மாலை யேற்றுக்கொள்ளத்தான் தற்காலத்தில் ஏராளமான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்களே—ஆகையால் வித்வான்களுக்கும் குறைவில்லை. ஆஸ்ரயிக்கும் பிரபுக்களுக்கும் குறைவில்லை. திண்டிவனத்தில் புளியங்கொட்டைகள் எவ்வளவு ஏராளமோ அவ்வளவு ஏராளம் இவ்விரண்டு ஜாதிகளும்.

# வைகுண்டத்தில் ஜாபாலி

[ரா. ஸ்ரீ. தேசிகன்]

★

## முதற் காட்சி

[வைகுண்டத்தில் அகண்டமான பொன் மணி மண்டபத்தில் ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷன் மடியில் பகவான் கண் வளர்கிறார். மஹா லக்ஷ்மி அவருக்குப் பணிவிடை செய்கிறாள். அவருடைய வடிவழகில் தங்களை மறந்து அவரைப் பார்த்தவண்ணமே நிற்கிறார்கள் நித்ய சூரிகள். வைகுண்டத்தை அடைந்த நிகமாந்தன், மணவாளன், விஜயேந்திரர் முதலிய பரமாசாரியர்கள் ஆனந்தத்தில் கண் மூடியவர்களாய் காட்சி அளிக்கின்றனர். கின்னரர்கள் ஒரு புறத்தில் பாடுகிறார்கள். மற்றொரு புறத்தில் நாரதர் வீணையை மீட்டுகிறார். சங்கொலி கேட்கிறது. பலவித வாத்யங்கள் முழங்குகின்றன. இவ்வொலிகள் 'ஓம்' என்ற வேத கோஷங்களில் மறைகின்றன. தூப கந்தம் நானுவிதத் தங்கப்பாத்திரங்களிலிருந்து 'கம்' என்று எழுகிறது. பகவானுக்காகத் தொடுத்த துளசி மாலைகளிலிருந்து கிளம்பும் மணம் அதோடு கலக்கிறது; ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. அதில் ஆழ்ந்து ஆடி ஆடி அகங்கரைகின்றனர். எங்கும் ஆடலும் பாடலும்தான். முக்தர்கள் பின்வருமாறு பாடுகிறார்கள்:

மண்ணு நீ, விண்ணு நீ, மலையு நீ, கடலு நீ
எண்ணு நீ, எழுத்து நீ, இரவு நீ, பகலு நீ
பண்ணு நீ, பாவு நீ, பாட்டு நீ, தொட்டு நீ
அண்ணனீ, அமலனீ, அருளுநீ, பொருளு நீ
அண்டர் கோன் அணிவைகுந்தன்
என்னமுதனைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணுவே

இப்பாட்டுக்கள் வைகுண்டத்தில் எங்கும் ஒலிக்கின்றன. இம்மதுர ஒலிகள் செவிகளில் விழ, பூர்ணக்ஞனும் விபுலானந்தனும் ஒரு பூஞ்சோலையில் பூக்கள் கொய்துகொண்டிருக்கிறார்கள்.]

பூர்ணக்ஞன்: இன்றைக்கு ஒரு கனவு கண்டேன். என் அகண்டமான அறிவை மறைப்பது போல ஒரு தோற்றம் என் முன் வந்தது.

விபுலானந்தன்: என்ன ஆச்சரியம்! எனக்கும் ஒரு கனவு வந்தது. என் வற்றாத இன்பக் கடலும் குழப்பம் அடைந்தது போலக் காணப்பட்டது.

பூர்ண: வேதங்கள் தொட முடியாத மனத்தோடு திகைத்து வரும்படியான எல்லையைத்தாண்டி யார் இங்கே வரமுடியும்? சூரியன், சந்திரன், தாரகா கணங்கள் மங்குகிற இந்தப் பிரதேசத்தில் எந்த துஷ்ட தேவதை நுழைய முடியும்? பகவான் இங்கேயும் நம்மைச் சோதிக்கிறாரா?

விபு: எனக்கும் ஒன்றும் தோன்றவில்லை. விழிப்பு, கனவு, தூக்கம் இவைகளைத் தாண்டி ஆனந்தக் கடலில் முழுகின எனக்கு கலக்கமேற்படுவானேன்! என்ன நடக்கப் போகிறதோ?

[இதற்குள் 'சகோதரர்களே', என்ற ஜாபாலியின் குரல் கேட்கிறது]

பூர்ண: யாரோ ஒரு புதுக்குரல் கேட்கிறதே! போய்க் கேட்போமா?

விபு: போவோமே.

## இரண்டாம் காட்சி

[முக்த ஜனங்கள் சுற்றி நிற்க, ஜாபாலி மதுரமான குரலில் பேசுகிறார். ஜாபாலி வயது முதிர்ந்தவர். நீண்ட தாடி அவர் மார்பை அலம்புகிறது. அனுபவத்தில் கனிந்த அறிவு அவர் முகத்தில் ஒளி வீசுகிறது.]

ஜாபாலி: சகோதரர்களே, நான் உங்களைச் சில கேள்விகளைக் கேட்கலாமென்று நீண்ட பிரயாணம் செய்தேன். செவி சாய்த்தருள வேண்டும். முப்பழமொடு பாலன்னம் சில

பேர்கள் உண்ணும்பொழுது, பசியால் பலர் வருந்தினால் அவ்வுணவு இன்பத்தைத் தருமோ?

விபு: (அவன் மனதில் சந்தேகம் பிறக்கிறது. 'அது எப்படித் தரும்' என்று தன் மனதிற்குள் பேசிக்கொள்கிற பேச்சு தன்னை யறியாமல் வெளியிலே வெடித்து விட்டது) தாராதுதான்.

ஜாபாலி: (அவருடைய ஊடுருவிப் பாயும் கண்கள் விபுலானந்தரின் மனதைத் துருவி ஆராய்வதுபோல நோக்குகின்றன.) விபுலானந்தரே உங்களுக்குச் சந்தேகம் வரக்கூடியதுதான். ஏதோ அறிவு ஓரிடத்தில் மின்னொளிபோல அடித்துச் சூழ அஞ்ஞான அந்தகாரத்தில் மறைந்தால் அது பூர்ணமான ஞானம் ஆகுமா? (என்று சபையை நோக்குகிறார்).

பூர்ண: (தன்னைத்தான் பார்த்து விளிக்கிறதாக நினைத்து) ஆகாதுதான்.

ஜாபாலி: சரி மேலே சொல்லுகிறேன். பட்டியில் அநேக ஆடுகள் இருந்தாலும், மலையிலே வழி யிழந்த ஆடுகளை நினைக்கிற பொழுது இடையனுக்கு மனத்திற்குச் சமாதானம் ஏற்படுமா?

பூர்ண: ஏற்படாதுதான்.

ஜாபாலி: அது வரையில் அந்த இடையனுக்குக் குறைவுதான். சகல ஜீவராசிகளை வைகுண்டப் பட்டியில் அடைக்கிறவரையில் அந்தக் கோபாலனுக்கும் குறைவு தானே? எங்கேயாவது ஓரழுகைக்குரல் கேட்டாலுஞ்சரி, ஒரு விம்மல் எழுந்தாலும் சரி. ஜகத்தைப் பாதிக்காமற் போகுமோ?

பூர்ண: எங்களை வைகுந்தத்திற் கேற்றிய ஆசாரியர்களைக்கூடவா பாதிக்கும்? அவர்கள் பரிபூர்ண ஞானமுடையவர்களில்லையா?

ஜாபாலி: அவர்கள் பரிபூர்ணமுடையவர்களா! பகவான்கூட பரிபூர்ண தசையை அடைய அவதாரஞ் செய்கிறான். அவர்களைப்பற்றி பேசுகிறீர்களே! பிரபஞ்சம் முழுவதும் அவனுடைய சரீரமில்லையா? சரீரத்தில் எங்கேயாவது உபாதி ஏற்பட்டால் பகவான் தான் சுகமாயிருக்க முடியுமா? ஜீவராசிகள் பரிபூரணத்தை யடைந்தால்தான் பகவான் பரிபூர்ணமடைய முடியும். அதை உத்தேசித்துத்தான் அவன் சதா அவதாரஞ் செய்கிறான்.

பூர்ண: இதுமாதிரி நாங்கள் யோசித்ததில்லையே.

விபு: எங்கள் ஆனந்தத்தில் மற்றவர்களை மறந்தோமே!

ஜாபாலி: நல்லதோ கெட்டதோ எந்த இடத்திலிருந்தாலும் நமக்கும் அதில் பங்குண்டு. அகண்ட சிரஷ்டி மரத்தில் நாம் இலையும் காயுமில்லையா? இந்நிலையிலே தனித்த ஆனந்த அநுபவமுண்டோ? இந் நிலையிலே தனித்த அறிவு முதிர்ச்சி உண்டோ?

## மூன்றும் காட்சி

*['இல்லை இல்லை' யென்ற பேராரவாரம் எழுகிறது. பூர்ணகனும் விபுலானந்தனும் கீழே பூலோகத்திற்குப்போக ஆரம்பிக்கின்றனர். பகவான் தன் பரிவாரங்*


# அஸல் ஆரணி பட்டு சேலைகள்

குறைந்த விலை — நீடித்த உழைப்பு

கல்யாண காலத்திற்காக

ஸ்பெஷலாக தயார்செய்த பட்டு சேலைகளை

ஒருமுறை வந்து பார்த்து வாங்கி அனுபவித்தால் சந்தோஷமடைவீர்களென்பது நிச்சயம்.

**- ஆரணி ஸில்க் ஹவுஸ் -**

85, பெரியதெரு, கும்பகோணம்.

பிராஞ்சு: திருவல்லிக்கேணி.] [ஹெட் ஆபீஸ்: ஆரணி.

*களுடன் கீழே இறங்கிவிடுகிறான். வைகுண்டத்தில் ஒரு சூன்னியம் ஏற்படுகிறது. ஆசாரியர்கள் கண்களுக்குமுன் வைகுந்தக் காட்சி நிற்கிறது. கீழே இறங்குகிற சூரிகளைக்கண்டு தங்களுக்குள் பேசிக்கொள்ளுகிறார்கள்.]*

நிகமாந்தன்: (மிகுந்த கம்பீரமான குரலில்) என்ன காரணத்திற்காக நான் கீழே இறங்க வேண்டும்? லக்ஷ்மி கடாக்ஷம் பெற்றிருக்கிறேன். நான் செய்த கர்ம பலத்தினால் அடைந்த மோக்ஷ சாம்ராஜ்யத்தை எதற்காக இழப்பேன். ஒவ்வொருவரும் என்னை போல பாடுபடட்டுமே.

மணவாளன்: நிர்ஹேதுக கடாக்ஷத்தினால் எனக்குக் கிடைத்திருக்கிறது. என்னுடைய ஆசாரியர் எனக்காகப் பிரார்த்தனை செய்திருக்கிறார். எனக்கென்ன குறைவு.

விஜயேந்திரர்: சில ஜீவன்கள் கஷ்டப்பட வேண்டியதுதான். என்னை வரித்துவிட்டார் பகவான். எனக்கென்ன குறைவு.

*[திரைக்குப் பின்னால் கௌடபாதரின் குரல்* சிவோஹம், சிவோஹம், சச்சிதானந்த சிவோஹம்.

*[இவர்கள் பேசுகிற பேச்சுக்கள் விபுலானந்தன் செவியிலும் பூர்ணக்ஞன் செவியிலும் விழுகின்றன]*

விபு: என்ன இதுமாதிரி ஆசாரியார்கள் பேசுகிறார்களே. நமக்கென்னவோ சந்தேகம் வருகிறது.

பூர்ண: *தங்கள் தங்கள் சித்தாந்தந்தான் நிஜம் அதில் யாதொரு சந்தேகமும் கொள்வதற்கில்லை,* என்று அவர்கள் நினைக்கிறார்கள். மற்ற ஜீவகோடிகளைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. நாம் கீழே இறங்குவோம்.

*[இருவரும் போகிறார்கள்.*




டோங்ரேயின்

**பாலாமிருதம்**

பிரசித்தி பெற்ற

**குழந்தைகளின்**

**டானிக்**




வேற்று காரணத்தால்
மனம் சோர்வுற்ற கணவனை திருப்தி செய்ய
மனைவி நாடும் உதவி
"ரோஜா மார்க் நெய்"
கோபம் பறந்து புன்முறுவல் அடைவது
திண்ணம்.
நீங்களும் பரிக்ஷித்து உண்மை அறியலாம்.

புதுத் தொடர் கதை

# இதயம் அறியா உலகம்

[கே. சுந்தரம்மாள்]

★

### (முன் கதைச் சுருக்கம்)

சாந்தி முகூர்த்த அறை. அதனுள் வியாதியினால் மெலிந்த யுவன். ஒருபுறம் வெட்கத்தால் தலை குனிந்து நிற்கும் அழகிய யுவதி. மற்றொரு புறம் நடுவே அலங்கரிக்கப்பட்ட மஞ்சம்.

யுவன் மனதில் ஒரு கலக்கம். குற்றமுள்ள நெஞ்சம்; தீராத வியாதியினால் தான் பீடிக்கப்பட்டவன்; ஆகையால், அந்த இளம் கொடியையும் அவ்வியாதிக்கு உள்ளாக்கக்கூடாது என்ற திட நம்பிக்கை அவன் மனதில் எழுகிறது. அப்பெண்ணோ ஒன்றும் புரியாமல் நிற்கிறாள்.

ஜகதீஷ் ஒரு முன்சீப்பின் குமாரன். தீராத நோய் ஒன்று அவனை இளம் வயதிலேயே பீடித்துவிட்டது. அதைப் பொருட்படுத்தாமல் அவன் படிப்பிலேயே ஊக்கங்கொண்டு முன்னேறி வந்தான். பிரபல டாக்டர்கள் அவனுக்குச் சிகிச்சை செய்தார்கள் எனினும் அவன் வியாதி குணமடையும் என்று அவர்களால் உறுதி கூற முடியவில்லை. இத்தருவாயில் அவனுக்கு 22 வயது வந்ததும் அவனைக் கல்யாணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். கலியாணம் செய்துகொள்ள அவனுக்கு இஷ்டமில்லாவிடினும் பெற்றோர்களின் வற்புறுத்தலின்பேரில் கல்யாணம் செய்துகொள்ள சம்மதித்து பிரதிபாவை மணந்தான். இன்றுதான் சாந்தி அறையில் தம்பதிகள் முதன் முதலாகச் சந்தித்துப் பேசுகிறார்கள். பிரதிபா பதினைந்து வயது நிரம்பியவள்; கபடமற்றவள்; உலகமறியாதவள்.

ஜகதீஷுக்கு இளமையும் அழகும் ஒன்றுகூடித் தாண்டவமாடும் பிரதிபையின் முகத்தைக் கண்டவுடன் மனம் தாளவில்லை. தான் செய்த தவறை உணர்ந்து தன் வியாதி அவளுக்கும் பரவாதிருக்கவேண்டி, அவளிடம் விஷயத்தைத் தெளிவு படுத்துகிறான். தாமிருவரும் இனி சகோதர பாவத்தில்தான் வாழ்ந்துவர வேண்டுமென்றும், பிறருக்கு மட்டும் அவர்கள் தம்பதிகள் எனப்புலப்படும்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறுகிறான். பிரதிபாவுக்கு இதன் அர்த்தம் விளங்கவில்லை. எனினும் கணவன் சொற்படி நடப்பதாக வாக்களிக்கிறாள். பிறகு கொஞ்ச நேரம் இருவரும் சொக்கட்டான் ஆடுகிறார்கள். தூக்கம் வரவே பிரதிபா ஒரு சோபாவில் படுத்துத் தூங்கிவிடுகிறாள். ஜகதீஷ் மட்டும் ஈஸி சேரில் சாய்ந்துகொண்டு தான் செய்த தவறை உணர்ந்து மனம் நொந்து அயர்ந்துவிடுகிறான். சாத்தி மஞ்சம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

### 2

யாதொரு மாறுதலுமின்றி விசேஷம் ஒருவாறு நடந்தேறியது. பிரதிபையின் மாமியார், அழகு, குணம், சீர்வகை, நிறைய நகைகள் இவைகளுடன் வந்த நாட்டுப் பெண்ணைப் பார்த்து மகிழ்ந்து, யாவரிடத்திலும் பெருமை பேசிக்கொண்டாள். தாயாரோ, தன் ஒரே செல்வத்திற்கு, அழகு, குணம், கல்வி, பணம் இவைகளையுடைய புருஷனும், உயர்ந்த உத்தியோகத்திலுள்ள மாமனாரும், சீரும் சிறப்புமாகக் கொண்டாடும் புக்ககமும் கிடைத்ததை நினைத்து சந்தோஷப்பட்டு, எல்லோரிடத்திலும் தன் கவலை நீங்கியதைப்பற்றி பெருமை பேசிக்கொண்டாள்.

பிரதிபையின் பெற்றோர்கள், புறப்படும் பொழுது, சம்பந்திகளிடம் தங்கள் பெண்ணுக்கு ஒன்றும் தெரியாதென்றும், அன்பாக நடத்தவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டு, பிரிவினால் ஏற்படும் துக்கத்தை அடக்கிக்கொண்டு, மூன்று மைலுக்குள்ளிருக்கும் தங்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் சென்ற மறுநாளே, ஜகதீஷ் படுத்த படுக்கையாகி விட்டான். பிரசித்தி பெற்ற அநேக டாக்டர்கள் வந்து பார்த்துக்

கொண்டிருந்தார்கள். பிரதீபையின் மாமனாரும் மாமியாரும், பிள்ளையின் நிலைமைக்கு வருந்தி, பிரதிபை வருத்தப்படாமல் இருக்க வேண்டி, ஜகதீஷுக்கு ஜுரமாக இருக்கிறதென்றும், மனைவி எதிரில் போகாமலிருந்தால் உடம்பு சீக்கிரம் குணமாகிவிடுமென்றும் சொல்லி, அவள் அவன் நிலைமையை அறியாதிருக்குமாறு செய்தார்கள். மேலும், அவள் வயதுடைய தங்கள் பெண்ணை, எப்போதும் அவள் கூடவே இருந்து, விளையாட்டில் பொழுதைக் கழிக்கவும், வெளியில் அழைத்துச் செல்லவும், சினிமா நாடகங்களுக்குச் செல்லவுமாகச் செய்து, அவள் ஜகதீஷின் உடல் நிலையை உணராதிருக்குமாறு செய்து வந்தார்கள்.

பேதைப் பிரதிபாவும் இவையாவும் உண்மையென்றே நம்பி, கணவனைப் பார்க்கவேண்டும் என்ற நினைப்பை வெளிக்காட்டாமல், விளையாட்டில் பொழுதைக் கழித்துவந்தாள். பிரதிபையின் பெற்றோருக்கு விஷயத்தைத் தெரிவிக்கவில்லை. இப்படியாக எட்டு நாளாயிற்று. கைதேர்ந்த டாக்டர் ஒருவர் வந்து பார்த்துவிட்டு, "இன்னும் ஐந்து நாள் தாண்டிவிட்டால் ஜகதீஷ் பிழைக்க வழியுண்டு. ஆனால், அது தாண்டுவது மிக துர்லபம்" என்று ஜகதீஷின் தந்தையிடம் தனிமையில் கூறிவிட்டார். பாவம் அவர் என்ன செய்வார். துக்கம் தாங்கவில்லை. பிரதிபையை நினைக்கும்பொழுது அவருக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. தன் மனைவியிடம் சொன்னால், பெற்றவள், எவ்விதம் சகிப்பாள்? ஆண்பிள்ளை திட மனதினால் 'வரும் வழி வந்தே தீரும். இதை முன்கூட்டி எதிர்பார்க்கவேண்டாம். எதிர்பாராத வகையிலேயே ஏற்படட்டும்' என்று விஷயத்தை தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டார்.

டாக்டரும் தன் தந்தையும் இரகசியமாகப் பேசிக்கொண்டதை ஜகதீஷ் ஒருவாறு ஊகித்துக்கொண்டான். தன் நிலைமைக்கும், பிரதிபைக்குத் தான் செய்த துரோகத்தையும் நினைத்து, மனதிற்குள் நொந்துகொண்டிருந்தான். அச்சமயம் அவன் தந்தை அவ்விடம் வந்தார்.

ஜகதீஷ் தகப்பனாரைப் பார்த்து "அப்பா! பிரதிபை இங்கிருக்கின்றாளா, பிறந்தகம் போய்விட்டாளா!" என்று கேட்டான்.

"இங்குதானிருக்கிறாள்" என்று சொல்லிவிட்டு, தன் வருத்தத்தை அவனறியாதிருக்குமாறு உடனே வெளியில் வந்துவிட்டார். அவர் மாடியை விட்டு கீழேயிறங்கும்போது அங்கு பிரதிபை நின்று கொண்டிருந்தாள். அவளிடம் "பிரதிபா, உன் மாமியார் எங்கே" என்று கேட்டார்.

"யாரோ ஜோஸ்யர் வீட்டுக்குப் போய் வருகிறேனென்று போனார்" என்றாள்.

"இதோ பார்! இந்த மருந்தை ஜகதீஷுக்கு கொடுத்துவிட்டு சற்று நேரம் அங்கேயே இரு. நான் போய் இன்னொரு மருந்து வாங்கி வருகிறேன்" என்று சொல்லி அவளிடம் மருந்தைக் கொடுத்துவிட்டு வெளியில் சென்றுவிட்டார். பிரதிபாவும் கணவனைப் பார்க்க உத்திரவு கிடைத்ததே என்ற சந்தோஷத்தோடு மருந்தை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள்.

முதல் நாள் கணவனை எந்த அறையில் சந்தித்தாளோ அதே அறைதான் இன்றும். ஆனால் அன்று உன்னதமான அலங்காரங்களுடனும் வாசனைகளாலும் நிறைந்திருந்த அறையானது இன்று, மருந்து பாட்டில்கள், ஒத்தடம் போடும் கருவிகள், பினாயில் தைலம் இவைகளால் நிறப்பப்பட்டிருந்தது. அதே மஞ்சம், ஒளியிழந்து கலைந்து கிடந்தது. மஞ்சத்தில் தலையணைகளை அடுக்கி அதில் சாய்ந்துகொண்டிருந்தான் ஜகதீஷ். பிரதிபை மெள்ள மஞ்சத்தினருகில் வந்து நின்றாள். அன்று அவன் வாரியிருந்த கிறுப்புத் தலையும், மூக்குக் கண்ணாடியும் அவன் வியாதிக்களையை சற்று மறைத்திருந்தது. இன்று கலைந்து எண்ணைப் பசையற்ற தலையும், குழி விழுந்த கண்ணும், களையற்ற முகமும் அவளைத் திடுக்கிடச் செய்தன. கண்களை மூடியிருப்பதால் தூங்குகிறானென்று நினைத்து பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். அவன் மனவேதனையை ஈசனே அறிவார். மெதுவாகக் கண்ணை விழித்து பிரதிபை நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தான். அவளைப் பார்த்ததும் அவனையறியாமல் அவன் கண்களில் ஜலம் வந்துவிட்டது. அதை அவளறியாமலிருப்பதற்காக துண்டால் வேர்வையைத் துடைப்பது போல் முகத்தை துடைத்துக்கொண்டே "பிரதிபா, ரொம்பப் புழுக்கமாக இருக்கிறது. அந்த விசிறியைப் போடு" என்றான்.

அவள் 'ஸ்விச்'சைப் போட்டு திரும்புவதற்குள் தன் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, "பிரதிபா உட்கார்ந்துகொள்" என்றான்.

"இந்த மருந்தை உங்கள் அப்பா உங்களைச் சாப்பிடச் சொன்னார்" என்று மருந்தை அவனிடம் நீட்டினாள்.

"சரிதான்! உன் கையிலேயே மருந்தைக் கொடுத்துவிட்டார்களா?" என்று மருந்தை கையில் வாங்கிக்கொண்டு, "பிரதிபா, உன் கையால் கொடுக்கும் மருந்தாவது என் வியாதியை குணப்படுத்தட்டும்" என்று சொல்லி மருந்தைச் சாப்பிட்டான்.

பிரதிபைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பேசாமல் நின்றுகொண்டிருந்தாள்.

"உட்கார்ந்துகொள், பிரதிபா" என்றான்.

பிரதிபா அவன் படுக்கையிலேயே உட்காரவந்தாள். "படுக்கையில் உட்காராதே, நாற்காலியில் உட்கார்" என்றான் ஜகதீஷ்.

நாற்காலியை கட்டிலருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள். பிறகு ஜகதீசைப் பார்த்து, "உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? என்ன செய்கிறது?" என்று கேட்டாள்.

"எனக்கா! வியாதி முற்றிவிட்டது. என் அளவுக்கு மிஞ்சின கல்வியே, எனக்கு எமனாக வந்துவிட்டது. இவ்வளவு சீக்கிரத்தில் இப்படி வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. வீணாக உன் வாழ்க்கையைக் கெடுத்துவிட்டேன். இக்கொடுமைக்கு எனக்குப் பிராயச்சித்தமே இல்லை" என்றுதயங்கித் தயங்கி மூச்சுவிட்டுக்கொண்டே துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான்.

"ஐயோ இதென்ன எங்க பாட்டி மாதிரி சொல்லுகிறீர்களே. மனிதர் என்றால் உடம்புக்கு வாராமலா இருக்கும்? எங்க பாட்டிக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால், எங்கப்பாவை 'நீ ஓரிடமும் போகாதே, என் முடிவு காலம் கிட்டிவிட்டது' என்று அரற்றுவாள். மறுநாளே எழுந்துவிடுவாள். உங்களுக்கும் இன்னும் நாலு நாளில் குணமாகிவிடுமென்று டாக்டர் சொன்னதாக உங்கள் அம்மா, ஸரஸா எல்லோரும் சொன்னார்கள். உங்கள் அப்பா இன்னொரு மருந்து வாங்கப் போயிருக்கிறார். அதைச் சாப்பிட்டால் சீக்கிரம் குணமாகிவிடும்" என்றாள்.

அவ்வளவு கஷ்டத்திலும் பிரதிபையின் களங்கமற்ற முகமும், கபடமற்ற பேச்சும், அவனையறியாமலே சிரிப்பை உண்டாக்கின. "சே! நாம் என்ன முட்டாள்தனமாகப் பேசிவிட்டோம். அவள் குழந்தை மனதையறியாமல் வாயில் வந்ததையெல்லாம் சொல்லி மாசில்லா ஹிருதயத்தை ஏன் கலக்கவேண்டும்?" என்று நினைத்து, புன்சிரிப்புடன், "ஆமாம் பிரதிபா! நீ சொல்லுவது வாஸ்தவம் தான். மனிதர் என்றால் வியாதியில்லாமலிருக்குமா? ஏதோ எனக்குக் கஷ்டமாக இருந்தது சொன்னேன். இப்பொழுது உடம்பு குணமானதும் மலையாளம் பக்கம் போய் ஆறுமாஸமிருந்து, உடம்பைத் தேற்றிக்கொண்டு வருகிறேன். நீ அது வரை நன்றாக இங்கிலீஷ் படிக்கக் கற்றுக்கொள். நல்ல உபாத்தியாயர் வைத்து பாட்டும் கற்றுக்கொள். பிறகு நாம் 'உல்லாஸப் பிரயாணம்' செல்லலாம்" என்றான்.

"ஆஹா அப்படியே செய்கிறேன். பாட்டிற்குத் தான் உபாத்தியாயர் தேடவேண்டும். படிப்பு வாஸவனே சொல்லிக்கொடுப்பார்" என்றாள்.

"இதைப்பற்றி உன்னைக் கேட்கவேண்டுமென்று நினைத்ததுண்டு. இன்று நீயே ஞாபகமூட்டினாய் அந்த வாஸவன் என்பவர் யார்? உன் தகப்பனார் அவரை அன்பாக நடத்துகிறார். உங்களுக்கு அவர் என்ன உறவு?" என்று கேட்டான்.

"எங்களுக்கு உறவு ஒன்றும் கிடையாது. நான் பிறப்பதற்கு முன்பே, என் அப்பாவும், அவர் அப்பாவும் ஒரே வீட்டில் குடியிருந்து வந்தார்களாம். அதிலேயிருந்து எங்கள் இரு குடும்பமும் மிக ஒற்றுமையுடன் இருந்து வருகின்றன. வாஸவன் கூடப் பிறந்தவர்கள் ஆறு பெண்கள். பிள்ளை இவர் ஒருவரே. இவர் இருபது வயதிற்குள்ளாகவே பி. ஏ. பாஸ் செய்துவிட்டு, கவர்மெண்டு உத்தியோகத்திலமர்ந்துவிட்டார். துவக்கும்பொழுதே எழுபத்தி ஐந்து ரூபாய் சம்பளம். இருபத்தியோராவது வயதில் இவர் தகப்பனார் இறந்துவிட்டார். அப்போது இரண்டு பெண்களுக்குத்தான் கலியாணம் ஆகியிருந்தது. பூர்வீக ஆஸ்தி ஒன்றும் கிடையாது. இவர் சம்பாத்தியத்தில்தான் குடும்பம் நடக்கவேண்டும். இவர் தான் மற்ற மூன்று தங்கைகளையும் கல்யாணம் செய்துகொடுத்தார். இன்னம் ஒருத்தி

பிருக்கிறுள். முன் கல்யாணக் கடன்களை அடைத்துவிட்டு இக்கடைசிக் கல்யாணம் நடக்க வேண்டும். தங்கைகள் கலியாணம் முடிந்த பிற்பாடுதான் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொல்லிவிட்டார். அவர் அம்மா, என் அப்பா அம்மா இவர்கள் எவ்வளவோ சொல்லியும் பிடிவாதமாகவே இருக்கிறுர். ரொம்ப நல்ல குணமுள்ளவர். என் அப்பாவுக்கு மிகவும் உதவியாக இருப்பார். இப்பொழுது இரண்டு வருஷமாக, கவர்மெண்டிலேயே அவருக்கு வீடு கொடுத்திருப்பதால், இரண்டு மைல்களுக்கப்பால் இருக்கிறுர். தினசரி வந்து என் அப்பாவைப் பார்க்காமலிருக்கமாட்டார். என் அப்பாவுக்குப் பிள்ளை மாதிரி நடந்துகொள்வார்'' என்று வாஸவன் குடும்ப வரலாறு முழுவதையும் சொல்லி முடித்தாள்.

"பிரதிபா! நான் கேட்பதை வித்யாஸமாக எண்ணுதே. என் உன் தந்தை அழகு, குணம் திடகாத்திர சரீரம் இவைகளுள்ள அவருக்கு உன்னைக் கொடுத்து, அவருக்கு உதவியளித்திருக்கக் கூடாது? பணமா பிரதானம்?''

"நான்தான் சொன்னேனே. தங்கைகள் கலியாணம் முடியுமுன் அவர் கல்யாணம் செய்துகொள்ளமாட்டார். அதற்குள் எனக்கு வயதாகிவிடும். எங்க அப்பாகூட அம்மாவிடம் இதைப்பற்றிச் சொன்னுர். 'குடிக்கக் கஞ்சியில்லை, குந்த நிழலில்லை; உத்யோகத்தை நம்பி, சம்சாரி வீட்டில் பெண்ணைக் கொடுக்கக்கூடாது' என்று சொல்லிவிட்டாள் என் அம்மா, அத்தைப் பாட்டி அபிப்பிராயமும் அதுவே. உங்களையும் உங்காத்தையும்தான் எங்க அம்மாவுக்கு ரொம்ப பிடித்திருக்கிறது'' என்றுள்.

சற்று நேரம் இருவரும் பேசாமல் இருந்தார்கள்.

"பிரதிபா!''

"என்.''

"உன்னைப் போல் களங்கமற்ற வெள்ளை மனதுடைய பெண்ணைப் பார்த்ததே இல்லை'' என்றுன்.

"நீங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாகவேயில்லை.''

"இல்லை, நீ நல்ல பெண் என்று சொன்னேன்.''

"என்னைக் கேலி பண்ணுகிறீர்கள். வாஸவன் கூட அடிக்கடி இப்படித்தான் சொல்லுவார்'' என்றுள்.

"வாஸவன் என்ன சொல்லுவார்'' என்று கேட்டுக் கொண்டே, வாஸவன் முன்னும், பிரதிபாவின் தந்தை பின்னுமாக உள்ளே வந்தார்கள். சப்தத்தைக் கேட்டுத்திரும்பிப் பார்த்தாள் பிரதிபா. அவளுக்கு கணவனருகில் தான் இருக்கும்போது அவர்கள் வந்தது மிகவும் லஜ்ஜையாகப் போய்விட்டது. உடனே ஒரே தாவலில் தந்தையைக்கூட பாராமல் கீழே சென்றுவிட்டாள்.

ஜகதீஷ் வியாதியுற்ற செய்தியை அன்று தான் வக்கீலுக்குச் சொல்லியனுப்பினுர்கள். மாப்பிள்ளையின் பலஹீனத்தைப் பற்றி அவர் சற்று அறிந்திருந்தாராதலின் செய்தி கேட்டவுடன் பதறி வந்துவிட்டார்.

அருகில் வந்து மாப்பிள்ளையைத் தொட்டுப் பார்த்தார். சற்று அவனையே உற்று நோக்கினுர். அவனும் அவரையே பார்த்தான். அவர் பார்வையானது 'தன்னைக் கொல்ல வரும் எதிரியை, திரும்பக் கொல்ல நினைக்கும் வீரனின் பார்வை'' போலிருந்தது. திருடினவன் கையுங் களவுமாக அகப்பட்டுக்கொண்டால், எதிரிலிருப்பவரை எப்படி பார்ப்பானே, அதுபோலிருந்தது ஜகதீஷ் பார்வை.

வக்கீல் மேலும் அங்கிருக்க மனமில்லாதவராய் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு வாஸவனுடன் புறப்பட்டார். ஜகதீஷ் வாஸவனின் கையைப் பிடித்து தன்னருகில் உட்காரும்படி ஜாடை காட்டினுன். வக்கீல் இதையொன்றையும் கவனிக்காமல் சம்பந்தியிருக்குமிடம் சென்றுவிட்டார்.

வாஸவன் ஜகதீஷின் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு தன் கையால் அவனை அணைத்துக் கொண்டான். ஜகதீஷ் வாஸவனின் கையை பிடித்துக்கொண்டு, "மிஸ்டர் வாஸவன்! மாமனுருக்கு என் மேல் மிகுந்த கோபம் ஏற்பட்டிருக்கிறது. வாஸ்தவம், அவர் நிலைமையில் நானிருந்தால் எனக்கும் அவ்விதம் ஏற்படுவது சகஜமே. எவ்வளவு படித்தும் என்ன பயன்? படித்த முட்டாளானேன். எதிரில் கிணறு இருக்கிறது என்று தெரிந்தும், விழமாட்டாய் என்று சொன்ன பிறர் பேச்சைக் கேட்டு கிணற்றில் விழுந்துவிட்டேன். என் பாபத்திற்குப் பிராயச்சித்தம் எது? களங்கமில்லா

கன்னிகையின் வாழ்வைக் குலைத்துவிட்டேன். என் முடிவு காலம் கிட்டிவிட்டது. நீ நான் சொல்லுகிறபடி கேட்பாயானால் நான் சற்றாவது மன நிம்மதியுடன் இறப்பேன்'' என்றான்.

"என்ன ஜகதீஷ்? இப்படிக் கோழைத்தனமாகப் பேசுகிறாய். உனக்கு ஒன்றுமில்லை. கூடிய சீக்கிரம் உன் வியாதி குணமாகிவிடும். நான் இன்று டாக்டர் அனுமந்த ராயரைக் கூட்டி வருகிறேன்; அவர்தான் இப்போது கைராசிக்காரர் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்'' என்றான் வாஸவன்.

"வாஸவன்! அனுமந்த ராயர்தான் வரட்டும், அவருக்குத் தாத்தாதான் வரட்டும்; நான் பிழைக்கமாட்டேன் என்பது நிச்சயம். என் தேகத்துடன் ஒட்டிய வியாதியால், இப்படி நடமாட்டமில்லாமல் படுப்பது இது மூன்றாவது தடவை. முன் ஒரு டாக்டர், மூன்றாவது தடவை இது திரும்புமானால் என் முடிவு நிச்சயம் என்று சொல்லியிருக்கிறார். நேற்று வந்த டாக்டரும் என் தகப்பனாரிடம் இதையே சொல்லியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். தகப்பனார் இதை மறைக்கிறார். அது போகட்டும். நடந்ததைப்பற்றிப் பேசி பயனில்லை. இனி நடக்கப் போவதைத்தான் திருத்தி அமைக்கவேண்டும். நான் வளரும் ஒரு புஷ்பச் செடியை அது புஷ்பிக்கு முன் வேரைக் கிளறி விட்டுவிட்டேன். கிளறின அவ்வேரை நீ மூடி, ஜலம் விட்டு வளர்த்து, அதில் புஷ்பிக்கும் புஷ்பத்தை அணியவேண்டும். நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுவது இதுவே. இதில் உனக்கு நன்மையே கிடைக்கும். எனக்கு நீ வாக்குக் கொடுக்கவேண்டும்'' என்றான்.

சற்று நேரம் வாஸவன் அவனைப் பார்த்துவிட்டு, அவன் எண்ணத்தை அறிந்து, சற்று யோஜித்து, "ஜகதீஷ் நீ சொல்வது சரிதான். ஆனால் வாய்ச் சொல்தான் மிச்சமே தவிர, காரியத்தை நடத்த பாழும் சமூகம் ஒருநாளும் இடந்தராது. நான் செய்யக்கூடியது என்னவென்றால், செடியை வளர்க்கிறேன்; அதில் புஷ்பிக்கும் புஷ்பத்தை நானும் பறிக்காமல், வேறொருவரும் பறிக்காமல், காவல் கார்த்து அப்புஷ்பம் ஈசுவரனுக்கே உரித்தாகும்படி செய்வேன், இது நிச்சயம். என்னை நம்பு.''

"வாஸவா, படித்துப் பட்டம் பெற்ற நீயே பின் வாங்கினால் உலகம் முன்னேறுவது எப்படி? நீ சமூகத்தை எதிர்த்து நிற்கவேண்டும்''.

"ஜகதீஷ்! பிரதிபை விஷயத்தை நினைத்துப் பார். உன் தகப்பனார் ஒரு முன்சீப், பணம் படைத்தவர். பெண்களுக்கும் பிள்ளைகளுக்குமாக குடும்ப கௌரவத்தைக் கவனிப்பவர். வக்கீல் சாதாரண பூஸ்திதியை யுடையவர். அவருக்கு பிரதிபை ஒரே பெண்ணானாலும் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற பாடுபடுபவர். நானோ ஒரு ஏழை. சம்சாரத்தில் மூழ்கி, நாலு பக்கமும் நெருக்குண்டு, மூக்கி முனகி வெளியேறப் பார்க்கிறவன். அவளை நான் ஏற்றுக்கொள்கிறேனென்றால், இவர்கள் என்னை என்ன நிலைமையில் வைப்பார்கள் என்பது நமக்குத் தெரியாதா? சற்று எண்ணிப் பார்.''

"வாஸவா! பிரதிபை களங்கமற்றவள். நான் தாலிகட்டின தோஷத்தைத் தவிற வேறொன்றும் அறியாள். பேதைப் பெண், வெள்ளை மனம். நீ அவளை ஏற்றுக்கொள்வதில் தப்பென்ன?'' என்றான்.

"நான் சொல்வதை அர்த்தம் பண்ணிக்கொள்ளாமல் பேசுகிறாயே. பிரதிபையின் குணம் எனக்குத் தெரியாதா? உன் நிலைமை நீ சொல்லாமலே எனக்குத் தெரியாதா? நடக்கக்கூடியதை நான் சொல்லுகிறேன் கேள். உன் தந்தையின் தனம், வக்கீலின் தனம் இவை இரண்டினாலும், நீ இப்பொழுது படித்திருக்கும் படிப்பிற்கும் மேலாக, நான் முன்னின்று அவளைப் படிக்க வைத்துவிடுகிறேன். வருங்காலத்தில் தேசத் தொண்டில் முன்னின்று பாடுபடக்கூடிய கல்வியறிவுள்ள சிறந்த ஸ்திரீயாகச் செய்துவிடுகிறேன். இதுவரை அவளை எப்படி என் ஏழாவது சகோதரியாக எண்ணி வந்தேனோ அதேபோல் என்றென்றைக்கும் எண்ணுவேன். இது நிச்சயம். நீ அவளைப்பற்றிய கவலையை விட்டுவிடு'' என்றான்.

"வாஸவா, பிரதிபையின் மனதில் பருவகால உணர்ச்சியோ, உலக மாயையோ, இவை ஏதும் உண்டானதாகத் தெரியவில்லை. ஏதோ, கல்யாணம், கணவன், மனைவி, சிச்ருஷை செய்யவேண்டும். இது ஸ்த்ரிகளுக்குரிய வழக்கமே, என்ற உணர்ச்சிதான் அவளிடமிருக்கிறது. அவள் மனம் கறந்த பாலுக்கு நிகரானது. இனிமேல்தான் "காதல்'' என்னும் இயற்கை உணர்ச்சி அவளுக்கு ஏற்படும் என்று நினைக்கிறேன். அது உன்னிடத்தி

லேயே திரும்புமானல் எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கும்'' என்றான்.

''ஜகதீஷ், அக்காதலை தூய்மையுடையதாக கல்வியிலும், ஈஸ்வர பக்தியிலும் செலுத்தும் படியான வழியில் அவள் மனதைத் திருத்தி விட முடியும். அவள் மனம் அத்தகையது'' என்றான்.

''வாஸவா நீ சொல்லுவதெல்லாம் சரி. நாம் நினைத்தபடி எக்காரியமும் நடக்குமென்று நம்பமுடியுமா? உலகம் எவ்வளவு மாறுகிறது? எத்தனை கஷ்டங்களை நாம் எதிர்க்கவேண்டியிருக்கிறது. ஒருசமயம் கால மாறுபாட்டினல் என் பிரதிபை நிர்க்கதியாய் நிற்க நேரிடுமானல், நீ அவளைக் கைவிடாமல் ஏற்றுக்கொள்ளுவாயா?''

''ஜகதீஷ்! உண்மையாக அப்படியான காலம் வாராது. அப்படி ஏற்பட்டுவிட்டால், உலகம், சமூகம், உறவினர் யாவரையும் எதிர்த்து நின்று பிரதிபையை ஏற்றுக்கொள்ளுகிறேன். இது சத்யம். என்னை நம்பு'' என்றான்.

''அம்மா'' என்று ஒரு நீண்ட மூச்சுவிட்டு ''வாஸவா! உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்'' என்று அவன் கைகளை கண்ணில் ஒற்றிக்கொண்டு, ''சமூகத்தின் கொடுமையை எதிர்க்க, ஈசன் உனக்கு தைரியத்தை அளிக்கட்டும்'' என்றான்.

அச்சமயம் பிரதிபையின் தாயாரும், மாமியாரும் அங்கு வந்தார்கள். பிரதிபையின் தாயார் வாசற்படிக்கருகில் ஒளிந்து நின்றுகொண்டு மாப்பிளையைப் பார்த்தாள். பக்கத்தில் நின்றுகொண்டு மாமியார் பிள்ளை குணமாகி வருவதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

வாஸவன் எழுந்து நின்று, மெதுவாக, ''நான் வருகிறேன். ஜகதீஷ்! நாம் ஏதோ பேசினோமே தவிர, நீ நிச்சியம் பிழைத்தெழுந்திருப்பாய். பிரதிபையும், நீயும் ஆனந்த வாழ்க்கை நடத்துவதைக்கண்டு நான் ஆனந்திக்கப் போகிறேன்.'' என்று சமாதான வார்த்தை சொன்னன்.

பதிலுக்கு ஒரு வறண்ட சிரிப்பு. அதனுடைய அர்த்தம் இருவரும் அறியாமலில்லை. ''நாளை வருகிறாயா?'' என்று கேட்டான்.

''அவசியம் வீடு எழுதிப் போட்டுவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிச் சென்றான்.

கீழேயிறங்கி வரும்பொழுது வக்கீல் சம்பந்தியிடம், அவர் தன்னை மோசம் செய்துவிட்டதாகக் கூறி கொண்டிருந்தார்.

''சம்பந்தி! நான் பிள்ளை சொன்னதை அலக்ஷ்யம் செய்ததின் பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன். வாழ்நாளை பங்கெடுத்துக் கொள்ளுகிறவர்களின் இஷ்டம்போல் நடக்க வேண்டுமென்பதை இனிமேலாவது தெரிந்து கொள்ளுகிறேன். நான் என்ன செய்வேன்'' என்று சமாதானம் சொன்னர் முன்சீப்.

சண்டை முற்றக்கூடாது என்பதற்காக ''நாழிகையாய் விட்டது போகலாம் வாருங்கள்'' என்றான் வாஸவன்.

''பிரதிபையை அழைத்துக்கொண்டு போகிறேன்'' என்றார் வக்கில்.

''மாப்பிள்ளை குணமானவுடன் இருவரையும் சேர்த்து அழைத்துக் கொண்டு போகலாம். தனியாக அழைத்துச் செல்லவேண்டாம்'' என்றாள் வக்கிலின் மனைவி.

''எனக்கு எல்லாம் தெரியும், வாயை மூடிக்கொண்டிரு'' என்று மனைவியை அதட்டினர் வக்கில்.

முன்சீப் பிரதிபையை அழைத்துச் செல்லும்படி சொல்லிவிட்டார்.

மாமியார் நாட்டுப் பெண்ணுக்கு மஞ்சள் குங்குமம், வெற்றிலைப் பாக்கு, புஷ்பம் இவைகளைக்கொடுத்து, நித்ய சுமங்கலியாய் வாழ வேண்டுமென்று ஆசீர்வதித்து அனுப்பினள். பிரதிபை யாவரையும் நமஸ்கரித்துவிட்டு தகப்பனருடன் வண்டியிலேறிக் கொண்டாள். அதுதான் கடைசிப் பிரிவு என்பதை அவள் எப்படி அறியக்கூடும்?

(தொடரும்)

# தியாகம்

[பூவாளூர் சுந்தரராமன்]

★

**ம**ழை சோவென்று கொட்டுகிறது. சூரைக் காற்றின் வேகத்தால் மழைத் துளிகளின் சாரல் தெருத் திண்ணையை நனைக்கிறது. ஆனால் குழந்தைகளுக்கு மட்டும் அந்த மழையின் அழகு தெரிகிறது. அதனால் தானோ என்னவோ, அவைகளுக்குக் கொஞ்சம்கூட பயமில்லை. அவைகள் திண்ணைகளில் நின்றுகொண்டு கூரையிலிருந்து விழும் நீர்த்தாரைகளை இரண்டு கைகளாலும் பிடித்து நான்கு பக்கங்களிலும் வாரி இறைத்து விளையாடுகின்றன. ஒரு வீட்டுத் திண்ணையில் மூன்று குழந்தைகள்; ஒரு பையனுக்கு ஏறக்குறைய வயது பன்னிரண்டிருக்கும். இன்னொன்று அவன் தம்பி போலிருக்கிறது; வயது பத்து இருக்கலாம். மற்றொன்று ஒரு பெண் குழந்தை ஆறு வயதில். அந்தப் பெண் குழந்தை சின்னப் பையனைப் பார்த்து "முரளீ, முரளீ, நேக்கு முதலில் ஒரு கப்பல் செய்து கொடுடா" என்று கெஞ்சிக்கொண்டிருந்தாள்.

"இரு, கொஞ்சம்; பண்ணித் தருகிறேன் கமலா."

அதற்குள் மூத்த பையன் "டே, முரளீ, அவளுக்குக் கொடுக்காதே" என்று கத்தினான்.

"ஏண்டாப்பா, உனக்கென்னவாம், முரளீ, முரளீ."

"கிட்டு, போனாப் போறது. ஒன்றே ஒன்று கொடுக்கிறேன்!"

பெரு மழை நின்றதும் தெருவில் தண்ணீர் ஓடிற்று. குழந்தைகள் மூவரும் தங்கள் காகிதக் கப்பல்களை விட ஆரம்பித்தனர்.

"முரளீ, கிட்டு வேணும்னா முதல்லே அவன் கப்பலை விடட்டும். நாம் ரெண்டு பேரும் சேர்ந்து விடலாம்!"

"சரி, கிட்டு! நீ விடு முதல்லே!"

முதலில் கிட்டுவின் கப்பல் தண்ணீரில் மிதந்துகொண்டு போயிற்று. பிறகு முரளியும் கமலாவும் சேர்ந்து தங்கள் கப்பல்களை விட்டனர். கிட்டுவின் கப்பலை நடுவில் ஒரு கல் தடுக்கி நிறுத்திவிட்டது. அதற்குப் பின்னால் வந்த இரண்டு கப்பல்களில் முரளியின் கப்பல் மட்டும் வேகமாய்ப்போய் விடவே கமலாவின் கப்பலை கிட்டுவின் கப்பல் தடுக்கி நிறுத்திவிட்டது.

"டீ, கமலா, பார்த்தயா, உன் கப்பலை என்னது நிறுத்திடுத்து" என்று கிட்டு கத்தினான்.

"போடா, தடியா, எப்பொழுதுமே உன் காரியம் அப்படித்தான். முரளீ, நீ என் கப்பலை உன்னதோடே சேர்த்துவிடு"

இந்தக் குழந்தை விளையாட்டிலும் பின்னால் வாழ்க்கையில் ஏற்படப்போகின்ற சூசகம் அமைந்திருக்கிறது என்று அப்பொழுது யாருக்குத் தெரியும்!

அந்த வீடு வக்கீல் ரங்கநாதய்யர் வீடு. அவர் ஒரு 'பேர்போன' கிரிமினல் வக்கீல். அந்தப் பையன்கள் இருவரும் அவருடைய பிள்ளைகள். மூத்தவன் கிருஷ்ணசாமி; அடுத்தவன் முரளீதரன். அந்தப் பெண் எதிர் விட்டு தாசில் வெங்கடராமய்யர் பெண் கமலா.

## 2

எல்லாவற்றினது உருவையும் மாற்றும் காலனாகிய "காலம்" தான் எவ்வளவு வேகத்தில் ஓடுகிறது! நேற்றுதான் குழந்தைகள் ஆடினபோலத் தோன்றினாலும், அந்த விளையாட்டு நடந்து இப்பொழுது வருஷம் பத்து ஆகிவிட்டது என்று யாரால் நம்பமுடியும்? வெங்கட்டராமய்யர் தலையில்கூட வழுக்கை விழுந்து வேலையில் இருந்து உபகாரச் சம்பளம் பெற்றுவிட்டார். வக்கீல் ரங்கநாதய்யரை அப்பொழுது கிளம்பின "ஜூனியர்" வக்கீல்கள் தடுமாறச் செய்துவிட்டனர். கிட்டு வயது இருபத்திரண்டு ஆகியும் கலியாணமாகாத நிலைமையிலும், முரளியைக் காலேஜில் "சீனியர் பி. ஏ." வகுப்பில் படிக்கும் யுவனாகவும், கமலா கலியாண வயது நிரம்பிய கன்னிப் பெண்ணாகவும் விளங்கினார்கள்.

கிட்டு சுபாவத்தில் ஒரு அப்பாவி. அவனுடைய ஸ்தூல சரீரமே அவனுடைய மௌட்டீகத்திற்கு இன்னும் அதிக சோபையைக் கொடுத்தது. அவன் பயப்படவேண்

டியவற்றில் பயப்படமாட்டான். அதிகாரம் பண்ணி வேலை வாங்கவேண்டிய வேலைக்காரர்களிடம் கெஞ்சுவான். எதற்கெடுத்தாலும் சம்பந்தமில்லாமல் "சாளவாய்" ஒழுக "சளபள" என்ற பேச்சு. அவனுக்கு இரண்டு மூன்று வரன்கள் வந்து தவறிவிட்டன.

இதற்கு ஈடுசெய்ய முரளி நல்ல அழகன். மேலும் ரொம்ப சரஸி. காம்பீரியமான தோற்றமும், அவன் புன்சிரிப்பு தவழும் முகமும் எவரையும் அவனிடம் ஒரு அலாதி பிரியத்தைக் காட்டச் செய்தன. கிட்டுவிற்குப் பெண் கொடுக்க வந்தவர்கள், முரளியைப் பார்த்ததும் அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி மாறிவிட்டார்கள். அண்ணனுக்கு விவாஹம் ஆகாமல் தம்பிக்கு எப்படி நடத்துவது?

தை மாதம் போய் மாசி, பங்குனி என்று மாதங்கள் கழிந்தன. ஆனால், கிட்டுமட்டும் பிரம்மசரிய ஆசிரமத்தை விட்டுக் கிளம்பவில்லை. அவனுடைய பெற்றோர்கள் அவனை எப்படியாவது இல்லற வாழ்க்கையில் புகுத்த முயன்றனர். அவர்களுடைய முயற்சிகளும் அவ்வளவு சுலபமாகப் பலிப்பதாக இல்லை.

ஒரு நாள் இரவு போஜனம் ஆனதும், ரங்கநாதய்யர் மாடியில்இருந்து முரளியை அழைத்தார். "அப்பா கூப்பிட்டாயாமே" என்று கேட்டுக்கொண்டே முரளி வந்தான்.

"ஆமாம், உன்னிடம் ஒரு விஷயம் பேசவேண்டும். நன்றாகக் கவனி. நிதானமாக யோஜித்துச் சொல்லு. இப்ப என்ன மாதம் தெரியுமா?

"ஜுன் மாதம்".

"தமிழ் மாதம் சொல்லு. வைகாசி மாதம் இன்றைக்கு தேதி இருபத்தி ஒன்பது. இன்னும் இரண்டு மூணு நாள் இருக்கு இந்த மாதத்திலே. இந்த வருஷமும் கிட்டுவுக்குக் கலியாணம் நடக்காதுபோலத் தோணுகிறது. என்ன பண்ணலாம்? நானும் எவ்வளவோ "சாக சக்யங்கள்" எல்லாம் செய்து பார்க்கிறேன். ஒன்றும் சரியா வரல்லே. காரணம் உனக்கே தெரியும்!"

"நீங்க பெரியவாள்ளாம் இருக்கும்பொழுது நான் என்ன செய்யணும்!

"அவசரப்படாதே, பாரு. இப்ப உனக்கு எதிராத்து வெங்கடராமன் தன் பெண் கமலாவை கொடுக்கணும்னு ஒரு காலாலே நிக்கறான். அவனையே உன் அண்ணனுக்குக் கொடு என்றால் "மீன மேஷம்" பார்க்கிறான்.

"அது அவாளுடைய இஷ்டம்னு அப்பா"

"ஏதோ, அப்பா, நாங்க அவனைப் பெத்துட்டோம். கலியாணம் பண்ணிவைக்கிற பொறுப்பு உன்னைச் சேர்ந்தது. நீ இப்ப இன்னும் நாலைந்து வருஷத்துக்குக் கலியாணம் செய்துகொள்ளப் போறதில்லேனு எல்லாரிடமும் தெரிவித்துவிட்டால் ஒரு வேளை வெங்கட்டராமன் வழிக்கு வந்தாலும் வரலாம். நானும் நாணு சாஸ்திரிகளை வைத்து அந்தப் பெண்ணை உங்கண்ணுவுக்கு ஏற்பாடு செய்யப் பிரயாசைப் படுகிறேன். இதுவும் நடக்காவிட்டால் அவன் "ஆத்தங்கரைப் பிள்ளையார்" தான்!"

"அவா வேறு எங்கேயாவது பார்த்தால்"?

"அதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். அவன் நம்ம சம்பந்தத்தையன்னு முக்கியமாக எதிர்பார்க்கிறான்."

"சரி அப்படியே செய்துடலாம் அப்பா."

"என்னமோப்பா, இந்த கிழவன் வார்த்தைக்கு இவ்வளவு மதிப்புக் கொடுத்ததிற்கு நான் முன் ஜன்மத்தில் மிகவும் பூஜாபலன் செய்திருக்கவேண்டும்" என்று சொல்லி ஒரு முடிவு செய்தார்.

முரளியினுடைய உதடுகள்தான் அந்த சம்மதத்தைத் தெரிவித்தன. அதுவும் அவனுடைய மூளை ஒரு முடிவிற்கும் வராமல் குழம்பிக்கொண்டிருக்கும் பொழுது அவனுடைய மனம் தன்னுடைய முடிவால் ஏற்படப் போகும் பலாபலன்களை நினைத்துத் தடுமாறிக் கொண்டிருக்கும்பொழுது, அவனுடைய ஹிருதயம் அசாதாரணமாக 'படபட' வென்று அடித்துக்கொண்டிருக்கும் பொழுது தான் இந்த முடிவை அவனுடைய வாய் வெளியிட்டது! அவனுடைய மனக்கண்முன் அவள்—ஆம், கமலாதான்—என்ன மனோஹரமான முல்லைச் சிரிப்புடன் விஷமக் கண்களால் ரகசியம் பேசுகிறாள்! அவளுடைய வல்லிக்கொடி போன்ற லலிதமான உடற்கட்டு எங்கே? கிட்டுவின் ஸ்தூல ஊளைச் சதைப் பிண்டம் எங்கே? அவளுடைய ஞான ஜோதியுடன் கூடிய ஆடல், பாடல், பணிவிடை இவற்றை ஆண்டு அநுபவிப்பதற்கு அவனுடைய மூத்தண்ணாவிற்குத் தெரியுமா

என்று நினைத்தபொழுது கமலாவிற்கு விதி செய்த சதியை பொறுக்கமுடியாததாகத்தான் தோன்றியது. ஆனால் தன்னுடைய முடிவு வேறு விதமாக இருந்திருந்தால், தன்னுடைய பெற்றோர்களின் நிரந்தரமான துக்கத்துடன் தன் சகோதரனுடைய, பழிப்பிற்கிடமான "நித்ய பிரம்மசரியமும்" அவனுடைய அறிவைக் கலக்காமல் விடவில்லை. அந்த சமயத்திற்கு அவனுடைய யோஜிக்காத அந்த முடிவுதான் சரியானது என்று அவன் நினைத்துக்கொண்டு மனதைத் தேற்றிக்கொள்ள ஆரம்பித்தான்.

## 3

முரளியின் கலியாணம் நாலைந்து வருஷங்களுக்கு 'ஈரங்கி' போடப்பட்டிருக்கிற விஷயம் சேஷிப்பாட்டிக்கும் நாணு சாஸ்திரிகளுக்கும் சொன்ன பிறகு கூட, ஊரிலுள்ள கலியாணப் பெண்கள் வீடுகளில் தெரியாமலிருக்க முடியுமா? அதுவும் வெங்கடராமய்யர் வீட்டில் பலமுறை அறிவிக்கப்பட்டது. வெங்கடராமய்யர் 'மளமள' வென்று இளம் வாழைக் கன்றைப் போல் வளர்ந்து நிற்கும் தன் பெண்ணின் கலியாணத்தை எத்தனை வருஷம் தள்ளிப் போட முடியும்? அதிகம் போனால் இந்த தை வரையிலும் பொறுக்கலாம்.

மேலும், சொன்னவர்கள் முரளிக்கு யாரோ தூரத்து உறவிலே, பம்பாய் 'அக்கௌண்டண்ட்' ஆபீஸில் மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர் ஒருவர் பெண்ணைக் கொடுக்கப் போகிறார் என்றும், அந்தப் பெண்ணிற்கு இப்பொழுது வயது பன்னிரண்டுதான் ஆகிறதென்றும், அவளுக்கு 'வயது' வருவதற்குள் முரளியைச் சீமைக்குப் படிக்க அனுப்பப் போகிறார்கள் என்றெல்லாம் 'கதை' கட்டிவிட்டார்கள். அதோடு மட்டும் நிற்கவில்லை; கிட்டுவிற்குக்கூட ஒரு பெண் நிச்சயம் செய்யப்பட்டு அநேகமாக அந்த ஆனி மாதத்திலேயே கலியாணம் கூட ஆகிவிடுமென்றும் சொல்லி வைத்தார்கள். உடனே வெங்கடராமய்யர் விழித்துக்கொண்டார். கமலாவை கிட்டுவிற்காவது கொடுக்க நாணு சாஸ்திரிகளுடன் முயன்று அதற்கு ரங்கநாதய்யருடைய சம்மதத்தையும் பெற்று விட்டார். ஆனி மாதத்திலேயே ஒரு தேதியும் முகூர்த்தத்திற்கு வைக்கப்பட்டது.

தன்னை முரளிக்குக் 'கொடுக்காமல்' கிட்டுவுக்குக் கலியாணம் செய்து கொடுக்கத் தீர்மானிக்கப்பட்ட விஷயம் கமலாவின் காதில் விழுந்ததும் அவளது மனம் பகீரென்றது. அவளுடைய கோமளமான ஹ்ருதயத்தில் எழுதப்பட்டிருந்த, இல்லை, செதுக்கப்பட்டிருந்த எண்ணங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன என்பதை அவள் எண்ணும்பொழுது அவளுடைய மனதில் இன்னதென்று விவரிக்க இயலாத துக்கம் வந்து சூழ்ந்துகொண்டது. முரளியுடன் சிறு வயதில் இணைபிரியாது விளையாடின ஆடல்கள் யாவும் இப்பொழுது கனவோ என்று அந்த ஏழை நெஞ்சம் நினைக்கும். அன்று ஒரு மழை நாள் ஆடின காகிதக் கப்பல் விளையாட்டு ஏனோ அவள் மனதை விட்டு வெகு நாள் வரை நீங்கவில்லை. இன்றும் முரளியினுடைய வீட்டில்தானே வாழ்க்கைப் படுகிறோம் என்ற ஒரே நினைவு அவளுடைய ஹிருதயத்தின் ஒரு மூலையில் சிறிது திருப்தியை அளித்தது.

## 4

ஆனி மாதத்தில் கிட்டுவிற்கும் கமலாவிற்கும் கலியாணம் நடந்தது. வருஷங்கள் இரண்டு மூன்று என்று ஓடினவே தவிர கமலாவின் மனதில் இருந்த ஏக்கம் ஒழியவில்லை. மூன்று வருஷங்களுக்குப் பிறகு முரளிக்கு உண்மையாகவே ஒரு 'அக்கௌண்டண்ட்' ஆபீஸர் தன் பெண்ணைக் கொடுத்தார். சியாமளா மூக்கும் முழியுமாக வார்த்துவிட்ட ஸ்வர்ண விக்கிரஹம் போல் இருந்தாள்.

கமலாவிற்கு முரளிக்குக் கலியாணம் ஆகாத வரையிலும் இருந்த ஏக்கங் கலந்த துக்கம், அவனுடைய கலியாணத்திற்குப் பிறகு மிகவும் அதிகமாயிற்று. ஆம், அவளுடைய ஹிருதய புருஷனுடைய ஹிருதய கமலத்தில் இன்னொருவள் வந்து குடிகொண்ட பிறகு எந்தப் பெண்ணின் மனம்தான் சஞ்சலப்படாமல் இருக்கும்? அவள் சஞ்சலப்படுவது பாபம் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அவள் ஒரு பேதைதானே! சுபாவமாகவே மிகவும் ரஸிகனான முரளியும் அவனுடைய மனைவியும் சிரித்து விளையாடிக் கொண்டிருப்பதைக்கண்டு அவளுடைய ஹிருதயம் உடையாமலிருப்பது அதிகம்தான். சில வேளைகளில் அவளுடைய

மனம், ஒன்று தானுவது அல்லது தன் பார்த்தா கிட்டுவாவது இந்த உலகில் பிறவாமல் இருந்திருக்கக் கூடாதா என்று நினைக்கும். அதிலும் ஒரு தவறு இல்லை. வழக்கமாகவே முரளி இரவில் நேரம் கழித்தே வருவான். உடனே அவனுடைய மனைவி சிரித்துக்கொண்டும் கேலி செய்துகொண்டும், பரிமாறுவதும் அவனும் பதிலுக்கு பதில் அவளுடன் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டும், சாப்பாட்டிற்குப் பிறகு சியாமளா வெற்றிலைப் பாக்கு தட்டுடன் முரளியின் படுக்கை அறைக்குப் போகும்பொழுது அவளுடைய கால் கொலுசுகளிலிருந்து கிளம்பும் சப்தமும் அவளுக்கு என்றைக்காவது தூக்கத்தைக் கொடுத்திருக்குமா?

## 5

முரளியின் மனைவி 'பிள்ளைப் பேற்றிற்காக' தன் பிறந்தகம் போயிருந்த சமயம் அது. அப்பொழுதெல்லாம் முரளி வீட்டிற்குக் குறித்த வேளைக்கு வந்துவிடுவான். அந்த சமயம் அவனுடைய தாயார்தான் அவனுக்கு பரிமாறுவது வழக்கம். ஒரு நாள் இரவு முரளி சினிமா பார்த்துவிட்டு வெகு நேரம் கழித்து வந்தான். அவன் தாயாருக்கு அன்று மத்தியானத்திலிருந்து தலைவலியும் ஜுரமும் அதிகரித்து படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அன்று வீட்டில் சமைப்பது முதலிய சகல வேலைகளையும் கமலாதான் செய்திருந்தாள். முரளி வந்ததும் அவனுக்கு இலை போட்டு பரிமாற ஆரம்பித்தாள். அன்றுதான் அவனை நேருக்கு நேர் தனியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் அவளுக்கு வாய்த்தது!

ஒரு இயந்திரம் போலத்தான் பரிமாற வேண்டுமென்று கமலா நினைத்திருந்தாள். ஆனால் அவள் உடல் பதறுவதையும் மனம் 'படக் படக்'கென்று அடித்துக்கொள்வதையும் அவளால் எப்படி நிறுத்த முடியும்? ஒருவித உணர்ச்சி வெள்ளத்தில் அவள் திக்குமுக்காடுகிறாள் என்பதை முரளியும் அறிந்துகொள்ளாமலில்லை. ஒரு முறைதான் அவர்களுடைய கண்கள் நான்கும் சந்தித்துக் கொண்டன. என்றாலும் அவை நான்கும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டவற்றை எந்த பாஷையாவது தன்னுடைய அர்த்த புஷ்டியான சொற்களால் சொல்லியிருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

தலை குனிந்த வண்ணம் சாப்பிட்டுக்கொண்டிருந்தவன் காதில் ஒரு விம்மல், இல்லை, ஒரு பொருமல் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தவன் கண்களில், நீர் மல்கிய கண்களுடன் கமலாவின் முகம் தென்பட்டது. பிறகு கையோ வாயோ தங்கள் வேலைகளை முற்றிலும் மறந்தன.

"கமலா, அழாதே, நீ அழுதால் நான் எழுந்து வெளியே போய் விடுவேன்."

கமலாவிற்கு விம்மலுடன் அழுகை வந்தது; மையுடன் கலந்த கண்ணீர் வந்தது. ஆனால் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. முரளியின் கண்களிலும் நீர் சுரக்க ஆரம்பித்தது. அவன் மெதுவாக "உன் கண்கள் கலங்கினால் என் மூளை கலங்கக் கேட்கவேண்டுமா?" என்று கேட்டான்.

"இப்படி பாரா முகமாக இருக்க எங்கு கற்றுக்கொண்டீர்கள்?"

"உன்னைத்தான் எப்பொழுதும் மறக்கமுடியாமல் மறந்து கொண்டிருக்கிறேனே. ஆறுகின்ற புண்ணை இன்று நன்றாகக் கிறிவிட்டாய்"

"சியாமளா வந்ததும் தானே ஆறிவிடுகிறது" இவ்வார்த்தைகள் பொறுமையால் தான் வெளிவந்தன.

"அவளுடைய வாழ்க்கையில் அவ்வளவு ஆசாபாசமாகவாவது இருக்க உனக்கு மனமில்லையா? என்னை மன்னிக்க மாட்டாயா, கமலா!"

"எப்படி உங்களை மன்னிக்க முடியும்? அன்று காகிதக் கப்பல் செய்து விளையாடினது ஞாபகம் இருக்கிறதா? நான் உங்களுடைய கப்பலுடன்தான் சேர்த்து அன்று விட்டேன். என் தலையெழுத்து இப்படி எழுதியிருக்கும் பொழுது நான் நினைத்தபடி எப்படி நடக்கும்? அன்றும் தாறுமாறாகப் போச்சு; இன்றும் இப்படியே ஆச்சு; எவ்வளவு மனக்கோட்டைகள் கட்டி வைத்தேன்? எப்படியெல்லாம் இந்த ஜென்மம் வீணாகப் போயிடுத்து? என்னை இப்படிக்கெடுக்க கடவுள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பார் என்று நான் கொஞ்சங்கூட நினைக்கவில்லை."

"கமலா, கொஞ்சம் பொறு. இன்று உனக்குச் சொல்லுகிறேன். நாம் இரண்டு பேரும் ஒருவருடைய வாழ்க்கையைச் சந்தோஷமாக்கிக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாம்

எவ்வளவு வேண்டுமானாலும் தியாகம் செய்ய லாம்!''

"தியாகமாம் தியாகம், என்ன தியாகம் வேண்டிக் கிடக்கு? வாழ்க்கையில் அபிலாஷை இல்லாதபொழுது!''

"நீ நினைக்கிறது தப்பு; எல்லாருடைய அபி லாஷைகளும் நிறைவேற முடியுமா? ஒருவரு டைய ஆசையையாவது நிறைவேற்ற நாம் ஏன் நம்முடையவற்றை விட்டுக் கொடுக்கக் கூடாது? அதுவும் அது யாருக்காக என்று நீ எண்ணுகிறாய்?''

"என் மனம் யோஜனைக்கே ஓடவில்லை."


பிருந்தாவன்ஸ் கிரைப் கார்டியல்.




குழந்தைகளின் பாதுகாப்பிற்கு மிகச் சிறந்த மதுரமான பானம். பால்கட்டி, அஜீர் ணம், வயிற்றுவலி, வாந்தி, இறைப்பு, மல பந்தம், கணை, கக்குவான், இருமல் முதலான வியாதிகளையும் போக்கி, ஆரோக்கியத்தை யும் புஷ்டியையும் அளிக்கும் சிறந்த திவ்யா மிருதம்.

6 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-4-0

டாக்டர்களால் மிகக சிபார்சு செய்யப்பட்டது.

எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.


"அவன் எனக்கு அண்ணன், உனக்கு பர்த்தா; இப்பவாவது உனக்குத் தெரிந்திருக் கும்!''

கமலா இதைக் கேட்டதும் அவள் வாய் அடங்கிவிட்டது. முகமும் தெளிவு பெற்றது. அவன் சாப்பிட்டுவிட்டு வெளியேறுகிற வரை யில் இருவரும் ஒரே மௌனந்தான்.

## 6

இரண்டு வருஷங்களுக்குள் என்ன காரணத்தாலோ கமலா தீராத மனோ வியாதியால் பிடிக்கப்பட்டாள். இங்கி லீஷ் வைத்தியம், நாட்டு வைத்தியம், யுனானி வைத்தியம் என்று வைத்திய முறைகள் மாறி னவே ஒழிய கமலாவின் நோயின் கொடுமை மாறவில்லை. ஒரு நாள் காலை எட்டு மணிக்கு அவளுடைய நிலைமை மோசமாகிவிட்டது. சுவாசம் 'கர்கர்' என்று இழுக்கிறது. "உங்க ளைத்தானே....... உங்கள் தம்பியை...... கூப்பி டுங்கோ'' என்று நிறுத்தி நிறுத்தி பெருமூச்சு விட்டுக்கொண்டே கிட்டுவிடம் சொன்னாள்.

முரளி தன் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு அரற்றிக் கொண்டே வந்து நின்றான். அவனைத் தன் அருகில் வரச்செய்து அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டே "தியாகம் எப்படி....இருக்கு; நான் போயிடு வேன்...இன்னொருத்தியைப் பிடித்து...அவ ருக்குக் கட்டிவிட்டு...மறு காரியம் பார்க்க ணும்....நீங்க...நீங்க சரின்னு சொன்னாத்தான் ...என் மார் வேகும்'' என்று சொன்னபொ ழுது அவளுடைய கண்களிலிருந்து நீர்வழிந்து கன்னங்களில் ஓடிற்று.

"அதைவிட வேறு வேலை கூட உண்டா எனக்கு?'' என்று முரளி விம்மிக்கொண்டே சொன்னதைக் கேட்டுக் கொண்டு கமலாவினு டைய கண்கள் நிரந்தரமாக மூடின.

முரளி இப்பொழுதும் தன் அண்ணன் கிட்டுவிற்காக ஒரு பெண்ணைத் தேடிக்கொண் டிருக்கிறான்.

# நல்ல புத்தி

எஸ். கிருஷ்ணன்

"மதனி, நான் பி. ஏ. முதன்மையாகத் தேறிவிட்டேன். எனக்கு நீ என்ன சன்மானம் கொடுக்கப் போகிறாய் சொல்லு?" என்று கேட்டுக்கொண்டே நான் சமயல் அறையில் நுழைந்தேன்.

மதனி நான் சொன்னதைக் கேட்டு எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தாள் என்பதை அவள் முகம் காட்டிற்று. அவள் சிரித்துக்கொண்டே "நான் என்ன தரவிருக்கு? நீதான் மதனிக்கு அம்பாரம் அம்பாரமாய்ச் சம்பாதித்துத் தரப் போகிறாயே" என்றாள். நான் வெட்கித் தலை குனிந்தேன்.

"போ மன்னி, சிறு குழந்தையாயிருந்த போது ஏதாவது சொன்னால் அதையே வைத்துக்கொண்டு கேலியா பண்ணுகிறாய்?" என்றேன்.

"கேலியில்லை கோபு. நானும் பகவானை அது தான் கேட்கிறேன். என் குழந்தை நிறைய சம்பாதித்துசௌக்கியமாயிருப்பதைப்பார்க்க நான் விரும்புவது கேலியா கோபு?" என்று அன்பொழுகக் கேட்டாள்.

அடுப்பங்கரைக்கு அவள் சென்றாள். நான் வாசற்புறம் வந்தேன். என் மனதில் 'என் குழந்தை' என்ற சொற்கள் பற்பல ஞாபகங்களை எழுப்பின. அன்றும் நான் அவள் குழந்தை; இன்றும் அப்படியே. அவள் வயிற்றில் பிறந்த குழந்தையில்லை; அவளை நான் அம்மா என்று கூப்பிடுவதில்லை. ஆயினும் அவள் என்னை வேறாக எண்ணிக் கொண்டதாகக் காணோம்.

ஃ ஃ ஃ

இன்று போல் நினைவிருக்கிறது. அன்று எனக்கு எட்டு வயது. என் தாய் என்னை என் அண்ணன், மதனி இருவரிடமும் ஒப்படைத்து விட்டுத் தன் கணவனைத் தேடி வானுலகம் சென்றாள் அந்த வருஷம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் என் மதனியின் அத்தை விருந்தாளியாக வந்திருந்தாள். மத்தியானம் சாப்பிட்டுவிட்டு நான் கூடத்து மேஜை மேல் உட்கார்ந்திருந்தேன். மதனியும் அத்தையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அண்ணா ஆபீசுக்குப் போயிருந்தான். அவனுக்கு தாலுக்காக் கச்சேரியில் கிளார்க் வேலை.

மதனி என்னிடம், "போய் சுண்ணாம்பு எடுத்து வா அப்பா" என்றாள்.

நான் எழுந்தேன். மதனியின் அத்தை மதனியிடம் "இன்னிக்கு நீ 'அப்பா கண்ணே' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிரு. நாளைக்கு அவன் 'நீ யார்' என்று கேட்கட்டும். அக்குப் பறவையைத் தெரியுமோ, ராஜம்? அது தன் முட்டைகளை காக்காய் முட்டைகளுடன் போட்டுவிட்டு நிச்சிந்தையாய்இருந்து விடுமாம். காக்காய் அந்த முட்டைகளையும் அடை காக்குமாம். கடைசியில் ஒரு நாள் அக்குப் பறவைக் குஞ்சுகள் பறந்து போய் விடுமாம். அது போல நீயும் உன் மைத்துனனை வளர்த்து விடு. நாளைக்கு அவன் என்ன செய்கிறான் பாரேன்!" என்றாள்.

மதனியின் மலர்ந்த முகம் ஒரு கணம் கோபத்தால் சிவந்தது அவள் சட்டென்று என்னைப் பார்த்தாள். மறு நிமிஷம் உதடுகளில் புன்னகை தவழ அவள் சொன்னாள். "என்ன வார்த்தை சொல்கிறாய் அத்தே? என் குழந்தை கோபு அப்படியிருக்கமாட்டான். 'அப்படித்தானே கோபு'" நான் வெட்கத்துடன் தலையையசைத்துக்கொண்டு சுண்ணாம்பு எடுக்கச் சென்றேன். திரும்பிக் கூடத்துக்கு வரும் போது மதனி சொல்வது காதில் விழுந்தது. "கொஞ்சம் பிடிவாதம் அதிகம். ஆனால் சின்னப் பையன்தானே. கொஞ்ச நாள் போனால் சரியாய் விடுவான்" என்று.

மதனியின் அத்தை அதற்கு மறுமொழி கூறவில்லை. என்னை ஏற இறங்கப் பார்த்தாள். நான் வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு வெளியே சென்று விட்டேன்.

அன்றைக்குச் சாயங்காலமே மதனியின் அத்தை ரயிலுக்குப் புறப்பட்டாள். வாசலில் மாட்டு வண்டி நின்றது. நான் வண்டியருகே நின்றிருந்தேன். மதனியின் அத்தை வண்டியில் ஏறிக்கொண்டு என்னைக் கூப்பிட்டு என் கையில் ஒரு முழு ரூபாயை

★

வைத்துவிட்டுச் சென்றாள். "கோபு, சமத்தாய் மன்னியைத் தொந்தரவு செய்யாமலிருக்கவேண்டும். ஆகட்டுமா அப்பா". வண்டி நகர்ந்தது. மதனியின் அத்தை செய்த உபதேசத்தால் எனக்குச் சொல்லமுடியாத கோபம். ஆனால் அந்த வெள்ளி ரூபாய் மதனியின் அத்தைமேல் கோபம் கொள்ளவிடவில்லை. நான் எண்ணினேன் "மதனி சொல்லித்தான் அவள் இப்படி அவமானப்படுத்தியிருக்கவேண்டும்." இதற்குள் மதனி என்னிடம் கேட்டாள். "கோபு, அந்த ரூபாயை மன்னிக்குக் கொடு. அப்புறம் உனக்கு வேணுமென்கிறபோது தருகிறேன்". எனக்கு எரிகிற தீயில் எண்ணெயூற்றினாற்போலிருந்தன அவ்வார்த்தைகள். நான் அன்று செய்ததுக்காக இன்னும் வருத்தப்படுகிறேன். அந்த ரூபாயை மதனியின் முகத்தில் வீசி எறிந்துவிட்டுச் சொன்னேன்: "இந்தா, வந்தவர்கள் கிட்ட எல்லாம் இல்லாததும் பொல்லாததும் சொல்லு. அதுக்குக் கூலி இது. என் அம்மாமட்டும் இருந்திருந்தால் இப்படிச் சொல்வாளா?"

இதுவரை பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த மதனி, "சிவ சிவ" என்று சொல்லிவிட்டு தலையில் கையை வைத்தாள். நான் பேசாமல் விளையாடப் போய்விட்டேன். ஆனால் அன்று என் மனதில் விளையாட்டைப்பற்றிய உற்சாகமே இருக்கவில்லை அன்றுவரை நான் ஒரு வார்த்தை சொல்லி அதற்காக மதனி கண்ணீர் வடித்ததில்லை. நான் அன்று அவ்வளவு கொடிய வார்த்தைகள் என்ன சொல்லிவிட்டேன் என்று யோசித்தேன். அவளுடைய நீர் தேங்கிய பார்வை என் மனதில் ஆழமாய்ப் பதிந்தது. நான் எண்ணலானேன். 'நேற்றுவரை அவள் மடியில் தலைசாய்த்துத் தூங்கினேன். இன்றைக்கு அவள் முன் எப்படிப் போவது? இனிமேல் அவள் என்னை கோவிலுக்குஅழைத்துக்கொண்டுபோவாளா?' விளையாட்டு முடிந்து வெகு நாழிகை வரை நான் வீட்டுக்குப் போகவில்லை. நன்றாயிருட்டின பிறதுதான் வீட்டுக்குப் போனேன். அண்ணா சமையலறையில் சாதத்தட்டின்முன் உட்கார்ந்திருந்தான். மதனி அந்தத் தட்டில் சாதம்பரிமாறிக்கொண்டே சொல்வது காதில் விழுந்தது "குழந்தையைக் காணவில்லையே". எனக்கு அப்படியே கதறிக்கொண்டு மதனியின் காலில் விழுந்து விடலாமா என்று தோன்றியது. ஆனால், மதனி மேலும் சொன்ன வார்த்தைகள், "இன்றைக்கு சாயந்திரம் அவன் என்ன வார்த்தை சொன்னான் தெரியுமா? நான் எவ்வளவு செய்தாலும் தாய்க்குத்தாயாய் இருந்தாலும் அவன் என்ன மாதிரிப் பேசுகிறான் தெரியுமா?" என்று கேட்பதும், அதற்கு அண்ணன், நீ கொடுக்கிற செல்லத்தினாலேயே "பையன் ரொம்பக் கெட்டுப் போகிறான்" என்று மறுமொழி கூறியதும், எல்லாம் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கிவிட்டது. நான் உள்ளே போகாமல் திண்ணையில் படுத்துக்கொண்டுவிட்டேன்.

இரவு எட்டரை மணியிருக்கும். அண்ணன் மதனியிடம் சொல்வது காதில் விழுந்தது. "அந்த ஹரிக்கேன் லைட்டை எடு. கழுதை எங்கே போயிருக்கானோ? பகல் முழுதும் உழைத்தாலும் ராத்திரி வீட்டில் நிம்மதியில்லை. நல்ல தம்பி வாய்த்தான்! போய்த் தேடி வருகிறேன்" என்று அலுத்துக் கொண்டு வெளியே வந்தான். மதனியும் விளக்குடன் திண்ணைக்கு வந்தாள். அண்ணா என்னைப் பார்த்ததும் 'கோபூ" என்று கூப்பிட்டான். நான் ஆத்திரம் பொங்க மறுமொழி கூறினேன். "என்ன." "என்னடா கத்துகிறாய்"? என்று முதன் முறையாய் அண்ணா என்னை அடித்தான். என்னைக் கையைப் பிடித்து எழுப்பி வீட்டுக்குள் தள்ளினான். விரைவாய் உள்ளே தள்ளப்பட்ட என்னை மதனி வந்து பிடித்துக்கொண்டாள். நான் அவளை கையைத் திமிறிக்கொண்டுபோய் கூடத்தின் ஒரு மூலையில் படுத்தேன். மதனி என் அருகே வந்து என் கையைப் பிடித்துத் தூக்கினாள். ஆனால் நான் கையை உதறிக் கொண்டு திரும்பிப் படுத்தேன். இதற்குள் அண்ணா கத்தினான்— "பசித்தால் தின்கிறான் தானே. நீ போய்ச் சாப்பிடு, ராஜம்." அவன் அத்துடன் வாசற்புறத்து அறைக்குத் தூங்கப் போய்விட்டான். மதனி என்னிடம் கெஞ்சாத வண்ணம் கெஞ்சினாள். ஆனால் கோபம் தலைக்கேறியிருந்த நான் அவள் என்னை வெறுப்பதாக எண்ணினேன். நான் சொன்னேன்— "எனக்கெல்லாம் தெரியும். நான் பட்டினி கிடக்கணும் என்றுதான் உனக்கு ஆசை. சந்தோஷமாச்சா? எனக்கு நீ சாதம் போடவேண்டாம். இப்படி அடி வாங்கித் தந்து கொல்லவும் வேண்டாம். வேணுமானால் என் கழுத்தைத் திருகிவிடு,

ஆனால் இன்றைக்கு என்னாணை என்னைச் சாப்பிடக் கூப்பிடாதே".

மதனி என்ன செய்கிறாள் என்று பார்ப்பதற்காகத் திரும்பினேன். அவள் வாயைத் திறக்கவில்லை. கண்கள் கண்ணீரைப் பெருக்கின. இடையிடையே விம்மும் சத்தமும் கேட்டது. அந்த இடத்தில் கல்லாய் உட்கார்ந்திருந்தாள். வாயைத் திறந்தால் கதறிவிடுவோம் என்ற பயத்தினாலோ என்னமோ அவள் கீழ் உதட்டைப் பற்களால் இறுகக் கடித்துப் பிடித்துக்கொண்டிருந்தாள். இப்படியே எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாள் என்று சொல்ல முடியாது. நான் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தேன். கொஞ்ச நேரமானதும் அண்ணன் குரல் கேட்டது— "ஏண்டி விளக்கை எரியவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்? போய்ச் சாப்பிடு. அவன் பசித்தால் தானே எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிடட்டும்." அண்ணா மறுபடியும் உள்ளே சென்றுவிட்டான். கொஞ்ச நேரத்துக்குப் பின் மதனி விளக்கைச் சின்னதாக்கிவிட்டு என் வயிற்றைத் தொட்டுப் பார்த்தாள். பிறகு எழுந்தாள். அவள் கன்னங்களிலிருந்து ஓடிய சுடு கண்ணீர் என் கன்னத்தில் விழுந்தது. அவள் படுக்கப் போய்விட்டாள் சாப்பிடாமலே!

மறுநாள் திங்கட்கிழமை. நான் காலையில் எழுந்து பல்லுத் தேய்த்துவிட்டு புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தேன். உடனே மதனி என் பக்கம் வந்து என் கைகளைத் தூக்கிக்கொண்டு சொன்னாள்— "எழுந்திரு. சமையல் ஆகிவிட்டது. நேற்றே சாப்பிடவில்லை பார்."

நான் சொன்னேன்— "எனக்குச் சாதம் வேண்டாம்."

மதனி என்னைத் தூக்கி நிற்கவைத்து என் தலையில் பறந்துகொண்டிருந்த மயிரை ஒதுக்கிக்கொண்டு சொன்னாள்—"நீ சாப்பிடாவிட்டால் அப்புறம் நானும் சாப்பிடமாட்டேன். மன்னி பட்டினி கிடந்து சாகணும் என்று ஆசைப்படுகிறாயா? வா, என் கண்ணே, என்னப்பா வா" என்று அவள் அழைத்தபோது நான் அழுதுவிட்டேன். சமையல் அறையில் என்னைத் தட்டின் முன் உட்காரவைத்துச் சாதம் போட்டுக்கொண்டு சொன்னாள்—"நீ சாப்பிடாமல் இருந்தால் எனக்கு மனதுக்கு என்ன சமாதானம் கோபு? நேற்றைக்கு நீ ஆணையிட்டு என் வாயை அடைத்துவிட்டாய். இனிமேல் அப்படிப் பண்ணாதே. சாப்பிடு."

இதற்குள் என் அண்ணன் சமையல் அறைக்குள் வந்து சொன்னான்—"ராஜம் நீ எவ்வளவுதான் செய், அவன் புத்தி திருந்தாது."

மதனி அண்ணனைப் பார்த்துச் சற்றுக் கடுகடுப்புடன் சொன்னாள்— "என்னமாதிரி வார்த்தை சொல்கிறீர்கள் குழந்தையைப் பார்த்து? என் கோபு மணிப்பையனாய் வராவிட்டால் என் பேரை மாற்றிப்போடுங்கள். அப்படித்தானே கோபு?"

அவளைப் பார்த்துச் சிரித்தவண்ணம் அண்ணன் சொன்னான்—"எல்லாம் உன் பிரமைதான், ராஜம்."

என் முன்வந்து நின்றுகொண்டு சொன்னான்—"கோபு, ஒன்று ஞாபகமிருக்கட்டும்; நீ போடுகிற தாளத்துக்கு ஆட இங்கே ஆள் இல்லை. உன்னை ராஜாமாதிரி வளர்க்க ஈசுவரன் ஐசுவரியம் கொடுக்கவில்லை." அவன் வெளியே சென்றான்.

என் வாயில் சாதம் குழம்பியது. மனம் துடித்தது. சாதத்தட்டிலிருந்து எழுந்துவிடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் மறு நிமிஷம் என் மதனியின் பரிதாபமான பார்வை– நேற்றே பட்டினி கிடந்து கண்ணீர் விட்டுச் சிவந்த கண்களோடுகூடிய மதனியின் தோற்றம் என் மனதைக் கரைத்தது.

இரண்டு நாட்கள் அமைதியுடன் சென்றன. மூன்றாம் நாள் நான் மதனியிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது அண்ணன் வீட்டுக்குள் நுழைந்து என் முன் ஒரு கார்டை வீசி எறிந்தான். நான் அதை எடுத்துப் பார்த்தேன். அண்ணன் முகத்தைப் பார்த்தேன். அதில் என் போட்டால் வெடித்துவிடும். அவன் சொன்னான் "நீ எங்கே படிப்பாய்? மன்னி செல்லம்கொடுத்து உன்னைக் கழுதையாக்கிவிட்டாள். உன் இஷ்டம்போல் செய், நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிற காசு நினைவிருக்கட்டும்."

அது என் 'பிராகிரஸ் கார்ட்'. அண்ணனிடம் தலைமை உபாத்தியார் அனுப்பியிருந்தார். கணக்கிலும், இங்கிலீஷிலும் நான்

மிகக் குறைவாக 'மார்க்கு' வாங்கியிருந்தேன். தவறு என்னுடையதானாலும் அவன் சொன்ன போது எனக்குக் கோபம்தான் வந்தது.

மதனி அன்றிரவு என்னிடம் சொன்னாள்—"கோபு, இனிமேல் சமத்தாய் படிக்கணும் என்ன ?"

அவள் சொற்கள் என்னுள்ளத்தில் பதிந்தன. நான் அன்று முதல் படிப்பில் கவனம் செலுத்தலானேன்.

ஆனால் என் படிப்பைக் கெடுக்கத்தானோ என்னமோ எங்கள் ஊருக்கு சினிமா ஒன்று வந்துசேர்ந்தது.

அது வரை நான் சினிமாவே பார்த்ததில்லை. மதனி ஒரு நாள் அண்ணாவிடமிருந்து இரண்டணா வாங்கி எனக்குக் கொடுத்து சினிமா பார்த்துவர அனுப்பினாள்.

ஒரு நாள் பார்த்ததும் தினமும் பார்க்க அவா ஏற்பட்டது. ஆனால் பணம் வேண்டுமே. மதனியிடம் தம்படிகூட கிடையாது. அண்ணனிடம் கேட்டால் அப்புறம் வீட்டில் கூட ஏற்றமாட்டான். பிறகு பணத்துக்கு வழி? வீட்டில் உள்ள பெட்டிகளை பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். மதனி இல்லாத சமயம் பார்த்து தேடுவது, பிறகு ஏமாற்றத்துடன் செல்வது. இப்படியே ஒரு தகரப்பெட்டியைத் திறந்தேன். என் அதிர்ஷ்டம் அதில் அணுக்கள் கிடந்தன. எனக்கு வேண்டிய இரண்டணாவை மட்டும் எடுத்துக் கொண்டு பெட்டியை மூடி விட்டேன். அன்று என் நண்பன் ஒருவன் சினிமாவுக்கு அழைத்துச் சென்றதாகச் சொல்லிவிட்டு சினிமா பார்த்து வந்தேன்.

நாள் தோறும் இரண்டணா விதம் பெட்டியில் குறைந்தது. நான் அண்ணன் தூங்கின பிறகு திண்ணையில் படுக்கையை விரித்துவிட்டு இரண்டாம் ஆட்டம் தவறாமல் பார்க்கலானேன்.

பத்து நாட்கள் சென்றன. எங்கள் பள்ளிக்கூடத்துப் புதுக்கட்டிடத்தைத் திறந்துவைக்க கவர்னர் வருவதாகவும், அன்று பையன்கள் புது ஆடைகள் அணிந்து வரவேண்டும் என்றும் எங்கள் தலைமை உபாத்தியாயர் ஒரு நாள் மாலை சொல்லி அனுப்பினார். என் தோழர்கள் அன்று மாலையில் விதம் விதமாகத் துணிகள் வாங்கி சொக்காய் தைக்கப் போவதாக 'பிளான்' போட்டுக்கொண்டு சென்றார்கள். மறு நாள் காலை நானும் மதனியிடம் போய் "மதனி, எனக்குப் புது சொக்காய் வேணும்" என்று கேட்டேன்.

மதனி சிரித்துக் கொண்டே சொன்னாள், "வேண்டிய சொக்காய் இருக்கே உனக்கு. அதெல்லாம் கிழிஞ்சப்பறம் போராதா?"

"போ மன்னி, கவர்னர் வருகிறார். புதுச் சொக்காய் போட்டுக்கணமாம், வாத்தியார் சொன்னார்" என்றேன், வாசற்படியில் உட்கார்ந்துகொண்டு.

"இதோ என் கிட்ட வா கோபு. உன் நீலச் சொக்காயை துவைத்துக் காயவைத்துப்போடுகிறேன். அது புதுசு மாதிரியே இருக்கும். நாளைக்கு அதைப் போட்டுக்கொண்டு போ" என்றாள் மதனி.

நான் எழுந்து கொண்டே சொன்னேன்: "எனக்கொன்றும் வேண்டாம். நாளை முதல் புதுச் சொக்காயும் வேஷ்டியும் உண்டானால் தான் பள்ளிக்கூடம் போவேன்."

மதனி ஓடியே வந்து என் கையைப் பிடித்துக்கொண்டாள். அவள் தன் ரவிக்கையின் முதுகுப் பக்கத்தைக் காட்டிக்கொண்டு சொன்னாள், "மன்னி ரவிக்கையிலே எவ்வளவு கிழிசல் பார்த்தாயா? மாதம் பிறந்து நான் புது ரவிக்கை தைக்கும்போது உனக்கும் புதுச் சொக்காய் கிடைக்கும்."

நான் கோபமும் ஏமாற்றமும் அடைந்தேன். என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியால் உடல் வியர்த்தது. மதனி என் முகத்தைப் பார்த்து சிரிக்கலானாள். எதிரே சுவரில் ஒரு அழகிய புடவை கட்டப்பட்டிருந்தது என் கண்ணை உறுத்தியது. அது அவளுடைய கூறைப்புடவை. வேறு புடவை இல்லாததால் தான் அதை உபயோகப்படுத்திக்கொண்டிருந்தாள். ஆனால் அன்று அது தெரியவில்லை எனக்கு. நான் சொன்னேன்—"உனக்கு ஜரிகைப் புடவை. தகரப்பெட்டியில் செலவுக்குப் பணம் எல்லாம் வேணும். ஆனால் எனக்கு ஒரு சொக்காய்க்கூடத் தராதே. உனக்கு என்கிட்டப் பிரியமேயில்லை."

மதனியின் முகம் வெளிறிவிட்டது. அவள் தகரப்பெட்டியின் பக்கம் போய் அதைத்

திறந்தாள். அவள் உதடுகள் துடித்தன. என்னைப்பார்த்துக் கேட்டாள்—"இதிலிருந்து பணம் எடுத்தாயா கோபு?"

நான் "ஆம்" என்றேன்,

"என்ன காரியம் செய்தாய் பாபி?" என்று சொல்லிக்கொண்டு பெட்டியை மூடி விட்டு வெளியே சென்றாள்.

என் காதில் அந்தப் "பாபி" என்ற சொல் எதிரொலித்தது. நான் ஏற்கனவே மனத் தாங்கலுடனிருந்தேன். அதில் இந்தச்சொல் சேரவே புண்ணில் கோலையிட்டு விட்டது போல் ஆயிற்று.

அன்று என் மனதில் சைத்தான் நுழைந்திருந்தான். இல்லாவிட்டால் நான் கத்தியெடுத்து அவ்வழகிய புடவையைக் கிழிக்கத் துணிந்திருக்கமாட்டேன். நான் அதன்பின் வெளியே சென்று விட்டேன்.

மாலை நாலு மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்தேன். அது வரை நான் சாப்பிடவில்லை. பசி தாகம் ஒன்றும் தெரியவில்லை. எங்காவது ஓடிப் போய்விட எண்ணினேன். அதற்கு மதனியிடம் "உன்னால்தான் நான் தொலைகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போகவே வீட்டுக்கு வந்தேன். கிழிந்த புடவையைத் தைத்துக்கொண்டிருந்த மதனி என்னைக் கண்டதும் எழுந்து என் கையைப் பிடித்துச் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றாள். என் கையை விடாமலே என் தட்டை எடுத்து வைத்துச் சாதம் போட்டு அதைப் பிசையலானாள். அவள் சொன்னாள் "இப்படி பட்டினி கிடந்தால் உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்? நீ சாப்பிடலை நானும் சாப்பிடவில்லை. சாப்பிடு" என்று என் கையில் சாதத்தை உருட்டிவைக்கலானாள்.

நீர்நிறைந்த அவள் கண்களை நான் பார்த்து விட்டு அவள் மடியில் கவிழ்ந்து படுத்துவிட்டேன். மதனி என் தலையைத் தூக்கி என் கண்களைத் துடைத்துக்கொண்டு சொன்னாள்: "அழாதே கோபு, சிறு பிள்ளைகள் அப்படித் தான் இருப்பா. அப்புறம் நல்ல பையன் களாய்ப் போய்விடுவதுதான் வழக்கம்.

சாப்பாடு முடிந்ததும் மதனி என் கையில் இரண்டு ரூபாயைக் கொடுத்துகொண்டு சொன்னாள்—"கோபு, இந்த இரண்டு ரூபாயையும்


மேதாஸ்

# "பாஸ்பரஸ் தைலம்"

(வெளி உபயோகத்துக்கு மட்டும்)

முடக்குவாதம், கீல்பிடிப்பு, சகலவித வலிகள்

இவைகளுக்கு

நிகரற்ற கைகண்ட மருந்து

பிரபல டாக்டர்களும், பொது ஜனங்களும் புகழ்ந்து அத்தாக்ஷி கொடுத்திருக்கிறார்கள்.

தயாரிப்பவர்கள்:— **K. S. மேதா & கோ.,**

மருந்து வியாபாரிகள்,

250, சைனு பஜார் (மாடி) சென்னை.

அந்தத் தகரப்பெட்டியில் போட்டு நித்திய கல்யாணியை நினைத்துக்கொள். உனக்கு இரண்டு வருஷங்களுக்குமுன் பெரிசா ஜுரம் வந்தபோது நான் உனக்காக எங்கள் ஊர் நித்தியகல்யாணி அம்மனுக்கு மாதம் இரண்டணா விதம் போடுவதாக எண்ணிக்கொண்டேன். ஊருக்குப் போகிறபோது போட்டுவிடவேண்டும்.''

நான் திகைத்துப்போனேன். பேசாமல் பெட்டியில் பணத்தைப் போட்டுவிட்டுத் திரும்பிவந்தேன். மதனி கீழே குனிந்து ஒரு பொட்டலத்தை எடுத்து என் கையில் கொடுத்துக்கொண்டு சொன்னாள் — "இந்தா, சொக்காய் தைத்து காலமே தருவான்''.

நான் பிரமை பிடித்தவன்போல் நின்றேன். கொஞ்ச நேரத்துக்குப்பின் நான் பார்த்தபோது மதனி கீழே உட்கார்ந்து புடவை தைத்துக்கொண்டிருந்தாள்.

"உனக்குப் பணம் எங்கிருந்து கிடைத்தது மதனீ?'' என்றேன், அவள் அருகே உட்கார்ந்துக்கொண்டு.

மதனி சிரித்துக்கொண்டு— "அதெல்லாம் சிறு பையன்கள் கேட்பார்களா ? '' என்று மட்டும் கேட்டாள். அவள் மூக்கிலிருந்த மூக்குப் பொட்டைக் காணவில்லை.

நொடிப்பொழுதில் எனக்கு அன்று வரை ஏற்படாத நல்ல புத்தி ஏற்பட்டு விட்டது. நான் மதனியின் முன் நமஸ்கரித்துக்கொண்டு சொன்னேன்—"மதனீ, நீ என்னை மன்னித்து விடு''.

மதனி என்னைத் தூக்கித் தன் மடியில் படுக்கவைத்துக்கொண்டு சொன்னாள்— "நீ ஒரு தவறும் செய்யவில்லையே''.

என் உள்ளம் வெடித்து விடும்போல் இருந்தது. நான் அவள் மடியில் தலையை புதைத்துக்கொண்டு கண்ணீர் விட்டேன். மதனி என்னை எழுப்பிக் கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு சொன்னாள்— "போ, கோபு, அண்ணா வருகிறபோது புது வேஷ்டி கட்டிக்கொண்டு நமஸ்காரம் பண்ணனும். போய் முகம் அலம்பிக்கொண்டு வா.''

"ஆகட்டும் மன்னீ. எனக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. இனிமேல் நான் உன் இஷ்டப்படி நடக்கிறேனா இல்லையா நீயே பார்'' என்று சொல்லிக்கொண்டு நான் எழுந்தேன்.

நான் புது வேஷ்டி கட்டிக்கொண்டு கூடத்துக்கு வந்தபோது அண்ணன் கேட்டான்— "எப்படி இந்தப்புடவை கிழிந்தது ராஜம்?''

மதனி சிரித்துக்கொண்டு மறுமொழி கூறினாள். "அதை ஏன் கேட்கிறீர்கள்? பட்டப் பகலில் எலி கடித்துவிடுகிறது''.

நான் அண்ணனை நமஸ்கரித்துவிட்டு மதனியையும் நமஸ்கரித்தேன். மதனி அண்ணனிடம் சொன்னாள்—"மாப்பிள்ளைமாதிரியிருக்கான் கோபு, இல்லையா ?''

அண்ணா சிறித்துகொண்டு சொன்னான்— "உன்மாதிரி மூக்குப்பொட்டு விற்றுத் துணி வாங்கிக்கொடுக்கிற மதனியிருக்கிறவரை கோபுவுக்கு என்ன குறை? ஈசுவரன் நிறையத் தரட்டும். உன்னை ஜரிகை வேஷ்டியாலே அபிஷேகமே பண்ணிவிடுகிறேன், கோபு''.

மதனியும் ஆசீர்வதித்தாள் — "உனக்கு நல்லகாலம் வரும் கோபு''.

இன்று அண்ணா தாசில்தார். கடவுள் கிருபையால் எனக்கொரு குறைவுமில்லை. ஆனால் மதனி மட்டும்—"என் குழந்தைக்கு நல்ல பெண்ணாய்த் தேடி கலியாணம் பண்ணி அவள் சமைத்துப்போட்டுப் பத்துநாள் சாப்பிட்டால்தான் மனசுக்குத் திருப்தி என்று தினமும் மூன்று தடவையாவது ஜபிக்கிறாள்.

# நம்பிக்கையின் வெற்றி

[கமலா பத்மநாபன்]

●

### (முன் கதைச் சுருக்கம்)

மதுரம் 18 வயது யுவதியாகவிருக்கும்பொழுதே வேதாந்தியான அவள் கணவன் அவளைத் தவிக்கவிட்டு எங்கோ போய்விட்டான். இதே ஏக்கத்தினால் உயிர் நீத்தார் அவள் தகப்பனார். மாற்றாந்தாயின் கொடுமைகளுக்கு ஆளாக விரும்பாத மதுரம் தன் மாமனார் ஹரிஹரய்யருடன் வசிக்கிறாள். கர்ப்பிணியாயிருந்த அவள் அந்த இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்த்து காலத்தில் மணம் செய்து கொடுக்கிறாள்.

பின்பு, ஒரு ஏழை விதவையின் பையன் சீனு என்ற ஒருவனைப் படிக்கவைத்து அவனிடம் பக்ஷமாக இருக்கிறாள். திடீரென்று ஹரிஹரய்யர் இறந்துவிடுகிறார். அனாதையான மதுரம் சீனுவைப் பிரியமுடியாமற் பிரிந்து மூத்த பெண்ணுடன் வசிக்கிறாள். மூத்த பெண் அவளைக் கண்டபடி வேலை ஏவி மிகவும் கஷ்டப்படுத்துகிறாள். அங்கிருக்க மனமில்லாத மதுரம் இளைய பெண்ணுடன் வசிக்கிறாள். அங்கும் தன் பெண்ணுடைய மாமியார், நாத்தனார்கள் கொடுமைகளுக்கு ஆளாகி, ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வெளிக் கிளம்புகிறாள். அகஸ்மாத்தாக தன் ஒன்றுவிட்ட அத்தங்காளும், பால்ய ஸ்நேகிதியுமான ருக்மிணி என்ற பால்ய விதவையை சந்திக்கிறாள். ருக்மிணி "விவித வித்யா நிலயம்" என்ற பெண்களின் புதுமுறைக் கல்வி நிலயத்தின் தலைமை ஆசிரியை. அவள் மதுரத்தின் விதியை எண்ணி வருந்தி அவளைத் தன் நிலயத்தின் போஜன விடுதிக்கு எஜமானியாக்கி ஆதரிக்கிறாள்.

### 5

"விவித வித்யா நிலயத்தில்" மதுரம் கால் வைத்த சில மாதங்களுக்கெல்லாம் அந்நிலயம் அதிசயிக்கத்தக்க விதத்தில் அபிவிருத்தி அடைந்துவர ஆரம்பித்தது. நாளுக்கு நாள் தென்னிந்திய மாணவிகள் அநேகர் வித்தை கற்க இந்நிலயத்தையே பெரிதும் விரும்பிவர ஆரம்பித்தனர். மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாகவே வித்யா நிலயத்தின் கட்டிடத்தையும் ஹாஸ்டலின் கட்டிடத்தையும் விரிவு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்விதமே விரைவில் இரண்டு கட்டிடங்களும் விரிவு செய்யப்பட்டன. அநேக பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இந்நிலயத்தில் மாணவிகளாகச் சேர்ந்திருந்தபடியாலும், சமஸ்தான சிற்றரசர்களும், ஜமீந்தார்களும் போஷகர்களாக இருந்தபடியாலும், கலாசாலையின் செல்வ நிலைமை வெகு திருப்திகரமாகவே இருந்தது. ஏழைப் பெண்மணிகளுக்கு இந்நிலயம் ஆச்ரயம் அளித்து, இலவச வித்தை புகட்டி வந்த விஷயம் மெச்சத்தக்கதாக இருந்தது.

மதுரம் இந்நிலயத்திற்கு வந்து சேர்ந்து ஏழெட்டு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அவளுக்கு, சாப்பாடு, இடவசதி முதலிய சௌகர்யங்களைத் தவிர, மாதம் முப்பது ரூபாய் சம்பளமும் கொடுத்து வந்தார்கள். போஜன விடுதியில் அவள் காட்டி வந்த சிரத்தையுள்ள பொறுப்பையும், அவளுடைய நிர்வாகத் திறமையையும், மற்றும் பொதுவில் அவளுடைய சிறந்த குணங்களையும்பற்றி நிலய ஆசிரியைகளும் மாணவிகளும் ஒருமுகமாய் நல்லபிப்பிராயம் கொண்டு, அவள்மேல் அளவு கடந்த மதிப்பும் ப்ரீதியும் வைத்திருந்தனர்.

நிற்க, இந்த வித்யா நிலயத்தின் பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு புதிதாக ஒரு பரத நாட்டிய வகுப்பைத் திறக்க ஏற்பாடாகி இருந்தது. அந்தக் கொண்டாட்டத்தில் தலைமை வகிக்கவும், நாட்டிய வகுப்பை திறந்து வைக்கவும் செங்கல்பட்டு ஸப் கலெக்டர் ஆர்.எஸ். வாஸன் ஐ.ஸி.எஸ். அவர்கள் சம்மதித்திருந்தார்.

குறிப்பிட்ட தினத்தில் விவித வித்யா நிலயத்தின் வருஷாந்திர விழா மிகுந்த வைபவத்துடன் நடந்தேறியது. வெளியூர்களிலிருந்து கூட பிரமுகர்களும் சீமாட்டிகளுமான பெற்

ரோர்கள் இக்கொண்டாட்டத்திற்கு வந்திருந்தனர். அன்று மாலை கலெக்டர் ஆர். எஸ். வாஸன் நாட்டிய வகுப்பைத் திறந்து வைக்கும் பொழுது, இவ்வித கலா நிலயங்கள் நம் நாட்டில் இன்னும் அநேக இடங்களில் பரிணமிக்க பொது மக்களின், முக்கியமாய், செல்வவந்தர்களின், ஆதரவு அவசியமென்றும், மறைந்து கிடக்கும் பரத நாட்டியக் கலையை முன்னுக்கு கொண்டு வருவது பாரத தேச மக்களின் முக்கிய கடமை என்றும் வற்புறுத்திக் கூறி ஒரு சிறிய சொற்பொழிவு செய்தார். கலெக்டர் வாஸன் அந்நிலயத்திற்கு தமது நன்கொடையாக ஆயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பை சபையிலேயே அளித்தார். பிறகு டீயும் சிற்றுண்டியும் வழங்கப்பெற்று மங்கள கீதத்துடன் விழா முடிவுற்றது. கூட்டமும் கலைந்தது. கலெக்டர் மாத்திரம் தாம் வித்யா நிலயத்தின் கட்டிடத்தையும் ஹாஸ்டலையும் முழுவதும் சுற்றிப்பார்க்க விரும்பியதின் பேரில், ஆசிரியையும், நிலய நிர்வாகியுமான ருக்மிணி அம்மாள், கலெக்டரை அழைத்துப் போய் ஒவ்வொரு பாகமாய்க் காட்டிக்கொண்டும் விவரித்துக்கொண்டும் போனாள்.

கடைசியில் "ஹாஸ்டலைச் சேர்ந்த போஜன விடுதியையும் நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும். இதில் உங்களுக்கு ஆக்ஷேபணை ஒன்றுமில்லையே" என்று கேட்டாள் ருக்மிணி அம்மாள்.

"ஆக்ஷேபணையா? அதற்கு மாறாக மிகுந்த சந்தோஷமே ஏற்படும்" என்று புன்சிரிப்புடன் கூறிவிட்டு கலெக்டர் வாஸன் ருக்மணி அம்மாளைப் பின் தொடர்ந்து போஜன விடுதிக்குள் நுழைந்தார். அப்பொழுது மதுரம் அங்கே ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். ருக்மணியின் பேச்சுக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவளுடன் கூட யாரோ கனவான் வருவதைக் கண்டு கூச்சத்துடன் அங்கிருந்து செல்ல நகர்ந்தாள்.

ருக்மிணி "மதுரம்! போகாதே இங்கு வா. இன்று நம் நிலய கொண்டாட்டத்திற்கு தலைமை வகித்த கலெக்டர் வாஸன் அவர்களை உனக்கு அறிமுகம் செய்விக்கிறேன்" என்று கூறி அவளைப் போகவிடாமல் தடுத்துவிட்டாள். பிறகு கலெக்டரைப் பார்த்து "இந்த அம்மாள் தான் எங்கள் நிலய போஜன விடுதியின் மேற்பார்வையாளர். இவர் பெயர் ஸ்ரீமதி மதுரம். இவருடைய நிர்வாகத்திறமையைப்பற்றி புகழாதவர்களே கிடையாது' என்றாள்.

மதுரம் தலை குனிந்தபடியே தனது இரு கைகளையும் கூப்பி கலெக்டருக்கு நமஸ்காரம் செய்தாள். கலெக்டர் வாஸனும் மதுரத்திற்கு பிரதி வந்தனம் செய்துவிட்டு, சில வினாடிகள் தன் கண்களை அகல விழித்து அவள் முகத்தை கூர்ந்து கவனித்தார். பிறகு மதுரத்தின் சமீபம் சென்று "அம்மாமீ! என்னை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? உங்கள் வளர்ப்புப்பிள்ளை சீனுதான் நான்!" என்று கூறிக்கொண்டே அருகில் இருந்தவர்களையும், தன் உயர்தர அந்தஸ்தையும் சிறிதும் சட்டை செய்யாமல் கீழே சாஷ்டாங்கமாக விழுந்து மதுரத்தின் கால்களைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டான். மதுரம் முதலில் தன் கண்களையே நம்பவில்லை. ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். பிறகு கண்களில் ஆனந்த பாஷ்பம் தளும்ப "அப்பா சீனு, மகாராஜனாய் இரு அப்பா. உன்னை இந்த நிலமையில் காண என் மனம் எவ்வளவு சந்தோஷம் அடைகிறது தெரியுமா. உன்னுடைய தங்கமான சுபாவத்திற்கும் புத்தி சாதுர்யத்திற்கும் மெச்சியே கடவுள் உன்னை உயர்ந்த ஸ்திதியில் கொண்டு வந்து வைத்திருக்கிறார். உன்னை மறுபடியும் காண்பேன் என்று நான் சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை" என்று உணர்ச்சி ததும்பக் கூறினாள்.

ருக்மிணியும் இன்னும் அங்கே நின்று கொண்டிருந்த சிலரும் இந்தக் காட்சியைக் கண்டு ஒன்றும் விளங்காமல் திகைத்து நின்றனர்.

கலெக்டர் வாஸன் (சீனு) ருக்மிணி அம்மாளைப் பார்த்து "நான் ஸ்ரீமதி மதுரத்தினிடம் தனிமையில் சிறிது நேரம் பேச விரும்புகிறேன். அதற்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டும்" என்று கேட்டார்.

ருக்மிணியும் அதற்கு உடனே சம்மதித்து மதுரத்தையும் வாஸனையும் ஒரு அறைக்கு அழைத்துச் சென்று அங்கே அவர்களை விட்டுவிட்டு தான் தன் அலுவல்களை கவனிக்கச் சென்றாள்.

முதலில் சீனுவே பேச ஆரம்பித்தான். "அம்மாமீ, நான் இப்பொழுது இருக்கும் உன்னத ஸ்திதிக்கு மூல காரணம் நீங்கள் தான். அதற்கு நான் எவ்விதம் தகுந்தபடி

கைம்மாறு செய்யப்போகிறேனோ எனக்குத் தெரியவில்லை. என் வரலாற்றை சுருக்கமாக கூறுகிறேன் கேளுங்கள். பத்து வருஷங்களுக்கு முன்பு, தாதா இறந்தவுடன் நான் தங்களைவிட்டுப் பிரிந்தேனா? அதே வருஷம் நான் மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் ராஜதானிக்கே முதல்வனாகத் தேறினேன். சில பெரிய மனுஷர்களின் சிபார்சின்மேல், நான் மேல் படிப்புப் படிக்க உபகாரச் சம்பளமும் (Scholarship) கிடைத்தது. பிறகு இரண்டு வருஷங்களுக்கெல்லாம் இண்டர்மீடியட் பரிக்ஷையிலும் நான் முதலாவதாகவே தேறினேன். அதே வருஷம் எனக்கு இன்னொரு அதிர்ஷ்டமும் எதிர்பாராமல் வந்தது. நான் ஸ்கூல் பைனல் கிளாஸில் படித்துக்கொண்டிருந்தபொழுது ஒரு புரட்டாசி சனிக்கிழமையன்று உங்களிடம் கேட்டு ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டேனே நினைவிருக்கிறதா? அதை நான் டெல்லியில் நடத்தப்பட்ட "லாட்டரி" திட்டத்திற்கு பிரவேசக் கட்டணமாகச் செலுத்தியிருந்தேன். நான் பணம் கட்டிய இரண்டரை வருஷத்திற்குப் பிறகு அந்த லாட்டரித் திட்டத்தின் 'ரிஸல்ட்' அறிவிக்கப்பட்டது. முதல் பரிசாகிய முப்பதினாயிரம் ரூபாய் என் பெயருக்கு விழுந்து இருப்பதாக பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தபொழுது, நான் அதை நம்பவே இல்லை. பிறகு சில தினங்களுக்கெல்லாம் அந்த பெரிய தொகை எனக்கு வந்து சேர்ந்தபோது நான் அடைந்த ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவே இல்லை. இந்த எதிர்பாராத சந்தோஷச் செய்தியை எனது அன்னைக்குத் தெரிவித்துவிட்டு, உங்களையும் நேரில்கண்டு, பரிசுத்தொகையில் சரிபாதியை உங்களுக்கு அளிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் மாயவரத்திற்கு ஓடினேன். அங்கு சென்றதும் லக்ஷ்மி என்னுடன் முகம் கொடுத்துக்கூட பேசவில்லை. அம்மா எங்கே? நான் அவரை உடனே பார்த்து ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று ஆவலுடன் கேட்டேன். அம்மாவும் இல்லை, ஆட்டுக்குட்டியும் இல்லை. அவள் போய் எந்தக்காலமோ ஆயிற்று என்று கோபத்துடன் அலக்ஷியமாய் பதிலளித்தாள் லக்ஷ்மி. 'அம்மா எங்கே போயிருக்கிறார், சொல்லேன்' என்று நான் மறுபடியும் லக்ஷ்மியை வற்புறுத்திக்கேட்டதற்கு அவள் ஆத்திரத்துடன் 'அம்மா இல்லையென்றால் இல்லை தான்! இங்கேயே நின்றுகொண்டு கேள்விமேல் கேள்வி கேட்டு என் வயிற்றெறிச்சலைக் கிளப்பாதே; போ!, என்று சீறினாள். அவளுடைய வார்த்தைகளிலிருந்து நீங்கள் இறந்துவிட்டதாகவும் உங்களை இழந்த துக்கத்தை தாளாமல் இப்படி பேசுகிறாள் என்றும் நான் தப்பர்த்தம் செய்துகொண்டு, மனமுடைந்தவனாய் ஊர் வந்து சேர்ந்தேன். இந்த விஷயத்தைக்கேட்ட என் தாயாரும் புலம்பித் தவித்தாள். நான் இன்று உங்களை சந்திக்கும்வரையில் நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்று நினைக்கவே இல்லை, அம்மாமீ! நிற்க, நான் என் மனதை எவ்வளவு சமாதானம் செய்துகொண்டபோதிலும் லாட்டரியில் வந்த பரிசு பணம் முழுவதையும் அடைய எனக்கு உரிமையில்லையென்றே என் மனச்சாட்சி கூறிற்று. இத்தனை மனக்கலக்கத்திற்கும் சஞ்சலத்திற்கும் இடையே நான் ஒவ்வொரு வருஷ பரிக்ஷையிலும் எப்படியோ மேன்மையுடன் தேறி பி. ஏ. ஹானர்ஸிலும் ராஜதானிக்கு முதல்வனாக தேறினேன். எனது காலேஜ் பிரின்ஸிபாலும் இன்னும் எனது நண்பர்கள் சிலரும் என்னை ஐ. ஸி. எஸ். பரிக்ஷைக்கு உட்காரும்படி பலவந்தப்படுத்தி உற்சாகமும் ஊட்டினார்கள். அவ்விதமே நான் அந்த பரிக்ஷைக்கும் படித்துத் தேறினேன். கையில் பரிசுப்பணம் இருந்தபடியால் எனக்கு பணக் கஷ்டம் கொஞ்சமும் இல்லை. நான் சீமையிலிருந்து வந்தவுடனேயே அதாவது, சென்ற வருஷம், என்னை செங்கல்பட்டில் ஸப் கலெக்டராக நியமனம் செய்தார்கள். அம்மாவும் இப்பொழுது செங்கல்பட்டில்தான் இருக்கிறாள். அம்மாமீ, இந்த பத்து வருஷகாலத்தில் நான் உங்களைப்பற்றி நினைக்காத நாளே கிடையாது. நீங்கள் இப்பொழுது உங்கள் வரலாற்றைக் கூறுங்கள். நீங்கள் இந்த வித்யா நிலயத்திற்கு எப்படி வந்துசேர்ந்தீர்கள்? லக்ஷ்மி என்னிடம் தாங்கள் போய் எந்தக் காலமோ ஆயிற்று என்று அருவருப்புடன் சொன்னதின் தாத்பரியம் என்ன?" என்று ஆவலுடன் கேட்டான்.

மதுரம் தான் லக்ஷ்மியின் வீட்டிற்கு சென்றது முதல் இன்று சீனுவை சந்தித்தது பரியந்தம் நடந்த விஷயங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் அவனுக்கு விவரமாய்த் தெரிவித்தாள். தன் கண்களில் நீர்முட்ட சீனு மதுரம் கூறியவற்றையெல்லாம் கேட்டான். அவள் முடித்ததும் "அம்மாமி நீங்கள் அந்த இரண்டு வருஷ காலம் அனுபவித்த கஷ்டங்கள் ஏழேழு ஜன்

மங்களுக்குப் போதும். நீங்கள் ஒரு திக்கில்லாத பரதேசியைப்போல், இந்நிலயத்தில் உங்கள் கையால் உழைத்து சம்பாதித்து ஜீவனம் செய்வதை என்னால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. என்னுடன் புறப்பட்டு செங்கல்ப்பட்டிற்கு வந்து விடுங்கள். நீங்கள் நான் ஏழையாக இருந்த காலத்தில் என்னைக் கைதூக்கிவிட்டு உங்கள் வீட்டில் வைத்துக்கொண்டு பெற்ற மகனைப்போல் அருமையாக வளர்த்து வந்தீர்கள். நான் அந்த நன்றியை மறக்கமுடியுமா? இப்பொழுது உங்களுடைய வயது காலத்தில் நான் உங்களை என்னைப் பெற்ற அன்னைக்குச் சமானமாக பாவித்து பாதுகாப்பது எனது கடமையாகும். ஏன், அதுவே எனது மனமார்ந்த விருப்பமும்கூட. நீங்கள் இதற்கு மறுத்தால் என் மனதிற்கு ரொம்ப கஷ்டமாக இருக்கும்" என்று புகன்றான்.

மதுரம் "சீனு உன்னுடைய நிஜமான அன்பையும் விச்வாஸத்தையும் கண்டு என் மனம் பூரிக்கிறது. நான் இப்பொழுது இங்கே செய்துவரும் புனித கைங்கர்யத்தை விட்டுவர என் மனம் இடங்கொடுக்கவில்லை. என்னுடைய கஷ்டகாலத்தில் எனக்கு ஆச்ரயம் அளித்து என்னைக் காப்பாற்றிய இந்நிலயத்தை நான் மறந்துவிடுவது நியாயமாகுமா? நான் இப்படிச் சொல்வதினால் உன்மேல் எனக்கு முன்பிருந்த அளவு வாத்ஸல்யமோ பற்றுதலோ இல்லை யென்று நீ தப்பர்த்தம் செய்துகொள்ளக்கூடாது. எனக்கு செளகர்யப்பட்டபொழுதெல்லாம், நான் உன்னிடம் வந்து கொஞ்சகாலம் தங்கிவிட்டு வருகிறேன்" என்று விடை பகர்ந்தாள்.

மதுரத்தின் பதில் சீனுவுக்கு மிகுந்த ஏமாற்றத்தையே அளித்தது. அவளை இது விஷயத்தில் அதிகமாக நிர்ப்பந்திக்கவும் அவனுக்கு இஷ்டமில்லை. "அப்படியானால் நீங்கள் நாளைக் காலை என்னுடன் புறப்பட்டு செங்கல்பட்டிற்கு வரவேண்டும், அங்கு சில நாட்களாவது தங்கிவிட்டு பிறகு நீங்கள் உங்கள் இஷ்டப்படி இங்கு திரும்பி வந்துவிடலாம். நீங்கள் என்னுடைய இந்த வேண்டுகோளையாவது ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கெஞ்சும் குரலில் வேண்டிக்கொண்டான்.

மதுரம் இதற்கு சம்மதித்தாள். தான் மறுதினம் அதிகாலை வந்து அவளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போவதாய் சொல்லிவிட்டு சீனு தான் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றான்.

மதுரம் ருக்மிணியிடம் கலெக்டர் வாஸன் யார் என்பதை விவரமாகக் கூறி தான் மறுதினம் அவனுடன் சென்று செங்கற்பட்டில் சில தினங்கள் இருந்துவிட்டுவர உத்தேசித்திருப்பதையும் தெரிவித்தாள். ருக்மிணி மிகுந்த சந்தோஷத்துடன் "மதுரம், நீ திக்கற்றவள் என்று அடிக்கடி குறைபட்டுக்கொண்டிருந்தாயே! கடைசியில் கடவுள் உன்மேல் கருணைக்கண்ணைத் திறந்துவிட்டார். நீ உன் வளர்ப்புப் புதல்வனை திரும்ப அடைந்துவிட்டாய். அவன் உன்னை ஒரு குறைவுமில்லாமல் பார்த்துக்கொள்வான் என்பதில் ஐயமில்லை" என்றாள்.

மதுரம் "ருக்மிணி, கடவுள் இன்னும் தன் கருணைக்கண்களை பூர்த்தியாகத் திறந்து என்னைப்பார்க்கவில்லை. என்னுடைய ஆயுசு முடிவதற்குள் காணமல்போன என் பர்த்தாவை திரும்ப காணப்பெறுவேனென்று நான் திடமாக இன்னும் நம்பி வருகிறேன். அந்த சம்பவம் எப்பொழுது நேருகிறதோ அப்பொழுது தான் கடவுளுக்கு என்மேல் பரிபூர்ண கிருபை ஏற்பட்டது என்று நான் சொல்வேன்" என்றாள்.

ருக்மிணி மதுரத்தின் தலையின்மேல் அன்புடன் தன் கையை வைத்து "மதுரம் உன் திடமான நம்பிக்கை வெற்றிபெற கடவுள் அருள் புரிவாராக" என்று கூறி ஆசீர்வதித்தாள்.

## 6

அடுத்த நாள் காலை சீனு மதுரத்தை அழைத்துக்கொண்டு தனது காரில் செங்கல்ப்பட்டிற்கு பிரயாணமானான். காரில் போய்க்கொண்டிருந்தபொழுது மதுரத்தின் தேகத்தில் அவளையறியாமல் ஒருவித பரபரப்பும் மயிர்க்கூச்சலும் ஏற்பட்டது. சீனுவைப் பார்த்து "சீனு, இன்று என்னையறியாமல் என் மனது ஏதோ பரபரப்பு அடைகிறதே! எனது இடது தோளும் கண்ணும் என்றைக்கும் இல்லாதபடி துடிக்கிறதே! என்ன காரணமோ தெரியவில்லையே!" என்று ஆச்சர்யத்துடன் கூறினாள்.

சீனு சிரித்துக்கொண்டே "இவ்வளவு வருஷங்களாக உங்கள் கண்ணில் படாமலிருந்த

உங்கள் மகன் உங்களிடம் திரும்பவந்து சேர்ந்துவிட்டான் அல்லவா? அதுவே உங்கள் மனது பரபரப்புக்குக் காரணமாக இருக்கலாம். இல்லாவிட்டால், உங்களுக்கு ஆனந்தத்தைத் தரக்கூடிய இன்னும் ஏதாவது எதிர்பாராத சம்பவம் சீக்கிரத்திலே நடந்தாலும் நடக்கலாம். அந்த பரமாத்மாவின் லீலைகளை யார்தான் அறிவார்கள்?" என்று பதில் அளித்தான்.

செங்கல்பட்டில் அவர்கள் வீட்டை அடைந்தபொழுது காலை சுமார் ஒன்பது மணி இருக்கும். முதலில் சீனு காரைவிட்டு இறங்கி மதுரம் இறங்குவதற்காகக் கதவைத் திறந்துவிட்டான். மதுரம் இறங்கியதும் அவளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்று "அம்மா! அம்மா சீக்கிரம் வா. யார் வந்திருக்கிறார்கள் பார்" என்று கூவி தன் தாயை அழைத்தான்.

சீனுவின் தாய் உள்ளே இருந்துவந்து மதுரத்தை சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு பிறகு தாங்கவொண்ணு விப்பபுடன் "யார் மதுரம்மாவா? என் பிள்ளையை இந்த உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்த மகராஜியா? நான் கனவுகாண்கிறேனு அல்லது நிஜமாகவே நீங்கள் இப்பொழுது என் முன் நிற்கிறீர்களா?" என்று கேட்டாள்.

மதுரம் "நான் இறந்துபோய்விட்டதாக நீங்கள் எல்லோரும் நினைத்துக்கொண்டிருந்தீர்கள். அது பொய் என்று நிரூபிக்க நானே நேரில் வந்துவிட்டேன்" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தாள்.

இதே சமயத்தில் பக்கத்து அறையிலிருந்து சுமார் ஐம்பத்தைந்து வயது மதிப்பிடத்தக்க கிழவர் ஒருவர் மண்டையில் கட்டப்பட்டிருந்த கட்டுடன் வெளிவந்து சீனுவைப் பார்த்து "நீங்கள் நேற்றிரவே திரும்பிவிடுவதாகச் சொல்லியிருந்தீர்களே! வாராதபடியால் எனக்கும் உங்கள் தாயாருக்கும் ராத்திரி எல்லாம் ரொம்பக் கவலையாக இருந்தது" என்ருர்.

அந்தக் கிழவரின் குரலைக்கேட்டு மதுரம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவரது இடது புருவத்தின்மேல் இருந்த கருத்த மச்சமும் அவர் யார் என்பதை மதுரத்திற்கு அந்த நிமிஷமே காட்டிக்கொடுத்துவிட்டது.

"ஹா! நாதா! என்னை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? இவ்வளவு வருஷங்களாக எங்கு மறைந்திருந்து என்னைத் தவிக்கவைத்தீர்கள்? கடைசியில் என் மனேபீஷ்டத்தை அந்த பரமாத்மா பூர்த்தி செய்துவிட்டார்!" என்று ஆவேசமும், ஆனந்தமும், பழைய நினைவுகளினுல் ஏற்பட்ட வருத்தமும், ஒருங்கே பொங்கி எழும்ப மதுரம் ஒரே பாய்ச்சலில் அந்த கிழவரை அணுகி அவர் காலடிகளில் விழுந்து அவர் பாதங்களை தனது கண்ணீரால் நனைத்தாள்.

கிழவர், சீனு, சீனுவின் தாயார் முதலிய மூவரும் ஆச்சர்யத்தில் மூழ்கி கல்லாய்ச் சமைந்து நின்றனர். சிலவினுடிகளுக்கெல்லாம் கிழவர் மாத்திரம் அப்பொழுதுதான் சுய அறிவு பெற்றவர்போல் தமக்கு உண்டான வியப்பிலிருந்து விடுபட்டு மதுரத்தை தனது இரு கரங்களாலும் தூக்கி நிறுத்தி "யார் மதுரமா? என் அருமை மனைவியா? எப்படி உருமாறிப் போய்விட்டாய்? மதுரம்! நான் உன்னை கைவிட்டு ஓடிப்போயுங்கூட இவ்வளவு வருஷங்களுக்குப்பிறகு உனக்கு என்மேல் இன்னும் பிரியமும் மதிப்பும் இருக்கின்றனவா? உன்னை மறுபடியும் இந்த உலகில் நான் சந்திப்பேன் என்று ஒருபொழுதும் நினைக்கவே இல்லை" என்று தொண்டையில் துக்கம் அடைக்கக் கூறி மாலை மாலையாய் கண்ணீர்விட்டார்.

மதுரம் சீனுவைப் பார்த்து "சீனு, நாம் காரில் வந்துகொண்டிருக்கும்பொழுது சீக்கிரத்திலேயே இன்னும் ஏதாவது எதிர்பாராத ஆனந்தம் எனக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று நீ கூறியது இவ்வளவு சடுதியில்பலித்துவிட்டதே! இவர் எவ்வளவு காலமாக உன்னிடம் இருக்கிறார்? எல்லா விவரங்களையும் அறிய என் மனம் துடிக்கிறதே! எனக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சந்தோஷத்தில் என் ஹ்ருதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது" என்று கூறினுள். அவள் சீனுவிடம் பேசினுளே தவிர, அவள் கண்கள் மட்டும் தன் கணவன்மேலேயே ஆழ்ந்திருந்தது.

சீனு "அம்மாமி, நான் இவரை ஒரு மாதத்திற்கு முன்பு திருவண்ணுமலை ரஸ்தாவில் சந்தித்தேன். அதாவது, நான் எனது காரில் இருட்டும் நேரத்தில் அந்த ரஸ்தாவில், ஏதோ வேலையின் நிமித்தம் போய்க்கொண்டிருந்தேன். எனது கார் டிரைவர் தலை தெறிக்கும் வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டிருந்தான். எதிர்ப் புறத்தில் வந்துகொண்டிருந்த இவர்

மேல் இன்னும் சில வினாடிகளில் கார் ஏறியிருக்கும். ஆனால், டிரைவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த நான் சட்டென்று முரட்டு வேகத்தில் 'ப்ரேக்' (Brake) போட்டேன். அந்த அதிர்ச்சியில் எனது காரும் ஒரு குதி குதித்துவிட, அந்த சமயத்தில் காருக்குக் கேவலம் இரண்டு அடிகள் தூரத்தில் இருந்த இவரை மோதித் தள்ளிவிட்டு நின்றது. அருகில் கிடந்த ஒரு கூர்மையான ஜல்லிக் கல்லின் மேல் இவருடைய தலை தாக்கியபடியால், மண்டை பொத்துப்போய் ரத்த வெள்ளம் எடுத்துவிட்டது. உடனே அவரை காரில் தூக்கிப் போட்டுக்கொண்டு திருவண்ணாமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். மண்டை இரண்டு அங்குல நீளம் கிழிந்துபோயிருந்தபடியால் உடனே தையல் போட்டுக் கட்டினார்கள். ஆனால் புண் ஆற இரண்டு மாதங்களுக்குமேல் ஆகுமென்றும், தினமும் கட்டை அவிழ்த்து, புண்ணை சுத்தம் செய்து, 'டிரஸ்' செய்யவேண்டுமென்றும் டாக்டர் கூறினார். நான் பார்க்கவேண்டிச் சென்ற வேலையை ஒத்திப்போட்டுவிட்டு, அன்று ராத்திரி திருவண்ணாமலையிலேயே இருந்துவிட்டு மறுதினம் இவரையும் அழைத்துக்கொண்டு செங்கல்பட்டிற்கு வந்துவிட்டேன். தினமும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று 'டிரஸ்' செய்யவைத்து வருகிறேன். நான் எவ்வளவு தூண்டியும் இவர் தன் உண்மை வரலாற்றை மட்டும் என்னிடம் கூற மறுத்துவிட்டார். தான் உற்றார் உறவினர் இல்லாத பரதேசியென்றும், ஊர் ஊராய்ச் சுற்றிக்கொண்டு மகான்களையும், புண்ணிய புருஷர்களையும் கண்டு வணங்குவதே தமது பேராவலும், லக்ஷியமும் என்று மாத்திரம் சொன்னார். நான் அவரை பலவந்தப்படுத்தி, அவருடைய மண்டைப்புண் பூர்த்தியாக ஆறும் மட்டும் என் வீட்டிலேயே தங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், இஷ்டமில்லாமல் என் வேண்டுகோளுக்கு இணங்கி, கடந்த ஒரு மாத காலமாக என் இல்லத்தில் இருந்து வருகிறார்.

மேலும், நான் முதல் முதல் இவரைப்பார்த்தவுடன் தாத்தாவின் ஞாபகம் எனக்கு வந்தபடியால் இவர் மேல் ஒரு வாஞ்சையும் பற்றுதலும் உண்டாகி விட்டது. ஆனால், இவர் உங்களுடைய பர்த்தாவாக இருப்பார் என்ற எண்ணம் எனக்கு ஏற்படவே இல்லை! என்றைக்கு எந்த நிமிஷம் என்னைவிட்டுப் பிரிந்துவிடுவாரோ என்று நான் சதா பயந்துகொண்டுதான் இருந்தேன்" என்று விளக்கிக் கூறினான்.

இதுகாறும் வாயைத் திறவாமல் நின்றுகொண்டிருந்த மதுரத்தின் கணவன் "என்னுடைய வரலாற்றையும் சுருக்கமாகக் கூறுகிறேன், கேளுங்கள்; நான் சுமார் இருபத்தேழு வருஷங்களுக்கு முன்பு ஒரு போலிச் சாமியாரின் வார்த்தையை நம்பி, வீட்டையும் இளம் மனைவியையும் அன்பு மிகுந்த தந்தையையும் துறந்து வெளியேறினேன். அந்தச் சாமியார் என்னை வட இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அவனைப்போலவே இன்னும் பல சாமியார்களை எனக்கு அறிமுகப்படுத்தினான். பல கடின ஆசன முறைகளையும் யோகாப்பியாச முறைகளையும் எனக்குக் கற்பித்தான். நான் இப்படியெல்லாம் செய்வதால், பெரிய மகான்களையும், ரிஷிகளையும், ஏன் கடவுளைக் கூட நேரில் கண்டு சம்பாஷிக்க முடியும் என்று கூறினான் அவன். பிறகு ஒரு நாள் திடீரென்று என்னிடமிருந்த பத்து ரூபாய் பணத்தையும் ஒரு தங்க மோதிரத்தையும் அபகரித்துக்கொண்டு அவன் பராரி ஆகிவிட்டான். இதற்குப் பிறகு பல வருஷெங்கள் வட இந்தியாவிலேயே நான் சுற்றித்திரிந்து, அகப்பட்ட வேலையைச் செய்துகொண்டு நாலு காசு சம்பாதித்து வயிறு வளர்த்து வந்தேன். ஒரு சமயம் ஒரு பெரிய பங்களாவில் புகுந்து களவாடிவிட்டதாக பொய்க் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு வருஷ காலம் கடுங்காவல் தண்டனையும் அடைந்தேன். இன்னும் எவ்வளவோ இன்னல்களை அடைந்து துன்பப்பட்டேன். அவைகளை எல்லாம் கூற எனக்கு இப்பொழுது இஷ்டமில்லை. எனக்கு ஒவ்வொரு சமயம் வீடு திரும்பும் யோசனையும் மனைவி, மற்றும் தந்தை முதலியவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் எழும்பும். ஆனால், அவர்கள் முகங்களில் எப்படி மறுபடியும் விழிப்பது என்று அஞ்சி, மனதை இரும்பாகச் செய்துகொண்டு, வீடு வாசல் என்ற பாசத்தை விட்டொழித்து காலம் கடத்தி வந்தேன். சென்ற ஐந்து வருஷங்களாக ஹரித்வாரில் இருந்துகொண்டு ஒரு மகானிடம் உபதேசம் பெற்று வந்தேன். திடீரென்று அவர் சென்ற வருஷம் சமாதியடையவே என் மனம் மறுபடியும் சஞ்சலப்பட்டு நிம்மதியில்லாமல் தவிக்க ஆரம்பித்தது. திருவண்ணாமலையில் இருக்கும் ரமண மஹரிஷியின் மகத்துவத்தைக் கேள்விப்பட்டு கால் நடையாகவே ஹரித்வாரிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து

சேர்ந்தேன். அங்கிருந்து திருவண்ணாமலை சென்று சுவாமிகளைத் தரிசித்து சில கேள்விகளைக் கேட்டேன். அவர் 'உனது மனம் இன்னும் பரிபக்குவம் அடையவில்லை; உனக்கு சமீபத்தில் சாந்தி கிட்டும் வகையைக் காணோம்' என்று கூறியவுடன் மனமுடைந்து அவர் சந்நிதியை விட்டுக் கிளம்பி கால் இழுத்தபடி நடந்து சென்றேன். அந்த சமயத்தில் தான் கலெக்டரின் காரினால் மோதுண்டு விழுந்து இப்பொழுது ஒரு மாத காலமாக அவருடைய பங்களாவில் சுகமாகக் காலங் கழித்து வருகிறேன்'' என்று கூறி முடித்தார்.

மதுரத்தின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வெள்ளமெடுத்து ஓடியது. மதுரத்தின் புத்திரிகளுக்கு உடனே புறப்பட்டு வரும்படியாக தந்திகள் பறந்தன. மறு தினம் அவர்கள் வந்து சேர்ந்ததும் தாங்கள் பிறந்த நாள் முதல் கண்டறியாத தந்தையையும், சில வருஷங்களுக்குமுன் மறைந்துபோயிருந்த தாயையும் ஒரே சமயத்தில் கண்டு கரைகடந்த ஆனந்தங் கொண்டனர். பெற்றோர்கள் இருவரும் தம் புத்திரிகளைத் தழுவிக்கொண்டு மகிழ்ச்சியுற்றனர். தான் செய்த மகத்தான தவறுக்கு லக்ஷ்மி இப்பொழுது மனமாரப் பச்சாத்தாபப்பட்டு, தன் தாயின் காலடிகளில் விழுந்து மன்னிப்பை வேண்டினாள். பெற்ற மனம் பித்து ஆனபடியால் எத்தகைய குற்றத்தையும் மன்னித்துவிடும் சுபாவம் உள்ளது தானே!

நெடுநாட்கள் பிரிந்திருந்து இப்பொழுது எதிர்பாராவிதமாய் மீண்டும் கூடிய ஒரு குடும்பம் சந்தோஷத்தில் மூழ்கியிருப்பதில், சீனுவும், அவன் தாயாரும்கூட கலந்துகொண்டார்கள் என்று நாம் சொல்லாமலே வாசகர்கள் தெரிந்து கொள்வார்கள். ஒரு வாரம் எல்லோரும் ஆனந்தமாகக்கூடி சீனுவின் வீட்டிலேயே தங்கி இருந்தனர். பிறகு லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் தத்தம் இல்லம் சென்றனர்.

மதுரம் மறுபடியும் சென்னை வந்து சேர்ந்தாள். தான்மட்டும் இல்லை; கூடவே தன் பர்த்தாவையும் அழைத்து வந்திருந்தாள். வித்யா நிலயத்திற்கு அருகாமையிலேயே ஒரு சிறிய வீடு வைத்துக்கொண்டு முன்போலவே அந்நிலயத்தில் தான் செய்துவந்த கைங்கர்யத்தை செய்துவந்ததுமன்றி பதிசிச்ருஷைகளையும் குறைவின்றி செய்துகொண்டு மனச் சாந்தியுடன் சந்தோஷமாக இருந்துவந்தாள். தனக்கு சக்தியுள்ளவரையில் வித்யாநிலயத்திற்காக உழைத்துவிட்டு, பிற்பாடு தானும் தன் கணவனும் சீனுவிடமே வந்து தங்கள் அந்திகாலத்தை கழிப்பதாக சீனுவுக்கு மதுரம் வாக்களித்தாள். மதுரம் எவ்வளவு மறுத்தும் கேளாமல் சீனு பதினைந்தாயிரம் ரூபாய்களை மதுரத்தின் செலவுக்காக பலவந்தப்படுத்தி அவளிடம் அளித்தான். அந்தத் தொகையில் பெரும்பாகத்தை "விவித வித்யா நிலயத்திற்கு" நன்கொடையாக அளித்துவிட்டு பாக்கியைத் தன் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டாள் மதுரம்.

பல வருஷங்களாக இருளடைந்திருந்த மதுரத்தின் வாழ்க்கை இப்பொழுது பிரகாசத்துடன் சோபித்தது. கடைசியில் அவளுடைய திடமான நம்பிக்கை வெற்றிபெற்றது.

சுபம்!

ஆப்டோன் ப்ளாக்குகளும்

அழகான கலர் ப்ளாக்குகளும்

செய்யுமிடம்!



எம். ஸி. அப்பாசாமி செட்டி & கோ.,

14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதருஸ்.

# போஸ்டாபீஸ்

●

விடியற்காலம் எங்கும் ஒரே மூடுபனி. கடுமையான குளிர். மங்கலான ஆகாய வெளியில் நக்ஷத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. மனிதனுடைய வாழ்க்கையில் தோன்றித் தோன்றி மறையும் ஆனந்த நினைவுகளைப்போல் அவைகள் விட்டுவிட்டுப் பிரகாசித்தன. சாலையின் ஓரமாக ஒரு கிழவன் போய்க்கொண்டிருந்தான். பழைய கம்பளியால் போர்த்திய அவனுடைய சரீரம் குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தது.

சுதந்திரமாக வாழ்க்கை நடத்தும் வீடுகளிலிருந்து மாவரைக்கும் யந்திரத்தின் இனிமையான ஓசை அப்பெண்களுடைய மெல்லிய குரலோசையுடன் கலந்துவந்தது. அந்த நிசப்தமான இரவில் கிழவனுக்குத் துணையாக வந்தது அந்த ஓசை. தூரத்தில் நாய்கள் குரைக்கும் சப்தம். மரங்களில் இறக்கைகளை அடித்துக்கொள்ளும் பக்ஷிகளின் மெல்லிய சப்தம். இவைகளைத் தவிர நகரமெங்கும் ஒரே நிசப்தம்.

ஒருபுரம் மரங்களின் வரிசை. மற்றொரு புரம் அங்கராத்தின் பெரிய தோட்டம். இங்கே குளிரும், இருட்டும் இன்னும் அதிகமாகக் காணப்பட்டன. சுக்கிரனுடைய மங்கிய ஒளி பூமியில் பனியைப்போல் பரவியது. அப்பெரிய தோட்டத்தின் கோடியில் ஒரு அழகான கட்டடம் இருந்தது. அவ்விடத்தை நோக்கி வெகு சாந்தமாக போய்க்கொண்டிருந்தான் கிழவன். கதவுகளின் இடுக்கு வழியாகத் தெரியும் மந்தமான தீப ஒளியில் கிழவனுடைய முகம் மலர்ந்தது. என்ன ஆனந்தம்! எவ்வளவு நம்பிக்கை அக்கண்களில்.

வாயிற்புறத்திலுள்ள பலகையில் 'போஸ்டாபீஸ்' என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் கிழவனுக்கு கடவுளையே கண்டது போன்ற பெருமிதம். மெதுவாகத் திண்ணையில்வந்து உட்கார்ந்தான்.

உள்ளே வேலையிலீடுபட்டிருந்த நாலைந்து மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சப்தம் கேட்டது. "போலீஸ் சூப்ரிண்டெண்ட்"—என்ற சப்தம். கிழவன் திடுக்கிட்டு எழுந்தான். பிறகு அமைதியாக உட்கார்ந்துவிட்டான். அன்பும், ஆவலும் அவனை உலுக்கியது. அவனுடைய தேகத்தில் திடீரென்று உஷ்ணம் ஏறியது.

உள்ளேயிருந்து மறுபடியும் கூப்பிடும் குரல்—'ஸார்டர்' ஆங்கில கடிதங்களினுடைய விலாசத்தைப் படித்துப் படித்து 'போஸ்ட்மேன்' எதிரில் போட்டுக்கொண்டிருந்தான்.

கமிஷனர்—திவான்—சூப்ரிண்டெண்ட்—லைப்ரேரியன்—அட்வகேட்-டாக்டர் இவ்விதமாக ஒன்றன்பின்னொன்றாக வேகமாக கடிதங்களை வீசிக்கொண்டிருந்தான் 'ஸார்டர்'.

இதனிடையில் "கோச்மேன் அலிபாபா!" என்ற குரல் ஒலித்தது. கிழவன் சிரத்தையுடன் எழுந்து நின்று ஆகாசத்தை நோக்கிக் கைகூப்பினான். பிறகு மெதுவாக கதவின் மீது கை வைத்தான்.

"கோகுல்!"

"யார் அது?"

"என் கடிதம் இருக்கிறதல்லவா? நான் வந்திருக்கிறேன்." உடனே பரிகாசச் சிரிப்பின் ஒலி அறை முழுவதும் ஒலித்தது.

"யார் இவன்?"—போஸ்ட்மாஸ்டர் கேட்டார்.

"ஸார்! இவன் ஒரு பைத்தியம். தினமும் தனக்கு கடிதம் வருமென்று இங்கு வந்து 'முகாம்' போட்டுவிடுவான்" என்று 'ஸார்டர்' கூறினான்.

போஸ்ட்மாஸ்டர் வெறுப்புடன் அவனைப் பார்த்தார். இதற்குள் கிழவன் தன்னுடைய இடத்தில் போய் உட்கார்ந்தான். ஐந்து வருஷங்களாக இதே இடத்தில் வந்து உட்காருவது அவனுக்கு வழக்கமாகிவிட்டது.

## 2

'கோச்மேன்' அலிபாபா வேட்டையாடுவதில் ரொம்ப கெட்டிக்காரன். குடிகாரனால் எப்படி குடிக்காமல் இருக்க முடிவதில்லையோ, அதே மாதிரி அலியினால் வேட்டையாடாமல்

**'ஹரிணி'**

★

இருக்க முடியாது. பக்ஷிகளைக் குறி தவறாமல் சுடுவதில் கைதேர்ந்தவன்.

ஆனால் வாழ்க்கையின் சந்தியா காலத்தில் அவனுடைய மனம் வேறொரு திசையில் திரும்பிவிட்டது. அவனுடைய ஒரே பெண் 'அமீனா' விவாகமாகி கணவனுடன் சென்று விட்டாள். அமீனா தாயற்ற குழந்தை. அலி பாபா குழந்தையின் களங்கமற்ற முகத்தைக் கண்டு, மனைவியின் பிரிவை ஒருவாறு சகித்து வந்தான். தன்னுடைய உயிரையே அக்குழந்தையிடம் வைத்திருந்தான். மாப்பிள்ளை தூர தேசத்தில் பட்டாளத்தில் உத்யோகமாகி யிருந்தான். என்ன செய்வது! என்றைக்கிருந்தாலும் பெண் குழந்தை பிறர் பொருள் தானே.

பாவம்! யாருக்காக உயிரை வைத்துக் கொண்டிருந்தானோ அவளிடமிருந்து ஐந்து வருஷங்களாக ஒரு சமாசாரமும் தெரிய வில்லை. கடிதத்தை எதிர்பார்த்துப் பார்த்து அவனுடைய மனமும் குன்றிவிட்டது. சிநேகம், வாத்ஸல்யம், அதன் பிரிவு என்பது எப்படிப்பட்டதென்று அவன் இப்பொழுதுதான் உணர்ந்தான்.

கௌதாரியினுடைய சிறு குஞ்சுகள், பயத்தினாலும், துக்கத்தினாலும் துடிதுடித்து இங்குமங்கும் ஓடுவதைக்கண்டு சிரித்துக் கொக்கரிப்பான். இது—அவனுடைய—வேட்டைக்காரனுடைய ஆனந்தம்.

வேட்டையினுடைய ஆனந்தம் அவனுடைய ஒவ்வொரு நரம்பிலும் பரவியிருந்தது. ஆனால் என்றைய தினம் அமீனா ஊருக்குச் சென்றாளோ அன்றைய தினமே அவனுக்கு உலகம் இருண்டு விட்டது போலிருந்தது. வேட்டையில் மனம் செல்லவில்லை. ஒரே இடத்தில் உட்கார்ந்து தூரத்திலுள்ள பசுமையான வயல்களைக்கண் கொட்டாமல் பார்ப்பான். வாழ்க்கையிலேயே முதன் முதலாக இயற்கையில் அன்பின் உதயமும், பிரிவின் கண்ணீரும் இருப்பதாகக் கண்டான். அடிக்கடி தனிமையில் உட்கார்ந்து மனம் விட்டு அழுவான்.

ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் எழுந்து தபாலாபீசுக்குப் போய்வர ஆரம்பித்தான். தினமும் ஏமாற்றமும் ஏக்கமும் நிறைந்த மனதுடன் திரும்புவான். ஆனால் என்றையதினமாவது அமீனாவினுடைய கடிதம் வருமென்று பூரணமாக நம்பியிருந்தான். 'போஸ்டாபீஸ்' —உலகத்திலேயே ரசமற்று, மனிதனுடைய மனதை உணர்ச்சியற்றுப் போகும்படி செய்யும்—'போஸ்டாபீஸ்' அலிபாபாவுக்கு புண்ய க்ஷேத்திரமாகவும், நம்பிக்கை நிரம்பிய இடமாகவும் ஆகிவிட்டது. ஒரே இடத்தில், அதே மூலையில். உட்காருவது வழக்கமாகிவிட்டது. அவனை எல்லோரும் பைத்தியம், தபால் பைத்தியம் என்று பரிகசித்தார்கள். கடிதம் இல்லாமலிருந்தும் அவன் பெயரைக் கூப்பிட்டு, அவனை ஓடவைப்பதில் அவர்களுக்கு ஆனந்தம். சலியாத ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் அவன் வந்துகொண்டிருந்தான். வெறுங் கையுடன் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

## 3

பொழுது விடியுந்தருணம். அலி, தன்னுடைய இடத்தில் உட்கார்ந்திருந்தான். சேவகர்கள், தங்கள் தங்கள் எஜமானர்களுடைய தபால்களை எடுத்துச்செல்ல வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கவலையற்று தங்கள் ஆபீஸர்களுடைய வீட்டு சரித்திரத்தை படித்துக் கொண்டிருந்தார்கள். கதவு திறக்கப்பட்டது. தும்பைப் பூவைபோன்ற நரைத் தலையுடன் ஒருவர் உட்கார்ந்திருந்தார். துக்கமும், கலக்கமும், நிறைந்த அம்முகம் தீப ஒளியில் சோகமாகக் காணப்பட்டது. அவர்தான் போஸ்ட் மாஸ்டர். யாருடைய முகத்தில் அல்லது கண்களில் பிரகாசமும், ஆனந்தமும் இல்லையோ அவர்கள் அநேகமாக "கோல்ட்ஸ்மித்" துடைய "வில்லேஜ் ஸ்கூல்மாஸ்டர்" அல்லது இந்த நூற்றாண்டின் "கிளார்க்" அல்லது "போஸ்ட் மாஸ்டர்" ஆகத்தானிருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கை உணர்ச்சியற்றுப் போவதற்குக் காரணம் இயந்திர வாழ்க்கையும், வேலைக் கடுமையுமே.

"போலீஸ் கமிஷனர்!"—கிளார்க் கூப்பிட்டான். உடனே ஒரு யுவகன் வந்து கடிதங்களை வாங்கிச்சென்றான். "சூபரின்டெண்ட்!" மற்றொரு சேவகன் முன்னால் வந்தான். இம் மாதிரியான "ஸகஸ்ரநாமாவளியை" ஸார்டர் விஷ்ணு பக்தனைப்போல் தினந்தோறும் ஒரே மாதிரியாகப் பாராயணம் செய்துகொண்டிருந்தான்.

கடைசியில் அலியும் எழுந்து சென்றான்.

"வேலையற்றவன். தினமும் யார் இவனுக்கு எழுதுவார்கள்? பைத்தியம்" என்று கூறினார் சலிப்புடன் போஸ்ட்மாஸ்டர்.

"ஸார்? இவன் ரொம்ப அனுசாரமுள்ளவன். எத்தனையோ பாவங்கள் செய்திருக்கிறானும். அதன் பலனை அனுபவிக்கிறான்." என்றான் "போஸ்ட்மென்"

பைத்தியங்களே "விசித்திரங்கள்".

"ஆமாம் ஸார்! முன்னொரு பைத்தியம் இருந்தது. அது நாள் முழுவதும் மண்ணைக் குவித்துக்கொண்டேயிருக்கும். இன்னொருவன் தினந்தோறும், மாலையில் ஒரு நதிக்கரையிலுட்கார்ந்து கல்லின்மேல் ஜலத்தைவிட்டுக்கொண்டேயிருப்பான். இன்னொருவன் ஒரே பாட்டை தினமும் பாடுவான். மற்றொரு...." இம்மாதிரியாக அன்றைய தினம் தபால் ஆபீஸில் பைத்திய புராணம் வாசிக்கப்பட்டது.

இம்மாதிரியாக ஏதாவதொரு உபயோகமற்ற கதையை எடுத்துக்கொண்டு சிறிது நேரம் பேசி ஆனந்தமடைவது அவர்களுடைய வழக்கமாகிவிட்டது.

"இந்த பைத்தியங்களின் உலகமே தனி உலகம்" என்று கூறியவண்ணம் போஸ்ட்மாஸ்டர் எழுந்து சென்றார். சிறிது நேரத்தில் ஆபீஸ் மறுபடியும் சாந்தியுடன் விளங்கியது.

## 4

பதினைந்து தினங்களாயின. அலி வருவதில்லை. அவனுடைய ஹ்ருதயத்தை அறிந்து அனுதாபம் காட்டும் பரந்த நோக்கமுள்ள மனிதன் ஒருவனும் போஸ்டாபீஸில் இல்லை. ஆனால் அவன் ஏன் வரவில்லை என்பதை தெரிந்துகொள்ள எல்லாருக்கும் ஆவலாயிருந்தது.

திடீரென்று ஒருநாள் அலி தள்ளாடிக்கொண்டே வந்தான். அவனுக்கு மூச்சு திணறியது. முகத்தில் அந்திய காலத்தின் அறிகுறி காணப்பட்டது.

மெதுவாக முன்வந்து "ஐயா! என்னுடைய அமீனா கடிதம் எழுதியிருக்கிறாளா?" ஐயோ! அக்குரலில்தான் என்ன ஏக்கம்!

"அட! என்ன ஐயா, தொந்திரவு! நீ யாரய்யா?" என்று அதட்டினார். போஸ்ட்மாஸ்டர் மிக்க கலவரமாயிருந்தார்.

"நான்தான் அலி"

இந்த சம்பந்தமற்ற பதிலைக்கேட்டு வெகுண்டார்.

"சரிதான்போ! உன் அமீனாவும் நீயும் வெகு அழகு. அமீனாவை யார் கண்டது?" என்றார்.

"ஐயா! அப்படியில்லை. ஒரு வேளை எனக்கு கடிதம் வந்திருந்தால் என்னைத் தேடி நீங்கள் அலைய வேண்டி நேரிடுமே என்று வந்தேன்."

"சரி! சரி! உன் கடிதத்தை யாரும் தின்று விடமாட்டார்கள்" என்று கூறிச் சென்றுவிட்டார்.

அமீனாவினுடைய பெயர் அவளுடைய தந்தையைத்தவிர மற்றொருவருக்கு இரண்டு பைசாவுக்குக்கூட மதிப்பு கிடையாதென்று அலி எப்படியறியப்போகிறான். அலி தள்ளாடிக்கொண்டே நடந்தான். ஒருமுறை ஆபீஸை திரும்பிப் பார்த்தான். அவனுடைய கண்களில் அனாதையினுடைய கண்ணீர் துளிர்த்தது. சிரத்தையிருந்தது. ஆனால் தைர்யமில்லை. "ஐயோ! அமீனாவின் கடிதம் இனி எப்படி கிடைக்கும்?" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

பின்னால் யாரோ வரும் சப்தம். அலி திரும்பினான்.

"தம்பீ!"

கிளார்க் லக்ஷ்மீதாஸ் திடுக்கிட்டுப் பார்த்தான். "ஏன்?" அலி 'தன்னிடமிருந்த இரண்டு தங்க நாணயங்களை எடுத்து," இதோ பார்! தம்பி! இது இனி எனக்கு உபயோகமில்லை. இதை எடுத்துக்கொண்டு எனக்கு ஒரு வேலை செய்வாயா?"

"என்ன ?"

"அதோ! மேலே பார்! என்ன தெரிகிறது?"—அலி சூன்யமான ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினான்.

"ஆகாயம்" என்றான் லக்ஷ்மீதாஸ்.

"அதோ மேலே 'அல்லா' இருக்கிறார். அவருடைய சாக்ஷியில் நான் இதை உனக்கு கொடுக்கிறேன். என்னுடைய அமீனா கடிதம் எழுதினால் என்னிடம் சேர்ப்பிக்கவேண்டும்."

கிளார்க் ஆச்சர்யத்தினால் நின்றுவிட்டான். "எங்கே! எங்கே சேர்ப்பிக்கவேண்டும்?"

"என்னுடைய [illegible]யின் மீது"

"ஆ!" என்று பிரமித்தான் லக்ஷ்மீதாஸ்.



228525
சென்னை-600 008
எழும்பூர்




பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு நன் கொடை யெனப் போற்று கிருர்கள்,
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்.ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் :-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

**48**, பெரிய தெருவு, கும்பகோணத்தில் தினசரி காலே **8**-மணிமுதல் **10**-மணி வரையிலும், மாலே **4**-மணி முதல் **6**-மணி வரையிலும் குழந்தைகளை பரிசீலனை செய்யப்படும்.

"ஆம்! உண்மைதான். இன்றுதான் என்னுடைய கடைசி தினம். ஆம் கடைசி நாள் தான். அமீன கிடைக்கவில்லே. என் அருமை அமீன எப்படியிருக்கிறளோ? கடிதமும் கிடைக்கவில்லே."

அவன் கண்களில் ஒருவித மயக்கம். கண்ணீர் துளித்தது. லக்ஷ்மீதாஸ் மெதுவாக நகர்ந்தான். அவனுடைய சட்டைப்பையில் தங்க நாணயங்கள் கிடந்தன.

## 5

இரண்டுமாதங்கள் ஓடி மறைந்தன. அலி பிறகு திரும்பிவரவேயில்லே. ஒருவரும் அவனேப்பற்றி நினேக்கவுமில்லே.

ஒருநாள் 'போஸ்ட்மாஸ்டர்' சிறிது கவலேயாக இருந்தார். அவருடைய மகள் வெளியூரில் வியாதியாக படுத்திருந்தாள். கடிதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

தபால் பைகள் பிரிக்கப்பட்டன. கடிதங்கள் மலேபோல் குவிந்தன ஆத்திரத்துடன் ஒரு கவரை எடுத்தார். தன்னுடையதென்று நினேத்தார்.

ஆனல் அதன்மீது 'கோச்மேன்-அலிபாபா' என்று எழுதியிருந்தது. மின்சாரத்தினல் தாக்குண்டவர்போல் கடிதத்தை கீழே எறிந்தார்.

சோகத்தினலும், சிந்தையினலும், நிரம்பிய அவர் மனம் சில நிமிஷங்கள் கடூரமான சுபாவத்தை— ஆபீஸர்களுடைய இரக்கமற்ற தன்மையை— மறந்து மனிதத் தன்மையை யடைந்தது. உடனே பழய ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவர் மனத்திடையே எழுந்தது. "ஆம்! அந்தக் கிழவனுடையதுதான். அமீன தான் எழுதியிருப்பாள்" என்று சொல்லிக்கொண்டார்.

"லக்ஷ்மீதாஸ்!" போஸ்ட்மாஸ்டர் கூப்பிட்டார்.

"ஏன் ஸார்! இதோ வந்தேன்".

"அந்த கோச்மேன்—அலிபாபா— எங்கேயிருக்கிறன்?"

"தெரியாது. தேடிப்பார்க்கிறேன்."

அன்றைய தினம் போஸ்ட்மாஸ்டரினுடைய மகளிடமிருந்து கடிதம் வரவில்லே.

இரவு முழுவதும் கவலையால் அவர் தூங்கவே யில்லை. மறுநாள் விடியற்காலம் மூன்று மணிக்கே எழுந்து ஆபீஸில் போய் உட்கார்ந்து விட்டார். "நான்கு மணிக்கு அலி வருவான். நானே இக்கடிதத்தை அவனிடம் கொடுப்பேன்" என்று அவர் முணுமுணுத்தார்.

அலிபாபாவினுடைய நிலைமையை இன்று அவர் அறிந்துகொண்டார். இரவு முழுவதும் காலையில் வரப்போகும் கடிதத்தைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தார். ஐந்து வருஷங்களாக இம்மாதிரியான கணக்கில்லாத இரவுகளை கழித்த அலியைக் குறித்து அவருடைய ஹிருதயம் முதன் முறையாக அனுதாபத்தினால் நிறைந்தது. சரியாக ஐந்து மணி. கதவை யாரோ தட்டுவது போல் தோன்றியது. தபால்காரன் இன்னும் வரவில்லை. 'அலிதான் வந்திருப்பான்' என்று நினைத்து போஸ்ட் மாஸ்டர் எழுந்தார்.

தந்தையினுடைய மனதின் கஷ்டத்தை அனுபவித்தறிந்த அவர் இன்று பாய்ந்து கதவைத்திறந்தார்.

"வா! அப்பா அலி! இந்தா உன் கடிதம்."

வாயிற்படியில் ஒரு கிழவன் தடியை ஊன்றி நின்றுகொண்டிருந்தான். அவனுடைய கண்களில் கண்ணீர் வழிந்து உலர்ந்திருந்தது. அவன் கையை நீட்டினான். போஸ்ட் மாஸ்டர் திடுக்கிட்டு பின்னடைந்தார்.

"யார் ஸார்! அலிபாபாவா?" என்று கேட்டவண்ணம் லக்ஷ்மீதாஸ் வந்தான்.

போஸ்ட் மாஸ்டர் வாயிற் கதவையே கண்கொட்டாமல் பார்த்தார். அவர் கண்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தன. வாசலில் ஒருவருமில்லை.

"ஆம்! அலிபாபாதான்! யார்! நீயா?"

"ஸார்! அலிபாபா இறந்துவிட்டான். அவனுடைய கடிதத்தை என்னிடம் கொடுங்கள்."

"என்ன! இறந்துவிட்டானா? எப்பொழுது? உண்மையாகவா?"

"ஆம்! இரண்டு மாதமாகிறது."

போஸ்ட் மாஸ்டர் திடுக்கிட்டு நின்றுவிட்டார். அலியினுடைய உருவம் அவர் கண்களின் முன்னால் நின்றது. லக்ஷ்மீதாஸ் எல்லா விஷயத்தையும் கூறினான். அவர் பிரமித்து நின்றுவிட்டார். "நான் பார்த்தது அலியல்லவா? இதென்ன ஆச்சரியம்! அது பிரமையா?" என்று கூறினார்.

மறுபடியும் பழயபடி ஸஹஸ்ர நாமம் வாசிக்கப்பட்டது.

கமிஷனர்... திவான்......ஸார்ட்டர் கடிதங்களை வீசி எறிந்துகொண்டிருந்தான். போஸ்ட் மாஸ்டர் ஒவ்வொரு கடிதத்தையும் கண் கொட்டாமல் பார்த்தார். பல கடிதங்களைப் பார்த்தார். அதனால்! அவருக்கென்ன? மெதுவாக எழுந்து சென்றார்.

மனிதன் சுயநலத்தை விட்டு பிறருடைய கஷ்டங்களைக் கண்டு அநுதாபத்துடன் நடந்துகொண்டால் பாதி உலகம் சாந்தியுடன் விளங்கும்.

## 6

சூரியன் மலைவாயில் மறையுந் தருணம். போஸ்ட்மாஸ்டரும், லக்ஷ்மீதாஸும், மெதுவாக அலியின் சமாதியை நோக்கிச்சென்றனர். அமீனாவின் கடிதத்தை சமாதியின்மீது வைத்துவிட்டுத் திரும்பினர்.

"லக்ஷ்மீதாஸ்! இன்று விடியற்காலம் நீயா எல்லாருக்கும் முன்னால் வந்தாய்?"

"ஆமாம் ஸார்!"

"நீதானே கூறினாய்... அலிபாபா.........

"ஆமாம்"

"அப்படியானால்—அந்த......அந்த........... எனக்குப் புரியவில்லையே. அவன் "........"

"என்ன?"

"ஆம்....சரிதான்.... ஒன்றுமில்லை." போஸ்ட் மாஸ்டர் வேகமாக வார்த்தைகளை மழுப்பி விட்டார். ஆபீசை அடைந்ததும் அவர் தலை குனிந்து யோசித்த வண்ணம் உள்ளே சென்றார்.

அவருடைய தந்தை மனம் அலியை அறிந்து கொள்ள முடியவில்லையே என்று வேதனைப் பட்டது. இன்மைய தினமும் அவருடைய மகளிடமிருந்து கடிதம் வரவில்லை. சந்தேகத்தினாலும், விசாரத்தினாலும் இரவு முழுவதும் தூங்கவில்லை. ஆச்சர்யம், பச்சாத்தாபம், கவலை, சந்தேகம், முதலிய பலவிதமான எண்ணங்களினால் அவர் மனம் தத்தளித்தது.

# ஜஹ்னார் பேகம்

'அமரன்'

உத்தியானவனத்தில் சலவைக் கல்லால் செய்த பளிங்கு மேடையில் வீற்றிருந்தாள் ஜஹ்னார். பூரணச்சந்திரன் முழுச் சோபையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அவளது மதிவதனத்தில் சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது. அவளது எழிலுருவத்தை வர்ணிக்க என்னால் இயலாது. ஒரு கவி சிரேஷ்டனும், சைத்திரிக நிபுணனுங்கூட பூர்ணமாக அந்த சர்வாங்க சுந்தரியை வர்ணிக்க முடியாதென்றால், கேவலம் என்னால் முடியுமா? அவளிடம் யௌவனம் பூர்ண விகசிதம் அடைந்துவிட்டது. சுருங்கக்கூறின் அவளை ஓர் அழகுத் தெய்வம் என்றே கூறலாம்.

பூர்ணச்சந்திரனில் சிறிது களங்கமிருப்பது போல் அவளது கோமள ஹிருதயத்திலும் சிறிது வருத்தமிருந்தது. பௌர்ணமிச் சந்திரனைக் கண்ணுற்றதும் அவளது மனக்கண் முன் பழைய காட்சி தோன்ற ஆரம்பித்தது. திடீரென ஜஹ்னாரின் சிந்தனைச் சுடர் மூன்றாண்டுகளுக்குப் பின் நோக்கிச் சிதறிற்று.

இதே உத்தியானவனத்தில், நிறைமதியின் தண்ணொளியைக் கண்டு மலர் நகை புரியும் முல்லைப்பந்தலின்கீழ் அவளாருயிர்க் காதலன் அலிகான் அன்பின் முழுவேகத்துடன் கூறிய உறுதிமொழிகள் இன்னும் அவள் காதுகளில் மதுரமாக ஒலித்துக்கொண்டிருந்தன. "மதுரவசனி, ஜஹ்னார்! அதோ பார். பூர்ணச்சந்திரன். எண்ணற்ற கோடி விண்மீண்கள். அவைகளே எனக்கு சாட்சிகள். நான் இப்பொழுது நடக்கும் இந்தக் கோர யுத்தத்தில் இறந்தொழியாதிருந்தால், இன்னும் ஐந்து பௌர்ணமிகள் பூர்த்தியாவதற்குள் வெற்றி மாலை சூடி, ஜயத்துடன் ஜயசிலனாக திரும்பி உன்னை வந்தடைவேன். அதன் பிறகு 'கமலநயனி' நீ என் கிருக லட்சுமியாய், ஸகதர்மிணியாய், என்னருமை பீபியாய், என் அரண்மனையை அலங்கரிக்கப்போகிறாய்.................."

யுத்தம் முடிவடைந்துவிட்டது. போர்க்களத்தினின்றும் வீரர்கள் திரும்பிவிட்டார்கள். அவனுடைய "கெடு"வின்படி ஐந்து, அல்ல, எத்தனையோ ஐந்து பௌர்ணமிகளும் கழிந்துபோய்விட்டன. இன்னும் அலிகான் திரும்பி வந்தபாட்டைக் காணோம். அவனைப்பற்றிய தகவல் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை,—அவனுடன் சென்ற வீரர்களிடமிருந்து. இவ்விதம் ஜஹ்னார் சிந்தனை செய்துகொண்டிருக்கையில் கமீல்கான் அவ்விடம் வந்தான்.

ஃ ஃ ஃ

அலிகானும் கமீல்கானும் பள்ளிப்பருவத்திலிருந்தே இணைபிரியாத தோழர்கள். அவர்களிருவரும் ஒரே குருநாதனிடம் கல்வி, கேள்வி, வில்வித்தை, வாட்போர், மல்யுத்தம், கரியேற்றம், பரியேற்றம், சாரத்தியம் முதலியன கற்றுத் தேர்ச்சியடைந்தார்கள். பின்னர் இருவரும் பாமினி ராஜியத்தின் ஒப்பற்ற மாபெரும் வீர சிகாமணிகளாய் விளங்கினார்கள். அவர்களது நட்பிற்கு உபமானம் கூற நம்மால் இயலாது.

பாமினி ராஜ்யத்தை முகம்மது கவான் என்பவன் 1367ம் வருடம் அரசாண்டு வந்தான். அவனது திறமை வாய்ந்த தளகர்த்தர்கள் தான் அலீகானும் கமீல்கானும். முகம்மது கவானுடைய தம்பியின் ஏக புத்திரிதான் ஜஹ்னார்பேகம். அதே சமயம் பாமினி ராஜ்யத்தையடுத்த விஜய நகர ராஜ்யத்தை ராணா அமரசிம்ஹன் அரசுபுரிந்து வந்தான். இரண்டு ராஜ்யங்களுக்கும் அடிக்கடி போர் மூண்டு வந்தன. அவ்வப்போது இரு தரப்பினரிடையும் பெருத்த சேதமேற்பட்டு வந்தது.

யுத்தமென்னும் கொடிய அரக்கன் அந்த அத்யந்த—உயிருக்குயிர்—கண்ணுக்குக் கண் நண்பர்களைப் பிரித்துவிட்டது. அலிகான் அன்னிய நாட்டின்மீது படையெடுப்புக்காக பாதுஷாவால் நியமிக்கப்பட்டான். கமீல்கானுக்கு உள்நாட்டுப் பாதுகாப்பையும், கோட்டையின் பாது காப்பையும் கவனித்துக் கொள்ள உத்திரவிடப்பட்டது.

போர் முனையில் அதிகப் பயிற்சிபெற்ற தளகர்த்தன் அலிகானின் தலைமையின் கீழ் ஒரு சைனியம் விஜய நகரத்தை நோக்கிப் புறப்பட்டது. ஆனால் அமரசிம்ஹனின் மாபெருங்

குதிரைப் படையை எதிர்த்து நிற்க முடியாமல் அநேகர் குதிரைப் படையினரின் வாள்களுக்கு இரையாயினர். சிலர் சிதறி ஓடினர். இன்னும் சிலர் அமரசிப்ஹனின் சேனையாட்களால் கைது செய்யப்பட்டனர்.

∴ ∴ ∴

உத்தியான வனத்தில் கமீல்கானைக் கண்டதும் ஜஹ்னாரின் மதி வதனம் நாணத்தால் சிவந்தது.

“ஜஹ்னார், என்னை நிக்காஹ் செய்துகொள்ள சம்மதிப்பாயா?” என்று கமீல்கான் கேட்டான்.

இதைக் கேட்டவுடன் ஜஹ்னார் கொஞ்சங்கூட திடுக்கிடவில்லை. இந்தக் கேள்வியை அவன் கேட்பானென்று முன்னமேயே அவள் எதிர்பார்த்ததுதான். கடந்த சில தினங்களாக கமீல்கான் நடந்துகொண்ட விதத்திலிருந்தே அவள் அதை ஊஹித்துக் கொண்டாள். அவளைப்போன்ற கற்றறிந்த யௌவனப் பெண்ணுக்கு பட்டப் பகல் வெளிச்சமாயிருக்கும் இந்த விஷயம் புலப்படாமல் போமா, என்ன?

அவளிடம் அவன் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையின் ஒவ்வொரு அட்சரத்திலும் ஒரு நடுக்கம், ஒரு குறைவு இருந்தது. அவள் முன்னிலையில் அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் ஒரு தனி மெருகோடு விளங்கியது. ஒரு பக்தன் தன் குல தெய்வத்தின் தூய சந்நிதியில் நடந்து கொள்வதுபோல, அக்கேள்வி அவள் எதிர்பார்த்ததைவிட சீக்கிரம் வந்துவிட்டதினால் அவள் மனம் சிறிது பதட்டமடைந்தது.

மறுகணம் அவளது அழகிய சிவந்த பவளம்போன்ற இதழ்கள் ஒரு மெல்லிய புன்னகையால் மலர்ந்தன. கருமுகில் படர்ந்து மங்கியிருக்கும் வானத்தில் ஒருகணப் பொழுதிற்கு வெளிக்காட்டி மறையும் இளஞாயிறின் செங்கதிர்போல் இருந்தது அந்த மோஹனப்புன்னகை.

தான் கேட்ட கேள்விக்கு பதில் ஒன்றும் கிடைக்காததைக்கண்ட கமீல்கான் மேலும் தொடர்ந்து பேசினான், எந்தக் கேள்வியைக் கேட்பதற்கு தைரியம் போதாமல் “நாளைக்கு நாளைக்கு” என்று தவணை போட்டு வந்தானோ அந்தப் பிரமாதமான கேள்வியைக் கேட்டாய் விட்டது. இனிமேலும் வார்த்தைகளுக்கு பஞ்சமா? காட்டாற்றில் வெள்ளப்பெருக்கெடுத்ததுபோல் — கடல் மடை திறந்ததுபோல்—மலையருவிபோல் தங்கு தடையின்றி உருண்டுவழிந்தது அவன் மொழிகள்.

“ஜஹ்னார்! இன்னும் நீ அலிகானையே நினைத்துக்கொண்டிருக்கிறாய். அவனுடைய கம்பீரமான உருவத்தை உன் ஹிருதயத்திலிருந்து களைந்து எறியமுடியவில்லை. அது எனக்குத் தெரியாததல்ல. ஆனால்—ஜஹ்னார்! இதோ பார். நீ இன்னும் ஓர் சிறு பெண்ணல்ல. அலிகான் யுத்தத்திற்குச் சென்று மூன்று வருடங்களாகின்றன. யுத்தம் முடிவடைந்து அலி அடில்ஷா, அப்பாஸ்கான், நீஹங்கான் முதலிய பெரிய சேனைத் தலைவர்களின் சிரங்கள் அமரசிம்ஹனின் கோட்டை வாயிலில் தொங்கவிடப்பட்டிருக்கின்ற கோரமான செய்தியைக் கேட்டு இந்த அழகிய பாமினி ராஜியமே அவமானத்தினால் தலை கவிழ்ந்ததை நீ மறந்துவிட்டாயா? போர் முனைக்குச் சென்ற அலிகான் இன்னும் திரும்பவில்லையே? ஒன்று செருமுகத்தில் மாண்டுபோயிருக்க வேண்டும்; அல்லது உயிரின்மீதுள்ள அமோஹ பிரீதியினாலும், பணம், பட்டம் பதவி அந்தஸ்து இவைகளின் மீதுகொண்ட மோகத்தினாலும், அந்த வஞ்சகப்பதர் அமரசிம்ஹன் வீசிய—ஆசை—வஞ்சனை வலையிலகப்பட்டு, தேசாபிமானம் தாய்நாட்டுப்பற்று முகம்மதிய தர்மம், முதலியவைகளைவிட்டு ஈன புத்தியினால் ஹிந்து மதத்தில் சேர்ந்து உன்னை மறந்து, யாராவது ஒரு ஹிந்து ஸ்திரீயொருத்தியை நிக்காஹ் (மணம்) செய்திருந்தாலும் செய்திருக்கலாம்.........?”

ஐயோ வேண்டாம். நான் அவைகளை நம்பமாட்டேன். அவர் என் ஹிருதய ஈஸ்வரர் என்னையன்றி வேறொரு பெண்ணை மனதினால் கூட தீண்டமாட்டார். அவர் உயிரோடிருந்தால் ஒரு பொழுதும் என்னை மறந்து பேசாதிருக்கமாட்டார். அன்று அவர் என்னைவிட்டுப் பிரியமுடியாமல் பிரிந்து சென்றபொழுது கூறிய உறுதிமொழிகள் இன்னும் என் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கின்றன. அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவசியம் இன்னும் சிறிது நாளில் வந்து என்னைக்கடிமணம் புரிந்துகொள்வாரென்றும் என் மனதிற்குள் ஏதோ ஒன்று ஒலித்துக்கொண்டிருக்கிறது.” அவளுடைய நேத்திர கமலங்கள் பளபளத்தன. அந்தக் கமலநயனங்கள் விழிநீரைக் கக்க ஆரம்பித்தன.

"இல்லை, கமீல்கான், அவர் உயிரோடிருந்தால் கட்டாயம் இவ்வளவு காலத்திற்குள் திரும்பி வந்திருப்பார். அவர் காலதாமதம் செய்யும் பழக்கமுடையவரல்லவே. எனக்கு இன்னது செய்வதென்று ஒன்றும் புரியவில்லையே?"

"பிரிய ஜானி! பின் ஏன் தயங்குகிறாய்? அலிகான் மறைந்துவிட்டரான். அவன் இனி திரும்பி வரப்போவதுமில்லை. நீ அவனைக் காணப்போவதுமில்லை. அவனுக்கு இதுவரை உன் ஹிருதய சிம்மாசனத்தில் இடம் அளித்திருந்தாய். இப்பொழுது அந்தப்பீடம் காலியாக இருக்கிறது. உன்னுடைய உள்ளக் கோவிலை நிரப்ப வேறு யாருமில்லையா? என்னைப் பார். நான் உன்னை எவ்வளவு தூரம் அளவுகடந்து காதலிக்கிறேனென்று எனக்கே தெரியவில்லை. என் காதல் தெய்வீகக் காதல். என் காதல் ஆழமான எல்லையற்ற கடலைப் போன்றது. நீ ஒரு புனிதமான ரோஜா மலர். என் வாழ்வை மணமுள்ளதாகச் செய்யப்போகிறாய். நீ என் காதல் தெய்வம். உன் பாத கமலங்கள் பட்ட மண்கூட எனக்குப் புனிதமானது, பரிசுத்தமானது. நீ என் அருகில் இருக்கிறாய் என்கிற உணர்ச்சியே என் நரம்புகளில் புத்துணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் பாவி ஓடச் செய்கிறது. என் தூய காதலை நீ அங்கீகாரம் செய்வாயானால் உலகில் என்னால் சாதிக்கமுடியாத காரியம் ஒன்றுகூட இல்லையென்ற கர்வமும், இறுமாப்பு மெய்துவேன். நீயே என்னைக்கொண்டு இயக்கும் ஜீவன். நீ இல்லாவிட்டால் இந்த உலகமே சூன்யமாகத் தோன்றுகிறது. உலகமே இல்லையெனக்கூட கூறலாம். வேண்டாம், என்னால் அதை நினைக்கக்கூட பயங்கரமாயிருக்கிறது. கமலநயனி, ஜஹ்னார்! நான் மறுபடியும் உன்னைக் கேட்கிறேன். நீ என் மனையின் திருமகளாவதற்கு உடன்பட மாட்டாயா?"

கமீல்கான் ஜஹ்னாரின் சந்திர மண்டலம் போன்ற முகத்தை ஆவலோடு எதிர்பார்த்தான்.

காலதேவன் சிறந்ததோர் வைத்தியன். நாட்கள் செல்லச் செல்ல ஒருவருடைய மனப் புண்ணும், மன வருத்தமும், பழைய நினைவும் ஆறிக்கொண்டும், மாறிக்கொண்டும் வந்துவிடுகிறது.

"ஆனால், கமில்கான், நான் அவரைப்போல் உன்னை பாவிக்க முடியாதே! பெயரளவில் நான் உன் மனைவியாக இருக்கலாம். ஆனால் என் ஹிருதயத்தை என்னால் கட்டியாள முடியாதே! அது, "அவர், அவர்" என்று தியானம் செய்துகொண்டும், அவரைத் தேடி யலைந்துகொண்டும் இருக்கிறதே. இதற்கு என்னசெய்வேன்?"

"நான் அவ்வளவு யாசிக்கவில்லையே. நீ எவ்வளவு கொடுக்கச் சித்தமாயிருக்கிறாயோ, நான் அதையே சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். தெய்வம் கொடுக்கும் வரத்தைதானே பக்தன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான்?"

"கமீல்கான்! அப்படியானால் இன்னும் ஒருமாதம் பொருத்துக்கொள். அதற்குள் அநேகமாய் அவர் திரும்பி வந்துவிடுவார். திரும்பிவராவிட்டால் நான் உன்னை விவாகம் செய்துகொள்கிறேன். நீ இன்னும் ஒரே ஒரு மாதகாலம் பொருத்துக்கொள்."

ஃ ஃ ஃ

கமீல்கான் கண்களுக்கு அன்று அந்நகரம் புத்தாடையணிந்து நறுமலர் சூடி, முகத்தில் மோஹனப் புன்னகை தவழநிற்கும் ஒரு மணப்பெண்போல் தோன்றியது. முன்பெல்லாம் வறியவர்கள், பிணியாளர்கள் முதலியோரின் பயனற்ற கூக்குரலும், கட்குடித்து காம வெறிகொண்டு திரியும் கபடச் செல்வர்களின் களியாட்டங்களும் அன்றாடம் கால் வயிற்றுக் கஞ்சிக்காக உடல் நோக உண்மையுடன் உழைக்கும் ஏழைத் தொழிலாளர்களின் வியர்வை நாற்றமும் நிறைந்து, அவன் மனதில் வாழ்வின் அற்பத் தன்மையை அடிக்கடி நினைவூட்டிய அந்நகரம் அன்று குபேரனது போகம் கொழிக்கும் அளகாபுரி பட்டிணம் போல் காணப்பட்டது.

கமீல்கான் குதிரையின்மீது அமர்ந்து அந்நகரின் ராஜவீதி வழியாக ஊர்ந்துகொண்டிருந்தான். அவனுடைய வாழ்க்கை பரிபூர்ண மனதுடனும், சுகத்துடனும், ஆனந்தத்துடனுமிருந்தது. தன் பால்யமுதல் அவன் எந்த தெய்வத்தை நோக்கி தவங்கிடந்தானோ, அந்த தெய்வம் அவனுக்குக் கடைக்கண் கடாக்ஷித்துவிட்டது. ஜஹ்னார்பேகம் "சரி" என்று கூறி (அவனை விவாகம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டு)விட்டாள்! இனி என்ன குறை அவனுக்கு?

நகரின் ஒரு கோடியில் நோயாளிகளையும் ஆதரவற்ற வயோதிகர்களையும் போஷிப்பதற்காக பாதுஷாவால் நிறுவப்பட்டிருந்த வைத்தியசாலையில் அன்று ஒரே ஜனத்திரளாயிருந்தது. கமீல்கான் அவ்விடத்தை அடைந்ததும் தன் பரியைவிட்டு இவர்ந்து ஆங்கு புடைசூழ நின்றோரை விஷயமென்னவென்று விசாரித்தான்.

விஜயநகர மன்னன் அமரசிம்ஹனால் சிறைக்கோட்டத்திலடைக்கப்பட்ட சில மகம்மதியப் போர்வீரர்கள் சிறையிலிருந்து தப்பியோடி வந்துவிட்டார்களென்றும், அவர்களிற் சிலர் நோய்வாய்ப்பட்டிருப்பதால் வைத்தியசாலையில் தங்கி யிருப்பதாகவும் தெரியவந்தது. அவர்களிடமிருந்து விஜயநகரச் செய்தியை அறிவதற்காக கூடியிருந்தனர் நகர மாந்தர்.

கமீல்கான் ஜன சமுத்திரத்தில் நீந்தி கும்பலை விலக்கிக்கொண்டு வைத்தியசாலையினுள் நுழைந்தான். விஜய நகர மன்னன் சிறையிலடைத்தானும் மகம்மதியர்களை! என்ன இழிவு! கமீல்கானுடைய மகம்மதிய ரத்தம் கொதித்தெழுந்தது. இந்த அற்பன் அமரசிம்ஹனுக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டுமென்ற ஆத்திரம் மூண்டெழுந்தது.

வைத்தியசாலையில் முன்கட்டில் விஜய நகரத்திலிருந்து தப்பிவந்த கைதிகள் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனைச் சூழ்ந்து பலர் நின்றுகொண்டிருந்தனர். அவனுக்கு ஜன்னி கண்டிருந்தது. அறிவிழந்து கண்களை மூடிப் படுத்திருந்தான். கமீல்கான் அவனருகில் சென்று பார்த்தான். மெலிந்து பொலிவிழந்த உடல், குழி விழுந்த கண்கள், உலர்ந்து சிக்கடைந்து தொங்கும் தலை மயிர், தாடி, மீசைகளும் அவனை எங்கோ பார்த்ததுபோல் கமீல்கானுக்கு ஞாபகம் உண்டாயிற்று. நோயாளி கை கால்களையும் அசைத்துக்கொண்டு முனகினான். அவன் வாயிலிருந்து சில வார்த்தைகள் திக்குமுக்காடி வெளிவந்தன. அவ் வார்த்தைகளில் ஒன்று, கமீல்கானுடைய ஹிருதயத்தை ஊடுருவிப்பாய்ந்தது "ஜஹ்னா!"

கமீல்கான் நோயாளியை உற்று நோக்கினான்; இப்பொழுது அவனுக்கு அடையாளம் புரிந்துவிட்டது. ஆதிமுதல் இருவரும் ஒன்றாக நெருங்கிப் பழகிய நண்பனுக்குத் தன் நேயனை அடையாளம் கண்டுகொள்ள முடியாதா என்ன? ஆம்! ஆம்! அதே அலிகான் தான். கொஞ்சங்கூட ஐயமில்லை. அவன் போரில் மாளவில்லை. ராணா அமரசிம்ஹனின் கைதியாக இருந்து இப்பொழுது தப்பியோடி வந்திருக்கிறான்!

கமீல்கான் திக்பிரமை தெளிவதற்கு சரியாக அரை நாழிகை நேரம் பிடித்தது. அலிகான்! அவன் தன் ஆருயிர்க் காதலியைத்தேடி மரணத்தின் கோரவாயிலிருந்து தப்பியோடி வந்துவிட்டான்! காதலியும் அவனுக்காக ஏங்கிக் காத்துக்கிடக்கிறாள். அப்படியாயின் கமீல்கானுக்கு இடம் எங்கிருக்கிறது? வாழ்க்கைப்புயலில் ஒதுங்கிக் கொள்வதற்கு ஒரு சிறு புகலிடம்.........?

உலகம் முழுவதையும் திடீரென்று ஒரு கனத்த அந்தகாரம் கௌவிக்கொண்டது போல் தோன்றியது. அவ்வந்தகாரத்தின் மத்தியிலிருந்து உதிரம் உறைவது போன்ற உணர்ச்சியைக் கொடுக்கும் கோரமான அமானுஷிகக் குரல்கள் எழுந்தன! மானசீகமான போக உலகங்கள் இருந்த இடத்தில் இருள் கவிந்த சோக உலகங்கள் வாய்பிளந்துகொண்டிருந்தன.


**Raman & Raman, Ltd.**

Automobile Engineers, Kumbakonam,
offer a

Business-like
Unique
Simple
Systematic
Economic
Regular
Valid
Ideal
Comfortable
&
Efficient.

Quick running
Time saving
and
Money saving.

**BUS-SERVICE**

between Kumbakonam & Tiruvarur.

On previous notice, we can supply decent buses at concessional rates, for pilgrimage-tour, picnics, marriage parties and for educational tour for College and School students under efficient supervision.

For details please enquire at our Registered Office

**Nageswaran North St., Kumbakonam**

*(Undertakeevery kind of Automobile repairs.)*

8

காடாந்தகாரத்தில் தோன்றி மறையும் மின்னல்போல கமீல்கான் மனதில் ஒரு சிறு நம்பிக்கை உதமாயிற்று. அலிகான் யாருமற்ற ஓர் அனாதை. அவன் அப்படியே அந்த வைத்தியசாலையில் கிடந்து ஜன்னி நோயால் மாண்டு போனாலும், "ஏன்?" என்று கேட்பதற்கு நாதி யாருமில்லை அவன் சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த செய்தியும் ஒருவருக்கும் தெரியாது. கமீல்கான் அலிகானை அடையாளம் கண்டுகொண்டதைப்பற்றி யாருக்கும் கூறாமல் இருந்துவிடவேண்டியதுதான்; இன்னும் இரண்டு வாரங்களில் விவாகம் முடிந்துவிடும்; அதன் பிறகு ஜஹ்னாருக்குத் தெரிந்தாலும் பரவாயில்லை.

ஒரு கணம் கமீல்கானுடைய மனம் இருளுக்கும், ஒளிக்கும், நரகத்திற்கும், மோக்ஷத்திற்கும், பைசாசத்துவத்திற்கும், அமரத்துவத்திற்கும் இடையில் கிடந்து திசையறியாது தள்ளாடியது. ஒரே ஒரு கணம்தான் இந்த யோசனை. மறுகணம் அவன் மனம் சாந்தியடைந்தது. இருள்மூடி பெருமாரி பெய்த வானத்தில் திடீரென்று மேகங்கள் கலைந்து சூரிய ஒளி பாய்ந்ததுபோல இருந்தது. அவனுடைய ஹிருதயத்தில் என்றுமில்லாத எல்லையற்ற விம்மித மயக்கம் குடிகொண்டது.

கருத்தொருமித்த காதலர்களிருவரின் சந்தோஷ வாழ்க்கையில் கமீல்கான் குறுக்கிட விரும்பவில்லை. தன்னுடைய உண்மையான மைத்திரேயனுக்குத் துரோகம் செய்ய அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அவர்களுடைய உண்மையான, தூய்மையான, புனிதமான தெய்வீகக் காதலுக்கு இடையூறாக—முட்டுக்கட்டையாக—நிற்க விரும்பவில்லை. தன்னுடைய மித்திரனுக்காகவும், தன்னால் காதலிக்கப்பட்ட பெண்ணுக்காகவும், அவளுடைய இன்பகரமான வாழ்க்கையைக் கருதியும், தன் வாழ்க்கையையும், ஒருதலைக் காதலையும் தியாகம் செய்ய முன்வந்தான்.

அங்கு குழுமியிருந்தவர்களின் உதவியைக்கொண்டு அலிகானை ஒரு பல்லக்கில் ஏற்றி அவனைத் தன் அரண்மனைக்கு எடுத்துச்சென்றான் கமீல்கான் அவ்விடம் ராஜ வைத்தியர்களைக் கொண்டு மிகுந்த பிரயாசையெடுத்து அவனுக்கு முதல்தர சிகிச்சை செய்வித்தான். அதன் பலனாக அலிகான் ஒரு வாரத்தில் ஜன்னி தெளிந்து எழுந்திருந்தான். இனி நல்ல புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஆகாரங்களை யருந்தி உடலைத் தேற்றிக்கொள்ளவேண்டியதுதான் பாக்கி.

மறுநாள் காலையில் கமீல்கான் தன் குதிரையிலேறிக்கொண்டு ஜஹ்னாரின் அரண்மனைக்குச் சென்றான். ஜஹ்னார் அவனை மலர்ந்த முகத்தோடு அன்புடன் வரவேற்றாள்.

"ஏது, சில தினங்களாக நீங்கள் இந்தப் பக்கமே வரவில்லையே. ஒரு வேளை என்னை மறந்துவிட்டீர்கள்போலும்! வேறு யாராவது ஒரு அழகியை……………" என்று பரிகாசம் செய்தாள் ஜஹ்னார்.

"இல்லை ஜஹ்னார்; இவ்வளவு நாட்களாக மிகுந்த சிரமப்பட்டு உன் இஷ்டதெய்வத்தின் விக்ரகம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். அது இப்பொழுதுதான் செய்து முடிந்தது. அது உன் பூஜைக்கு உகந்ததாக இருக்குமென நினைக்கிறேன். அது ரொம்ப அபூர்வமாக அமைந்திருக்கிறது. புறப்படு ஜஹ்னார். நீ வந்துதான் அதற்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும்."

"கமீல்கான்! நீங்கள் சொல்வதும் ஒன்றும் புரியவில்லையே? ஏதோ புதிர்போடுவதுபோலிருக்கிறது. சரி, அது கிடக்கட்டும். ஏன் நீங்களே இங்கு வரும்பொழுது அதைக் கொண்டுவந்திருக்கக்கூடாது?

"இல்லை. அதை இங்கே கொண்டுவர முடியாது. அது மிகப் பெரியது. பிறரது கண் பட்டால் அதன் மேன்மை குன்றிவிடும். நீதான் அதை முதன்முதலில் பார்க்கவேண்டும். ஜஹ்னார், இப்பொழுதே வருகிறாயா? உனக்காக என் பல்லக்கு வெளியே காத்துக்கொண்டிருக்கிறது."

"சரி இருங்கள், இதோ ஒரு நொடியில் நல்லுடை தரித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்."

வழியில் ஜஹ்னாருடன் சாதாரண விஷயங்களைப்பற்றி சம்பாஷித்தான். அவனுடைய மனதை ஒரு பெரும் பாராங்கல் போன்ற வஸ்து அழுத்திக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை.

அரண்மனையை யடைந்ததும் நேராக அலிகான் சயனக் கிருஹத்திற்கு ஜஹ்னாரை அழைத்துச் சென்றான். கபாடம் மூடப்பட்டிருந்தது. "ஜஹ்னார்! உள்ளே இருக்கிறது காதல் தெய்வத்தின்—இஷ்ட தெய்வத்

தின் விக்ரஹம். உன்னைக் கண்டதும் அது புத்துயிர் பெற்று எழுந்துவிடும். அதைக்கண்டு நீ ஆச்சரியப்படாதே" என்று தடதடவெனக் கூறி அறைக் கதவை வேகமாகத் திறந்தான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை; அவன் குரல் தழதழத்தது; அவன் தொண்டையை அடைப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

ஒரு கணம் ஜஹனார் கல்லாய்ச் சமைந்து நின்றாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. கனவா நினைவா எனத் திகைத்தாள். அலிகான் உயிருடன் கட்டிலில் ஒய்யாரமாக எங்கேயோ பார்த்துப் படுத்துக்கொண்டிருந்தான். மறுகணம் 'என் துரையே' என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள். கமீல்கான் கதவை ஓசைப்படாமல் மூடிவிட்டு வெளியே நின்றுகொண்டிருந்தான். அவன் உள்ளம் ஒருபுறம் பூரிப்பும் மறுபுறம் தாங்கவொண்ணாத் துயரமுமடைந்தது. அறையின் உள்ளிருந்து விம்மல் சப்தங்களும் விக்கல் சப்தங்களும் கேட்டன. 'கண்ணே' என்றது ஆண் குரல், 'நாதா' என்றது பெண் குரல். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? காதலரிவரும் விஷயமறிந்து வெளியே ஓடி வந்தனர்.

"கமீல்கான்! உன்னுடைய பேருதவிகளுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு உயிர்ப்பிச்சை அளித்து, என்னுருயிர்க் காதலியையும் என்னிடம் கொண்டுவந்து சேர்ப்பித்துவிட்டாய். உனக்கு என்ன கைம்மாறு செய்வதெனத் தெரியவில்லை" என்றான் அலிகான்.

"நண்பா! நான் என்ன பிரமாதமாகச் செய்துவிட்டேனென்று வானளாவப் புகழ்கிறாய். உனக்குப் பெருத்த துரோகம் அல்லவா செய்யக் காத்திருந்தேன். கடவுள் என்னைத் தடுத்து நற்புத்தி புகட்டினார். அதன் பிறகு என் கடமையைச் சரிவரச் செய்தேன், அவ்வளவுதான்" என்றான் கமீல்கான்.

"கமீல்கான்! நீங்கள் எனக்கு இழந்த தனத்தை—உயிரை—மீட்டுக் கொடுத்தீர்கள். என் வாழ்வை அமர வாழ்வாகச் செய்தீர்கள். இந்த நன்றியை என் உயிருள்ளளவும் மறக்க மாட்டேன்" என்றாள் ஜஹனார்.

காதலரிவரும் கமீல்கானின் பேருதவியையும், தன்னலமற்ற தியாகத்தையும், நட்பின் மேன்மையையும் பாராட்டி நன்றி செலுத்தினார்கள். காலதேவன் ஒரு மாயாவி. மாயமாக மறைந்துவிடுகிறான். ஈராண்டுக்குப்பின் ஜஹனாருக்குப் பிறந்த ஆண் மகனுக்கு கமீல்கான் எனப் பெயர் வைத்தார்கள்.


## கர்ப்பத்தடைக்கு

"ரஹத்" தவறாத பலனைக் கொடுக்கும் மருந்து. மூன்று நாள் உபயோகத்திலேயே ஆச்சர்யமான குணமளிக்கும். கர்ப்பத்தினால் உண்டாகும் பீதியை அறவே ஒழித்து மன நிம்மதியளிக்கும். தேகத்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாது. மாதவிடாயிற்கு எவ்வித இடையூறின்றி பயனளிக்கும். விலை ரூ. 5—8—0.

மருந்துடன் எங்கள் உத்திரவாதம் அனுப்பப்படும்.

## நின்றுபோன மாதவிடாய்

மறுபடியும் ஒழுங்காக மாதவிடாய் ஏற்பட வேண்டினால் "த்ரீநாட்" மாத்திரைகளை உபயோகியுங்கள். மாதவிடாயையே ஒழுங்குபடுத்தும் சக்திவாய்ந்தது. எங்கள் உத்திரவாதத்துடன் விலை ரூ. 5—8—0.

டாக்டர் **S. H. Khan** (கான்)
**42,** சர்ச்கேட் தெரு, போர்ட்,
பம்பாய்.

# ரதி மன்மத பரிணயம்

**[பண்டைய கிரேக்க புராணக் கதையொன்றை ஒட்டி எழுதியது]**

'மாரார்'

●

### (முன் கதைச் சுருக்கம்)

[வட தேசத்திய அரசனொருவனுக்கு மூன்று குமாரிகளிருந்தனர். அம்மூவரில் மூன்றுவது குமாரி மட்டும் உலகத்தில் எங்கும் காணக்கிட்டாத சௌந்தர்யத்துடன் விளங்கினாள். அவளுடைய புகழ் எங்கும் பரவி தேசம் தேசமாக ஜனங்கள் யாத்திரை வந்து, ஆலயங்களிலுள்ள தெய்வத்தையும் மறந்து இவளை பூஜிக்க ஆரம்பித்தனர். இதனால் கோபங் கொண்ட மஹாலக்ஷ்மி, மன்மதனை அழைத்து அந்தப் பெண்ணுக்கு காதல் நோய் உண்டாக்கும்படி கட்டளையிடுகிறாள்.

ரதியெனப் பெயர் பூண்ட அந்த மூன்றுவது குமாரத்தியின் தமக்கைகளுக்கு மணம் முடிந்துவிட்டது. ரதியை மட்டும் தூரத்தில் நின்று பார்த்து வியந்தார்களே தவிர அவளை யாரும் மணக்கத் துணியவில்லை. இதனால் மனம் வருந்திய அரசன் ஜோஸ்யர்களை வரவழைத்து அவள் ஜாதகத்தைப் பார்த்தார். ஜோஸ்யர்கள் அவளுக்கு மனுஷ்ய கோடியில் கணவன் கிடைக்க மாட்டான் என்றும், யாவரும் அஞ்சும்படியான ஒரு தெய்வீக புருஷன்தான் கிடைப்பானென்றும் கூறி, அவளை மணக்கோலத்துடன் அருகிலுள்ள பர்வதத்தின் தாழ்வாரத்தில் கொண்டு விட்டுவிடும்படியும் கூறினார்கள். அரசனும் அப்படியே அவளை அலங்கரித்து பர்வதத்தில் கொண்டு விட்டு விட்டான்.

தனிமையில் விடப்பட்ட ரதி தன் விதியை எண்ணி அங்கேயே புலம்பிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கு தென்றல் வீச ஆரம்பித்தது. அத்தென்றல் அவளை ஒரு அழகிய மாளிகையில் கொண்டு போய் விட்டது. அங்கு அவளுக்கு கண்ணுக்கு புலப்படாத அநேக ஏவலாளிகள் பணிவிடை செய்தார்கள். மன்மதனே அவளழகில் மயங்கி இவ்வளவு ஏற்பாடுகளும் செய்திருப்பது அவளுக்குத் தெரியாது. அன்று இரவு மன்மதன் அவளை மனைவியாக்கிக் கொண்டான். தினமும் அவ்வாறே இரவில் அவளுடன் களித்திருந்துவிட்டு பகலில் மறைந்து விடுவதுமாயிருந்தான். ஆனால் ரதிக்கு தன் கணவன் யாரென்று தெரியாமலே இருந்தது.

ரதியின் சுகபோகங்களை அறிந்த அவள் சகோதரிகள் பொறாமை கொண்டு அவளுக்கு இன்னல்கள் புரிய சதியாலோசனை செய்தார்கள். இதையறிந்த மன்மதன் ரதியிடம், அவள் சகோதரிகள் அவளைப் பார்க்க வருவார்களென்றும், அவர்களிடம் ஜாக்கிரதையாகப் பழகவேண்டுமென்றும், தான் யார் என்று தெரிந்து சொல்லும்படி அவளைக் கேட்பார்களென்றும், அதற்கு அவள் பதில் சொல்லாதிருக்க வேண்டுமென்றும் கூறுகிறான். மேலும் அவளுக்கு தேவ புருஷ பதவியுள்ள ஒரு குழந்தை பிறக்குமென்றும், சகோதரிகளிடம் தான் கூறியதற்கு மாறாக நடந்துகொண்டால் குழந்தை மானுஷ்ய கதியடைந்து யமனுடைய ஆளுகைக்கு உட்பட நேரிடுவதுடன், ரதியும் கஷ்டப்பட நேருமென்றும் கூறுகிறான்.

ரதியின் சகோதரிகள் அவ்வாறே அவளிடம் வந்து இச்சகமாகப் பேசி அவள் கணவன் யாரென்று கேட்கிறார்கள். கபடந் தெரியாத ரதி தன் கணவனுக்கு 40 வயதிருக்கலாமென்றும், தூரதேசத்திற்கு வியாபார நிமித்தமாகப் போயிருக்கிறாரென்றும், தலை சற்று நரைத்திருக்குமென்றும் கூறுகிறாள். ஆனால் அவள் சகோதரிகள் அவள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதாக எண்ணி அவளுக்கு கெடுதல் செய்ய யோஜித்துக் கொண்டு போகிறார்கள்.]

மறுபடியும் ஒருநாள் அவர்கள் ரதியைப் பார்க்கவந்தார்கள். அவளைப் பார்த்து "குழந்தாய்! என்னமோ ஒன்றும் தெரியாதவளாய், தனக்கு வந்திருக்கிற ஆபத்தை அறியாமல் அற்பசுகத்தை அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறாய். உன்னுடன் ராத்திரியில் சயனித்துப் போவது ஒரு பிசாசென்று தோன்றுகிறது. ஜோஸ்யர்களும் உன் பர்த்தா மனுஷியர்களெல்லோரும் அஞ்சக்கூடிய பிராணி என்று சொல்லியிருக்கிறார்களல்லவா? அப்படியே உன்னுடை அரண்மனையினண்டை இரவில் அந்தப் பிசாசு வருகிறதைச் சிலர் கண்டதாகச் சொல்லுகிறார்கள். உன் கர்ப்பம் பூர்ணமாகிற வரையில் உன்னை வஞ்சித்திருந்து பிறகு உன்னையும் உன் சிறு குழந்தையையும் விழுங்கிவிடும். நாங்கள் சகோதர வாஞ்சையினால் முன்னமே உனக்கு எச்சரிக்கை செய்கிறோம். இஷ்டப்படி நீ செய்" என்றார்கள். அது கேட்டு ரதி அவர்கள் கபட வார்த்தையை பரமார்த்த மென்றெண்ணித் தன் கணவன் சொல்லிப்போன புத்தியை மறந்து தனக்குத்தானே மிகுந்த தீங்கை விளைவித்துக்கொண்டாள். அவர்களைப் பார்த்து ரதி "அக்கா நீங்கள் சொல்வது உண்மையாயிருக்கலாமென்று தோன்றுகிறது. நான் அவரை இதுவரையில் கண்ணால் கண்டதில்லை. தன்னை நான் பார்க்காதபடி பயம் காட்டிப் போகிறார். ஆகையால் இந்த சமயத்தில் உங்கள் தங்கையை நீங்கள் கைவிடலாகாதென்று நடுங்கிக் கெஞ்சினாள்.

அதற்கு அவர்கள் "இந்த ஆபத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும் மார்க்கத்தைக் காண்பிக்கிறோம். நீ நாங்கள் சொல்லுகிறபடி செய்யவேணும். நீ படுத்துக்கொள்ளும் மஞ்சத்தின் ஒரு பக்கத்தில் ஒரு கத்தியை ஒளித்து வை. ஒரு தீபமேற்றி அதன் வெளிச்சத்தை மறைத்து இன்னொரு பக்கத்தில் தயார் செய்துகொள். அந்தக் கொடிய பேய் வந்து உன் பக்கத்தில் படுத்துத் தூங்கவாரம்பித்ததும் மெல்லெ‌ன எழுந்திருந்து தீபத்தை எடுத்துக்கொண்டு வாளினால் அதன் தலையை வெட்டிவிடு", என்று உபதேசம் செய்து தங்கள் வீடு போய்ச்சேர்ந்தனர். அன்று ரதியின் மனம் எவ்வாறு பதைத்ததென்று சொல்லவும் வேண்டுமோ? ஒரு பக்கத்தில் பிரீதி. மற்றொரு பக்கம் ஐயோ கெட்ட பிசாசையா கணவனாகக் கொண்டோம்? என்ற வெறுப்பு. இந்தக் கொடிய காரியத்தை எவ்விதம் நாம் செய்யத் துணிவது என்கிற பயமொருபக்கம். இன்னொருபக்கம் தீர்மானமாய் அப்படியே செய்யவேண்டுமென்ற உறுதி இப்படிப் பலவாறாய் நினைத்து நினைத்து நடுநடுங்கித் தவித்துக்கொண்டு பகலைப் போக்கினாள். பொழுது சாயவும் இருட்டுடன் அவள் கணவனும் நெருங்கினார். சற்று ஸல்லாபம் செய்துவிட்டு நித்திரைக்குச் சென்றார்.

விதியின் பலத்தை வெல்லவும் முடியுமோ? ரதி மனதைத் திடஞ்செய்துகொண்டு தீபத்தைக் கையிலேந்தி இன்னொரு கையில் கத்தியை எடுத்துக்கொண்டு சயனித்து நித்திரை செய்கிற பர்த்தாவண்டை வரவே, என்ன ஆச்சரியம்! என்ன தேஜஸ்! என்ன ஸௌந்தர்யம்! லாவண்யமே ரூபமெடுத்து வந்ததோ? காந்தியின் களஞ்சியமோ? மன்மதனே மனதைக் கவரத்தக்க மேனியுடன் மஞ்சத்தையலங்கரிக்கக் கண்டாள். உடனே நடுநடுங்கித் தன் குரூர சிந்தையை இகழ்ந்து பிரமித்து நின்றாள். வாளும் அவளுக்குத் தெரியாமலே கையிலிருந்து கீழே நழுவிவிட்டது. ஆகா! என்ன வடிவழகு, என்ன ஸ்வர்ணமயமான சரீர காந்தி என்று பார்த்துப் பார்த்து வியப்படைந்து அவர் பக்கத்தில் கரும்பினாலமைத்த வில்லையும், புஷ்பங்களாகிற அம்புகளையும் கண்டாள். ஆவலோடு அப்புஷ்பங்களைப் பார்த்து அவைகளிலொன்றையெடுத்து அதன் இதழின் நுனியைத் தன் கையில் தாக்கினாள். பூவினும் மிருதுவான அவள் கரத்தினின்றும் கொஞ்ச ரத்தம் கசிந்தது. உடனே அளவில்லாத காதல் கடலில் விழுந்து தன்னையறியாமலே மன்மதன்பால் அனுராகம் பூண்டு அவரை காடாலிங்கனஞ்செய்துகொண்டு அவன் முகத்தைப் பல தடவையும் முத்தமிட்டுப் பிறகு ஆசை தீராமலே கட்டியணைத்து மறுபடியும் முத்தமிட்டாள். இந்தப் பரபரப்பில் அவள் பக்கத்திலிருந்த தீபத்தினின்றும் சூடான எண்ணெய் ஒரு சொட்டு மன்மதன்மேல் தளும்பி விழுந்தது. உடனே மன்மதன் திடுக்கென விழித்துக்கொண்டு சரேலென்று ரதியை விட்டு ஓடிப்போக எத்தனித்தார். அப்போது ரதி தன் கையினால் அவரை யணைத்துப் பிடித்து நிறுத்தப் பார்த்தாள். ஆனால், மன்மதன் ஆகாசத்திலே பறந்து நின்று ரதியைப்பார்த்து "பெண்கள் பேதையரென்று சொல்லுகிறது சரியாயிற்றே. என் தாயார் உனக்கு யாராவது ஒரு அற்பன்மேல் காதல் உண்டுபண்

னும்படி என்னை நியமிக்க, நான் அதைத் தள்ளி நானே உன்னை மணம் செய்துகொண்டேன். என்ன செய்தும் பிரயோஜனமில்லை. உன்னிடத்தில் அளவற்ற அன்பு வைத்த எனக்குபலன் கிடைத்தது. பலதரமும் உனக்குப்புத்திமதி சொல்லியிருந்தும் என் வார்த்தையை மதிக்காமல் நடந்தனை. அதனால் உன்னிடம் விட்டு விலகுவதே சரி" என்று சொல்லிச் சட்டென ஆகாயத்தில் மறைந்தான்.

அதுகண்டு ரதி தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தாள். தன் கணவன் மறைந்ததும், ஆறாத் துக்கத்துடன் சமீபத்திலிருந்த ஒரு ஆற்றங் கரையில் நின்றுகொண்டு தன்னுயிரை மாய்க்க எத்தனித்து வெள்ளத்தில் விழுந்தாள். ஆனால் அவள் நாயகனிடம் தனக்குள்ள பக்தியால் அந்நதி அவளைப் பத்திரமாய் சற்றுதூரம் வகித்துக்கொண்டுபோய்த் தீரத்தில் சேர்த்தது. அச்சமயம் அவ் வனதேவதை ரதியின் முன்பு தோன்றி "குழந்தாய்! காதலின் கொடுமையினால் தற்கொலை செய்ய விரும்பவேண்டாம். வருத்தப்படாதே. துக்கத்தை விட்டு மன்மதனைக்குறித்துத் தவஞ்செய்தால் உன் காரியம் சித்திபெறும்" என்று மொழிந்ததைக் கேட்டு, ரதி மன்மதனை மனதில் நிறுத்தித் தியானம் செய்துகொண்டே அவனைத் தேடித் தேடித் திரிந்துகொண்டிருந்தாள். இது இப்படி நிற்க, மன்மதன் ரதியின்மேல் காதல் வைத்து விரகதாபம் கொண்டு தன் தாயின் விடு சென்று சயனித்திருந்தான். மகாலக்ஷ்மியும் ரதியினழகில் மயங்கித் தவிக்கிறானென்றறிந்து முன்னிலும் அதிகம் சினங் கொண்டாள். அவனைப் பார்த்து "வெகு நேர்த்தியாயிருக்கிறது. உன்னைப்போல் நல்ல பிள்ளை எங்கேயும் காணமுடியாது. தாயிடம் உனக்குள்ள அன்பு எவ்வளவென்று நன்கு விளங்குகிறது. என் சத்துருவை அவமானம் செய்யும்படி நான் சொல்லியிருக்க, நீ அவளையே மணந்து வந்தாய். எனக்கு இத்தகைய நாட்டுப்பெண் தேடிவந்ததற்கு என்னென்று நன்றி புரிவேன். இருக்கட்டும், நீ அவள்பால் ஸுகமனுபவிக்கிறதைப் பார்ப்போம். உன் கர்வத்தை யடக்கியாளும் சக்தி உன்னைப் பெற்றவளுக்குண்டென்று உனக்குத் தெரியச் செய்கிறேன்," என்று கடிந்துரைத்துப் போனாள். அப்பொழுது பூதேவியும், நீளாதேவியும் கோபத்தினால் சிவந்த அவள் திருமேனியைப் பார்த்து, அதன் காரணத்தையவளிடமறிந்து, அவளைப் பார்த்து "அம்மா! கோபம் வேண்டாம். உன் புத்திரனுக்கு விவாக காலம் வந்துவிட்டது. அவன் அழகின் சிறப்பால் அவன் யௌவனமடைந்ததை நீ அறியவில்லை. வயதுக்குத்தக்க சுபாவமும் செயலுமிருந்தால் அதுகண்டு கோபிப்பது தர்மமா?" என்று பலவாறு சொல்லியும் அவள் சமாதானமடையவில்லை. இது இப்படி நிற்க, ரதி மனம் வருந்தி இங்குமங்கு மலைந்து இராப் பகல் நித்திரையில்லாமல் தன் புருஷனைத் தேடிக்கொண்டு திரிந்தாள். எவ்வாறு அவனை மறுபடியும் காண்பதென்று எப்பொழுதும் அதே ஞாபகமாய் உலகத்தை மறந்து அவனையே தியானஞ் செய்து கொண்டிருந்தாள். அவள் தேடித்திரியும் வழியில் ஒரு குன்றின்மேல் ஒரு ஆலயங் காணப்பட்டது. அவ்விடம் சென்று ஒருக்கால் என் பிராணநாதன் இவ்விடமிருக்கலாமோஎன்று நினைத்து அவ்வாலயத்தை நெருங்கினாள். அப்பொழுது அவள் சரீரம் சோர்வடைந்து நிற்கமுடியாமல் பூமியின்மேல் படுத்து ஆ, "அம்மா பூமாதேவி! நீயே சரணம். என்னை இந்தக் கதியில் பார்த்தும் உனக்கு இரக்கமில்லையா? என் மணவாளன் இருக்குமிடம் எனக்குச் சொல்லலாகாதா?" என்று புலம்பினாள். உடனே பூதேவி அவள் முன் தோன்றி "பெண்ணே! என் சக்களத்தி உன்னிடம் கோபம்கொண்டு உன்னைத் தண்டிப்பதற்காகத் தேடிக்கொண்டிருக்கிறாள். ஆதலால் இந்த விஷயத்தில் நான் ஒருவித உபகாரமும் செய்யமுடியாது. நான் என்ன செய்வேன்?" என்றாள். அதற்கு ரதி, அப்படியானால் சில காலம் ஸ்ரீதேவிக்கு சினமாறுகிறவரையில் என்னை இந்நிலங்களில் பயிர்களின் நடுவில் ஒளிந்திருக்கவாவது இடம் கொடுக்க வேண்டுமென்று இரந்து கேட்க, "அம்மா நான் என்ன செய்வேன்? என் ஸபத்னியின் துவேஷம் வந்துவிடும். ஆதலால் நீ உடனே இவிடம் விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டும்," என்றாள். அதுகேட்டு ரதி மனங் கலங்கி "எங்ஙனம் மகாலக்ஷ்மியின் கோபத்தினின்றும் தப்புவது? யாரிடம் அடைக்கலம் புகுவது? ஒருகால் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு நீயே சரணமென்று அவளிடமே சென்று அவளிட்ட பணிவிடைகளைச் சரிவர முடித்தால் மனமிறங்கி என்னை மன்னிப்பாளோ? மேலும் அங்கே அவர் தாயா

ரின் கிருகத்தில் என் நாயகனைக் காணும்படியான பாக்கியமும் நேரலாமோ" என்று ஆலோசித்துக்கொண்டிருந்தாள்.

இதற்குள் மகாலக்ஷ்மியும் ரதியைத் தேடித் தகுந்த சிக்ஷையை அவளுக்கு விதிக்க நிச்சயித்து, கருடனை யழைத்து உலகமெங்கும் சென்று ரதி யிருக்குமிடமறிந்து அவளை என்னிடம் சேர்ப்பவர்க்கு ஸகல ஐசுவர்யமும் ஸ்வதந்திரமாக அளிப்போமென்று பிரசுரஞ் செய்வித்தாள். ரதி லக்ஷ்மியை அடைக்கலமாகச் சேர்வோமென்று தீர்மானித்து அவளுடைய இரத்தினங்களிழைத்த உன்னதமான அரண்மனையின்கண் வந்தடைந்தாள். அங்குள்ள காவலாளிகளிலொருவன் அவளைப் பிடித்திழுத்துக்கொண்டு போய்த் தன் எஜமானியின் முன்னிறுத்தினான். ஸ்ரீ தேவி அவளைப் பார்த்து "ஆகா! மாமியைக்கண்டு நமஸ்கரித்து வரும்படி இப்பொழுதுதான் மனதில் தயவு பிறந்தாப்போலிருக்கிறது. மருமகளுக்குரிய தர்மத்தை யனுஷ்டிக்கக் கடவாய்" என்று சினந்து பேசினாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு தட்டில் கடுகையும் அரிசியையும் ஒன்றாகக் கலந்து ரதியினிடம் கொடுத்து, நகைத்து "என் புத்திரனைக் கணவனாகக் கொள்ளவேண்டுமானால் இதைப் பிரித்துக் கடுகும் அரிசியும் வேறு வேறாகச் செய்யக் கடவாய்" என்றாள். அதைப் பார்த்து ரதி மயங்கி இதுவும் என் விதியின் பயனோ? இந்தக் கடுகை நான் எவ்வாறு பிரித்து வைப்பேன் என்று மனதில் எண்ணிக்கொண்டு ஒன்றும் தோன்றாமல் ஏங்கி நின்றாள். இப்படியிருக்கும்பொழுது ஒரு சிற்றெறும்பு அவிடம் வந்து ரதியின் கஷ்டத்தைப் பார்த்து இரங்கி வெகு வேகமாய் ஓடித் தன் பாழியிலுள்ள தன்னினத்தாரெல்லோரையும் அழைத்துவந்தது. 'தம்பிமார்களே, நம் காமதேவன் பத்தினி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள். மனமிரங்கி நாம் அவளுக்கு நம்மாலியன்ற சகாயத்தைச் செய்து வருவோம் என்று அவர்களையெல்லாம் கூட்டிவந்து ஒரு முகூர்த்த நாழிகைக்குள் அரிசிகளைத் தனியே பிரித்துவைத்துப் போயின.

சாயங்காலமானதும் லக்ஷ்மி தேவி வந்து பார்க்கவும் அரிசி கடுகினின்றும் வெகு நேர்த்தியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவள், "உன்னால் இது செய்திருக்க முடியாது. சோம்பேறிப் பெண்ணாகிய உனக்கு உன் காதலன் உதவி செய்திருக்கவேண்டும்" என்று சொல்லி மறுநாட் காலையில் ரதியைக் கூப்பிட்டு "உன் ஊக்கத்தையும் தைரியத்தையும் நான் பரீக்ஷிக்க வேண்டும். அதோ தூரத்தில் மலைச் சிகரம் காண்கிறதல்லவா? அவ்விடமிருந்து மலையருவி ஒன்று விழுந்து கீழே விசாலமாய் விரஜா நதி என்று விளங்கிவருகிறது. இந்தக் கிண்டியை எடுத்துப்போய் அந்நதியின் மத்தியினின்றும் நீர் சேந்தி வருவாய்" என்று சொல்லி, ஸ்படிகத்தினாலமைத்த ஒரு கிண்டியை அவளிடம் கொடுத்தாள். ரதி அதைக் கையில் ஏந்தி விரைந்து சென்று பார்க்கவும், தனக்கிடப்பட்ட கட்டளை பிராணனுக்கு வருமென்று நிச்சயித்தாள். ஒரு உன்னதமான பர்வதத்தின் மேலிருந்து பயங்கரமான ஒரு பிரவாஹம் புரண்டு கீழே அகாதமான பாதாளம் போன்ற ஒரு பள்ளத்தில் விழுந்துகொண்டிருந்தது. அந்நதியின் இரு புறத்திலும் உக்ரமான சர்ப்பங்கள் எப்போதும் சீறித்துள்ளி பாய்ந்துகொண்டிருந்தன. அந்த நதியின் ஜலமே ரதியைப் பார்த்து, "சீக்கிரம் இவ்விடம் விட்டு அகன்று போ. இங்கே உனக்காக வேண்டிய காரியம் என்ன? நாலா பக்கத்திலும் யமகிங்கரர்கள் இருப்பதைக் காணவில்லையா?" என்று சொல்வது போலிருந்தது. ரதி அதுகண்டு நடுநடுங்கித் திகைத்து மயங்கி மூர்ச்சையடைந்தவள் போலானாள்.

அப்படிப் பிரமித்து நிற்கையில் மஹாவிஷ்ணுவின் வாகனமான கருடன் அவளிடம் பறந்து வந்து, "பேதையாகிய நீ இந்தக் காரியம் சாதிக்கலாமென்று நினைத்து வந்தனையே. இந்த விரஜா நதியின் நீரைக்கண்டு தேவர்களும் அஞ்சுகிறார்களே. பாத்திரத்தை என்னிடம் கொடு" என்று அதை வாங்கிக்கொண்டு நதியின் மத்தியில் ஜலம் மொண்டு எடுத்துக்கொண்டு சர்ப்பங்களை விரட்டிவிட்டுக் கிண்டியை ரதியின் கையில் சேர்த்துப் போனான்.

வெகு சந்தோஷத்துடன் ரதி அதை வாங்கிக் கொண்டு அதைத் தன் மாமியாரிடம் கொடுப்பதற்காக வேகமாய்ப் போனாள். ஆனால் லக்ஷ்மி தேவிக்கு இன்னும் திருப்தியுண்டாகவில்லை. "குழந்தாய், எனக்கு இன்னொரு காரியம் உன்னாலாக வேண்டியிருக்கிறது. இந்தச் சிமிழை எடுத்துக்கொண்டு நரலோகம் சென்று தர்மராஜன் பத்தினியிடமிருக்கிற கண்ணுக்கு இடும் மையில் கொஞ்சம்

இந்தச் சிமிழில் எனக்கென்று வாங்கிவர வேண்டும். சீக்கிரம் போய்வா" என்றாள்.

இதைக் கேட்டதும் ரதி, யமபுரிக்குப்போகவும் முடியுமோ? நான் திரும்பி வரவேண்டுமென்கிற எண்ணத்துடன் இந்த ஆக்ஞையை இட்டதாகத் தெரியவில்லை. என்னால் இது எவ்வாறு முடியுமென்று மனம் கலங்கி அங்குள்ள ஒரு குன்றின் மேலேறி கீழே விழுந்து தன்னுயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்தாள். அப்பொழுது ஒரு அசரீரி வாக்கு, "ஐயோ பாவம்! பெண்ணே, நீ ஏன் தற்கொலை செய்துகொள்ள எத்தனிக்கிறாய்? உன் பிராணன் போனால் யமலோகம் செல்வது சுலபம்தான். ஆனால் திரும்பி இவ்வுலகம் வரமுடியாது. நான் சொல்வதைக் கவனித்துக் கேள். இங்கிருந்து ஒரு காத தூரம் போனால் ஒரு வனாந்தரத்தின் மத்தியில் ஒரு பர்வதம் தென்படும். அதன் சாரலின் ஒரு பக்கத்தில் குகையொன்று இருக்கிறது. அந்த குகையிலிறங்கி அது போகும் வழியே சென்றால் யமபுரி கொண்டு போய்ச் சேர்க்கும். ஆனால் நீ அங்கு வெறுங் கையோடு போகலாகாது. உப்பில்லாத அடை இரண்டு சமைத்துக்கொண்டு உன் வாயில் இரண்டு செப்புக் காசு போட்டுக்கொண்டு போகவேண்டும். தர்மராஜாவின் நகரத்தினருகே ஒரு பயங்கர நதி குறுக்கிடும். அதைத்தாண்ட ஒரு தோணி இருக்கும். அந்தத் தோணிக்காரன் உன்னை அக்கரையில் கொண்டு விடுவான். விட்டவுடன் அவனுக்கு ஓடக்கூலிக்காக உன் வாயிலிருந்து அவனை அந்த இரண்டு காசுகளில் ஒன்றை எடுத்துக்கொள்ளச் சொல். பிறகு தர்மராஜாவின் அரண்மனை தெரியும். அதன் வாசலில் காவலாளிகளின் பக்கத்தில் ஒரு வேட்டை நாய் வெகு குரூரமாக வாயைத் திறந்துகொண்டு உன்னைக் கடிக்க வரும். அந்த நாயின் வாயில் உப்பில்லாத அடைகளில் ஒன்றைப்போட்டால் அது ஒன்றும் செய்யாது. பிறகு அரண்மனையின் உள்ளே சென்று தர்மராஜாவின் பத்தினியிடம் செய்தியைச் சொல்லி, அவள் கொடுக்கும் மையை சிமிழிலடைத்துக்கொண்டு திரும்பி வரும்போது முன் போலவே நாயின் வாயில் மற்றொரு அடையை எறிந்துவிட்டு, தோணிக்காரனுக்கு மற்றொரு காசைக் கொடுத்துவிட்டு இவ்வுலகம் வந்துசேரக் கடவாய். ஆனால் அந்தச் சிமிழைத் திறந்து அந்த மையை நீ பார்க்கலாகாது" என்றுரைத்தது.

ஆகாயவாணியின் வார்த்தையைக் கேட்டு, ரதி ஊக்கத்துடன் வெகு ஜாக்கிரதையாய் நரகாபுரி சென்று தர்மராஜாவின் மஹிஷியைப் பார்த்து ஸ்ரீதேவியின் உத்தரவைத் தெரிவித்து சிமிழில் மையை யடைத்து வாங்கிக்கொண்டு வேகமாக தன் எஜமானியிடம் சென்றாள். ஆனால், வழியில் அந்தச் சிமிழைத் திறந்து அதனுள் என்ன விருக்கிறதென்று பார்க்கவேணுமென்கிற ஆவலுண்டாயிற்று. ஆகாயவாணி சொன்னதை மறந்து அதைத் திறந்துபார்க்கவும் மையொன்றும் காணப்படவில்லை. அதைத் திறந்தமாத்திரத்தில் ரதிக்கு நித்திரை மயக்கம் அதிகமாய் உண்டாயிற்று. சோர்ந்து பூமியில் படுத்து பேருறக்க வசமானாள்.

இதற்குள் மன்மதனுடைய புண் ஆறிவிட்டது. ஆனால் ரதியினிடமுள்ள காதல் முன்னும் பதின்மடங்கு அதிகரிக்க, தன் தாயின் அரண்மனையை விட்டுப் பறந்து, ரதி நித்திரையடைந்திருக்குமிடம் வந்து அந்தத் தூக்கத்தை மறுபடியும் அந்தச் சிமிழிலடைத்துச் செவ்வையாக மூடிய பிறகு, பாணத்தின் மிருதுவான நுனியினால் ரதியை யெழுப்பினான். "என் பொற்கொடியே, முன்போலவே இப்பொழுதும் தவறுதல் செய்தாயல்லவா? எழுந்திருந்து, என் தாயிட்ட கட்டளையை முடித்துவிடு, நான் இனி நம் காரியத்தைப் பார்த்துக்கொள்கிறேனென்றான். உடனே மன்மதன் தேவராஜன் சபையை நோக்கிச் சென்று அவர் முன்பு தன் வேண்டுகோளைத் தெரியப்படுத்தினான். இந்திரன் "அப்பா, நீ பொல்லாதவன். என்மேல் உன் கணைகளை விடுத்து எவ்வளவோ தரம் என்னைத் தவிக்கச் செய்திருக்கிறாய். போனால் போகட்டும். தேவகாரியத்தை வெகுதரம் நீ சாதித்துக் கொடுத் திருப்பதால் உன்னபிப்பிராயப்படி செய்விக்கிறேன் என்று சொல்லித் தன் மந்திரி, சேனாபதி முதலிய அமரர்களெல்லோரையும் தருவித்தார். அவர்கள் வந்தவுடனே "தேவர்காள்! இந்தப் பையனை நீங்கள் யாவருமறிவீர்கள். அவன் கொழுப்பையடக்க ஒரு ஏற்பாடு செய்ய நிச்சயித்திருக்கிறேன். அவனுக்கு ஒரு கால்கட்டு போட்டுவிட்டால் முன்போல் பிறருக்கு அவ்வளவு துன்பம் கொடாதிருப்பான். ஒரு மானிடப்பெண்ணை அவன் வரித்திருக்கிறான். அவளால் அவன் சுகம் பெறும்படி செய்வது நம் கடமை" என்று

(அடுத்த பக்கம் பார்க்க)

தொடர் கதை.

# வழி வேண்டுவோர்

குமுதினி

★

சரத்சட்டர்ஜி எழுதியுள்ள நாவலின் மொழிபெயர்ப்புச் சுருக்கம்.

### (முன்கதைச் சுருக்கம்)

பர்மாவில் இருக்கும் வங்காளிகளில் சிலர் 'ஸாஸி' என்ற 'அனார்க்கிஸ்ட்'டின் தலைமையில் ஒரு ரகசிய சங்கம் ஏற்படுத்தி நடத்திவந்தனர். அதற்கு 'வழி வேண்டுவோர்' எனப்பெயரிடப் பட்டிருந்தது. அது ஒரு ராஜத்ரோக சங்கம். அதன் அங்கத்தினர்கள் ரகஸியமாகத் துப்பாக்கிகளைக் கையாண்டு வந்தனர். ஜன்ம பூமியான இந்தியாவிற்காக அவர்கள் எத்தகைய தியாகமும் கொடூரமான செய்கைகளையும் செய்ய அஞ்சமாட்டார்கள்.

அந்நாட்டில் வேலை தேடிச்சென்ற அபூர்வன் என்ற பிராம்மண யுவன் பாரதி என்ற வங்காள கிருஸ்தவ யுவதியைச் சந்திக்கிறான். இருவருக்குள் நட்பு ஏற்படுகிறது. அவள் தூண்டுதலின்பேரில் 'வழி வேண்டுவோர்' சங்கத்தில் சேருகிறான். ஆனால், அதன் நோக்கங்களும், முறைகளும் அவனுக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. அவர்களுடன் பழக நேரிட்டபோது, அச்சங்கத்தின் உண்மை ஸ்வரூபம் அவனுக்கு விளங்குகிறது. உலக அனுபவமில்லாத அபூர்வனின் மனம் தள்ளாடுகிறது. வெள்ளையர்களின் அநீதியை அவன் உணர்ந்தாலும் சங்கத்தார் கையாளும் முறைகளைக்கண்டு அவன் வியப்படைகிறான். அவர்கள் செய்துள்ள காரியங்களைக் கேட்குங்கால் அவன் மனதில் பீதியெழுந்து, போலீஸாரிடம் போய் இச்சங்கத்தைப்பற்றிய விவரங்களை வெளிப்படுத்திவிடுகிறான். எனவே அச்சங்கத்தார் ஒரு ரகசிய கூட்டம் கூட்டிய பொழுது போலீஸார் வந்து கூட்டத்தைக் கலைத்துவிடுகிறார்கள். அச்சங்கத்திலுள்ள சிலர் வெள்ளையர்கள் கம்பெனிகளில் தாங்கள் வகித்துவந்த உத்யோகத்தினின்றும் நீக்கப்படுகிறார்கள்.

அபூர்வன் செய்கையைக் குறித்து நடவடிக்கை எடுக்க சங்கத்தின் ரகசியக் கூட்டம் ஓரிடத்தில் கூட்டப்படுகிறது. அதற்கு அபூர்வன்மீது காதல் கொண்டுள்ள பாரதியும் அழைக்கப்படுகிறாள். இவ்விஷயத்தைப்பற்றி விவாதிக்கும் பொழுது ஒருவர் அபூர்வனுக்கு இக்குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

### அத்தியாயம் 20 (தொடர்ச்சி)

பாரதி தலை நிமிர்ந்து அவ்விதம் சொன்னவரைப் பார்த்த வண்ணம் ஸ்தம்பித்து இருந்தாள்.

ராம்தாஸ் மேலும் சொல்லலானார்: "டாக்டர்தான் ஸாசி என்பவரென்றும், அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அந்த ஹோட்ட

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சொல்லி மாதலியை யனுப்பி ரதியைத் தன் சபைக்கு அழைத்துவரச் சொன்னார். அவள் வந்து வணங்கி நின்றதும், அவளுக்கு அமிர்த பானமளித்து "பெண்ணே இந்த அமிர்தத்தை பானம்செய்து இன்று முதல் தேவதா பதவியை அடைவாய். உன் பர்த்தாவும் நீயும் என்றும் பிரியாமல் வாழ்வீர்கள் என்றான். உடனே தேவசபையில் நடனகீதங்கள் நடந்தன. ரம்பை, ஊர்வசி நர்த்தனம் செய்யவும், மற்ற தேவஸ்திரீகள் பாடவும், பரதமுனி பார்த்து மகிழவும், ரதி மன்மத விவாக மஹோத்ஸவம் நடைபெற்றது.

லின் பின்புறத்து அறையில் அவர் வசிக்கிறாரென்பதையும் அபூர்வ பாபு அவர்களிடம் சொல்லியிருக்கிறார்" என்றார்.

"பாரதி! டாக்டரைப் பிடித்தார்களானால் அவருக்கு எவ்வித தண்டனை கிடைக்குமென்பதை நீ அறிவாயல்லவா—தூக்கிவிடுவார்கள். அதற்குத் தப்பினால் தீவாந்திர சிக்ஷை. நல்லது, ஜென்டில்மென், நீங்கள் இந்த அபராதத்திற்கு தண்டனை என்னவென்று தீர்மானித்தீர்களா?" என்று கேட்டாள் சுமித்ரா.

எல்லாரும் ஒரே குரலில் 'டெத்' என்றனர்.

"பாரதி, நீ ஏதாகிலும் சொல்ல விரும்புகிறாயா?"

பாரதியின் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை.

அந்த பயங்கரமான மனிதன் உடனே, "மரண தண்டனையை நிறைவேற்றுவதைப் பற்றின பாரம் முழுவதும் நானே வகிக்கிறேன். ஆனால் எனக்கு துப்பாக்கி கிப்பாக்கி கத்தி முதலியவைகளைக் கொண்டு வேலை செய்யத்தெரியாது. இதுதான் எனது கத்தி" என்று கூறி அவன் தனது புலியின் பாதம் போன்ற கைகளைக் காண்பித்தான்.

கிருஷ்ணய்யர், "இந்தத் தோப்பின் வடமேற்கு மூலையில் ஒரு பாழும் கிணறு இருக்கிறது. மேலே கொஞ்சம் மண்ணைத் தள்ளி காய்ந்த இலை சருகுகளைப்போட்டு மூடிவிடலாம். துர்க்கந்தம் வெளியே வராமல் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்" என்றார்.

"அபூர்வ பாபுவைக் கூப்பிட்டு இப்பொழுது அவனுக்கு ஏற்பட்— தண்டனையைத் தெரிவிக்கவேண்டும்" என்றார் ராம்தாஸ்.

அபூர்வனைப்பற்றின விஜாரணை ஐந்து நிமிஷத்தில் நடந்தாய்விட்டது. முப்பது மனிதர்கள் அவனைப்பற்றி ஒரே மனதால் தீர்மானித்துவிட்டார்கள். பாரதி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்கு உண்டான வேதனையில வெளி விஷயம் ஏதுவும் அவள் மனதில் படவில்லை போலிருந்தது. வந்தது முதல் ஒரு பிரமையுடன் அவர்கள் செய்வதையும் பேசுவதையும் கல்சிலை போல் கேட்டுக்கொண்டிருந்தாள். சுமித்ராவின் சமிக்ஞையின் பேரில் ஒருவன் வெளிச்சென்று அபூர்வனை உள்ளே அழைத்துக்கொண்டு வந்து நிறுத்தினான். அபூர்வனின் கைகளிரண்டும் பின்புறம் சேர்த்து இறுக்கிக் கட்டப்பட்டிருந்தன.

அபூர்வன் எதையும் மறுக்கவில்லை. ஆபீஸ் துரையும் போலீஸ் பெரிய துரையும் சேர்ந்து அவனிடமிருந்து எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டுவிட்டனர். அதை ராம்தாஸ் இன்று காலை பத்து மணிக்கு முன்பே சுமித்ராவிடம் சொல்லிவிட்டார். அபூர்வனை இங்கே அழைத்துவர அவர்கள் செய்த ஏற்பாடு மிக சுலபமானதே. ஆபீஸ் மூடினதும் அபூர்வன் நடந்து வீட்டிற்குச் செல்லமாட்டானென்று இவர்கள் அறிவார்கள். ஆகையால் இவர்களுடைய வண்டியை ஒரு வாடகை வண்டிபோல் ஆபீஸ் கேட்டண்டையில் காத்திருக்கச் செய்தனர். அபூர்வன் மாலை ஆபீஸிலிருந்து வெளி வந்ததும் அதில் ஏறிக்கொண்டான். சிறிது தூரம் சென்றதும் வண்டிக்காரன் எதிரே ரஸ்தா ரிபேராக இருப்பதால் வேறு வழியாகச் செல்ல வேண்டுமென்றான். அபூர்வன் சரி என்று சொல்லிவிட்டு ஏதோ சிந்தனையிலாழ்ந்தான். ஒரு மணி நேரம் கழித்துப்பார்க்கையில் வண்டிக்குள் ஹீராஸிங் என்பவன் துப்பாக்கியுடன் உட்கார்ந்திருந்தான்.

"அபூர்வ பாபு, நாங்கள் உங்களுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறோம். நீங்கள் சொல்ல வேண்டியது ஏதாகிலும் இருக்கிறதா?" என்று சுமித்ரா கேட்டாள்.

அபூர்வன் தலையை ஆட்டி இல்லையென்பதைத் தெரிவித்தான். ஆனால் அவனுடைய முகத்தைப் பார்க்கையிலேயே அவன் எதையும் புரிந்துகொள்ளவில்லை என்பது தெரிந்தது.

இதுவரை மௌனவாக இருந்த டாக்டர் இப்பொழுது "ஹீராஸிங், உன்னுடைய துப்பாக்கி எங்கே?" என்று கேட்டார்.

ஹீராஸிங் சுமித்ராவைச் சுட்டிக் காண்பித்தான்.

"துப்பாக்கியை சற்று பார்க்கட்டுமா, சுமித்ரா?" என்று கேட்டார் டாக்டர்.

சுமித்ரா தனது இடுப்பிலிருந்து ஒரு பிஸ்டலை எடுத்துக்கொடுத்தாள்.

"இன்னும் யாரிடமாவது பிஸ்தலாவது ரிவால்வராவது இருக்கிறதா?" என்று டாக்டர் வினவினார்.

எவரிடமும் இல்லை. பிறகு சுமித்ராவின் துப்பாக்கியைத் தனது ஜேபியில் வைத்துக்கொண்டு டாக்டர் சிறிது புன்சிரிப்புடன், "சுமித்ரா, நாங்களெல்லோரும் மரண தண்டனை விதித்திருக்கிறோம் என்று நீ சொன்னாய். ஆனால் பாரதி அதை விதிக்கவில்லையே!" என்றார்.

சுமித்ரா ஒரு கணம் பாரதியின் முகத்தை நோக்கிவிட்டு, "பாரதி அதை விதிக்க இயலாது" என்றாள்.

"விதிக்க இஷ்டப்படவும் மாட்டாள். அல்லவா, பாரதி?" என்று டாக்டர் அவளைக் கேட்டார்.

பாரதியின் முகத்திலிருந்து ஒரு சப்தமும் வெளிவரவில்லை. இந்தக் கடூரமான கேள்வியைக் கேட்டு அவள் தனது முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டாள்.

டாக்டர் அவளைத் தடவிக்கொடுத்துவிட்டு, "அபூர்வன் செய்த காரியத்தின் பலனை நாம் எப்படியும் அனுபவித்தாக வேண்டும். அதை இனி அழிக்க முடியாது. இந்த பலவீன மனிதனை திடசாலியாகச் செய்யும் பொறுப்பை பாரதியிடம் ஒப்புவிக்கலாமா?" என்றார்.

எல்லோரும் ஒரே மனதாய், "கூடவே கூடாது" என்றனர்.

"எங்கள் எல்லாருடைய தீர்மானமும் ஒன்றே. இவ்வளவு பெரிய அநியாயத்தை மன்னித்தால் எங்களுடைய காரியம் முழுவதும் வீணாவிடும்" என்று சுமித்ரா மிகக் கடுமையான குரலில் சொன்னாள். அவளை ஆமோதித்துப் பலர் கூவினர்.

சப்தம் சிறிது அடங்கினதும், டாக்டர் பேசலானார். அவருடைய குரலில் இச்சமயம் ஒரு ஆச்சரியகரமான சாந்தமும் திடமும் ஒலித்தது. உத்ஸாகம் அல்லது தூண்டுதல் செய்ய விரும்புவதான சின்னமே சிறிதும் இல்லை. "சுமித்ரா, துரோகத்தை மன்னிக்காதே. ஆனால் உங்கள் எல்லாருடைய தீர்மானத்தைவிட எனது தீர்மானம் இன்னும் பலமானதென்பது உங்களுக்குத் தெரிந்ததே" என்று சொல்லிவிட்டு, அந்த பயங்கர மனிதனை நோக்கி, "விரஜூ, முன்பு படாவியாவில் ஒரு தரம் எனக்கு தண்டனை அளிக்க முயன்றாய். இப்பொழுது மறுபடி முயற்சிக்காதே" என்றார். பிறகு மெதுவாய் "பாரதி பயப்படாதே; அபூர்வனுக்கு நான் அபயமளிக்கிறேன்" என்றார்.

"இவர்கள் அவரை மன்னிக்க மாட்டார்களே!" என்று தலையை நிமிர்க்காமலேயே பாரதி கேட்டாள்.

"சுலபமாய்ச் செய்யமாட்டார்கள். ஆனால் நான் அபயம் அளித்தவரை அவர்கள் பிற்பாடு தொடக்கூடாது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்" என்று சொல்லி டாக்டர் "சிற்சில சமயம் அரை வயிற்றிற்குக்கூட எனக்கு ஆகாரம் அகப்படுவதில்லை, பாரதி. இரவில் தூங்க அவகாசம் கிடைப்பதில்லை. இருந்தும் இந்த இளைத்த பலவீனமான விரல்களைக்கொண்டு விரஜூவின் சிம்மத்திற் கொப்பான சக்தியையும் என்னால் அடக்கக்கூடும். என்ன விரஜூ, நான் சொல்வது சரியல்லவா?" என்றார்.

அந்த மங்கோலியனின் முகம் இன்னும் அதிக சிவப்பாக மாறிற்று. அவன் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தான்.

"அபூர்வன் துரோகியல்ல. அவனுக்குத் தனது தேசத்தின்பேரில் அதிகப் பற்றுதலுண்டு. ஆனால் மிகவும் பலஹீனமானவன், திடசித்தமற்றவன். போகட்டும், எனது தேசவாஸிகளைப்பற்றி நான் அதிகம் சொல்வானேன். அவன் இனி இந்த ஊரில் இருக்கக்கூடாது. சொந்த ஊர் போகட்டும். அங்கே இந்த விஷயங்களையெல்லாம் அவன் வெகு சீக்கிரம் மறந்துவிடுவான். சரி, இனி சபையைக் கலைக்கலாம் என்று நாம் சபைத்தலைவியைக் கேட்டுக்கொள்ளலாமா?" என்றார் டாக்டர்.

"இந்த மாதிரி பலருடைய அபிப்பிராயத்தை ஒருவர் தமது சக்தியைக் கொண்டே அடக்கிவிடுவதென்றால் அதற்கு சபை கூட்டி என்ன பயன்? இந்த நாடகம் நடக்கும்படி ஏன் செய்தீர்கள்?" என்று வினவினாள் சுமித்ரா.

"இந்த நாடகம் நடந்திராவிட்டால் நல்லதுதான். ஆனால் நிலைமையின் நிர்பந்தத்தினால் நடந்தது நடந்தாகிவிட்டது. நாடகம் நன்றாக இருந்ததென்று நீங்களே ஒத்துக்கொள்வீர்கள்" என்றார் டாக்டர்.

"இவ்விதம் நடக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லையே!" என்றார் ராமதாஸ்.

"இனி நாம் நமது வேலை எதுவும் செய்ய முடியாது. ஊரைவிட்டு ஓடிப்போகவேண்டியதே" என்றார் கிருஷ்ணய்யர்.

"ஆமாம், ஊரைவிட்டுப் போகவேண்டியது அவசியமே. ஆனால் அதற்காக நமது வேலையை நிறுத்தவேண்டுமென்ற அவசியமில்லை" என்று கூறி டாக்டர் எழுந்து நின்று, "ஹீராலிங், அபூர்வனை அவிழ்த்துவிடு" என்றார்.

சுமித்ரா சட்டென்று எழுந்து நின்று கடுமையான குரலில் "ஏன், நாடகத்தின் கடைசி காக்ஷியாகிய தம்பதிகள் கைகோர்த்து நிற்பதும் இங்கே எங்கள் எதிரிலேயே நடக்கலாமே. அதையும் பார்த்துவிட்டுப் போகிறோம்." என்றாள்.

பாரதி வெட்கத்தினால் தலை நிமிரமுடியாதவளானாள். டாக்டர், "இதில் வெட்கப்படும்படியான விஷயம் எதுவும் இல்லை பாரதி. எல்லா நாடகங்களையும் நடத்தி வைக்கும் அந்த பகவான் ஒரு தினம் இந்த நாடகத்திலும் தவறு இல்லாமல் முடிக்கவேண்டும் என்றே நான் விரும்புகிறேன்." என்று சொல்லி எழுந்து நின்று, "நான் இவர்களைப் பத்திரமாக வீடு கொண்டுபோய் சேர்க்கப் போகிறேன். இந்தா சுமித்ரா, உனது துப்பாக்கி. என்னிடம் வேறொன்று இருக்கிறது" என்று கூறி கடைக்கண்களால் அந்த மங்கோலியனைப் பார்த்துவிட்டு, "நீங்களெல்லாரும் பரிகாசமாக எனக்கு இருட்டிலும் கண் தெரியும் என்று சொல்வதுண்டு. ஜாக்ரதை, அந்த வார்த்தை முழு உண்மை என்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி புறப்படச்சித்தமானார்.

"தூக்குமரத்தின் கயிற்றை உங்கள் கையாலேயே உங்கள் கழுத்தில் மாட்டிக்கொள்ளப் போகிறீர்களா!" என்று ஆத்திரத்துடன் சுமித்ரா வினவினாள்.

டாக்டர் புன் சிரிப்புடன், "ஒரு சாதாரண கயிற்றுக்கு பயப்பட்டால் காரியமாகுமா, சுமித்ரா?" என்றார்.

இந்த ஆஸாமி செய்யப்புகுந்த எந்த வேலையையாவது தடுக்க மரணத்தின் பயத்தை எடுத்துச் சொல்வது எவ்வளவு பயனற்ற செய்கை என்பதை உணர்ந்து சுமித்ரா மிகவும் வெட்கினாள்.

பாரதியை அழைத்து வந்த வண்டி வெளியில் காத்திருந்தது. வண்டிக்காரனை எழுப்பி மூவரும் அதனில் ஏறி உட்கார்ந்தனர். வண்டி புறப்பட்டுச் சென்றது.

வெகு நேரம் மௌனமாகச் சென்ற பின் பாரதி, "நாம் எங்கே செல்லுகிறோம்?" என்று கேட்டாள்.

"அபூர்வனின் வீட்டிற்கு" என்று சொல்லி டாக்டர் வண்டியின் ஜன்னல் வழியாக வெளியே நோக்கினவண்ணமிருந்தார். சுமார் இரண்டு மைல் தூரம் சென்றபின் வண்டிக்காரனைக் கூப்பிட்டு வண்டியை நிறுத்தச் சொன்னார். "இங்கே ஏன் நிறுத்தவேண்டும்?" என்ற பாரதி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"எனக்கு இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் போகிறேன். அபூர்வ பாபு, நாளை காலையில் கப்பலில் ஏறி ஊர் போவீர்களல்லவா?"

அபூர்வன் தலையை ஆட்டினான். பாரதி டாக்டரின் இருகைகளையும் பிடித்துக்கொண்டு, "நான் என்னுடைய வீட்டிற்கு போகவேண்டுமே" என்றாள்.

"அவசியமில்லை. உன்னுடைய கடிதங்கள் சபையின் அங்கத்தினன் என்பதற்கு அறிகுறியான ரிஜிஸ்தர் நம்பர், துப்பாக்கி ஆகிய யாவும் இதற்குள் நவதாரை அப்புறப்படுத்தியிருப்பாள். அங்கே நவதாரையின் காதலனாகிய அதுலனும், அவனுடைய சாராய புட்டியும்தான் காணப்படும்" என்று சொல்லி டாக்டர் சிரித்தார். "நாளை காலை எட்டு மணிக்கு வீட்டிற்குப் போ. குளித்து, சமைத்து, சாப்பிட்டுவிட்டு, படுத்துத் தூங்கு. போலீஸாருக்கு எதுவும் அகப்படாது. நான் இரண்டு மணிக்குமேல் வருகிறேன். சாப்பிட ஏதாகிலும் வைத்திரு" என்றார்.

பாரதி ஸ்தம்பித்தாள். "உங்கள் பார்வை பெரிய விஷயம் சின்ன விஷயம் எல்லாவற்றிலும் இருக்கிறது. எல்லாருடைய சுக துக்கங்களையும் நீங்கள் கவனித்துக்கொள்ளுகிறீர்கள். எனக்கு இந்த உலகத்தில் பந்து எவரும் இல்லை. உங்களுடைய வழி வேண்டுவோர் சபையிலிருந்து என்னை ஒரு நாளும் நீக்காதீர்கள்" என்று டாக்டரைக் கேட்டுக்கொண்டாள்.

அவர் இருட்டில் தலையை ஆட்டிவிட்டு "பகவானுடைய வேலையிலிருந்து எவரையும் நீக்குவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. ஆனால் நீ இந்த வேலையை வேறு வழியில் இனிச் செய்யவேண்டியிருக்கும்" என்று சொல்லி "இனி எனக்கு நேரமாகிவிட்டது. நான் போய்வருகிறேன்" என்று இருட்டில் மறைந்தார்.

## அத்யாயம் 21.

அபூர்வனும் பாரதியும் மௌனமாக வீட்டை அடைந்தனர். அபூர்வனின் சமையற்காரன் எஜமானனின் வருகையைப் பார்த்தவனாய் கவலையுடன் காத்திருந்தான். ஆனால் இவ்விதம் இரவு இரண்டு மணிக்கு பாரதியுடன் அவன் வருவதைக் கண்டதும் அவனுக்கு என்னென்னவோ சந்தேகங்கள் உண்டாகிவிட்டன. கதவைத் திறந்துவிட்டு பேசாமல் படுக்கப்போய்விட்டான்.

"கதவை தாளிட்டாயா?" என்று அபூர்வன் அவனைக் கூப்பிட்டான். அதற்குள் சமையற்காரனின் மனோபாவத்தை உணர்ந்த பாரதி, "அவனை ஏன் தொந்திரவு செய்கிறீர்கள்? தூங்கட்டும், கதவை நான் தாளிடுகிறேன்" என்று சொல்லி தானே வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு அபூர்வனின் படுக்கையைத் தட்டிப் போட்டாள்.

அதில் படுத்த அபூர்வன் பாரதி எங்கே படுத்துக்கொள்வாள் என்ற சிந்தனையில்லாமல் "என் கைகளை அவர்கள் ஒடித்துவிட்டார்கள். ஐயோ! வலிக்கிறதே!" என்று முனகினான்.

பாரதி உடனே ஸ்நான அறைக்குச்சென்று சவுக்கத்தை நனைத்துப் பிழிந்து எடுத்துக்கொண்டு வந்து, "ஒன்றுமில்லை, கையை இறுகக் கட்டினதினால் கபிரத்தம் தோய்ந்திருக்கிறது. இந்த ஈரத்துணியைச் சுற்றிவைக்கிறேன். நீங்கள் தூங்குங்கள் நாளைக்கு சரியாகிவிடும்." என்று சொல்லி அவனைத் தூங்கச் செய்துவிட்டு இவள் வெளியறையில் வந்து ஒரு சாய்மான நாற்காலியில் சுருட்டிப் படுத்துக்கொண்டாள். பொழுது விடிந்ததும் கீழே இறங்கித் தனது வீடு சென்றாள்.

மறுதினம் மாலை டாக்டர் பாரதியின் வீட்டிற்கு வந்தார். அச்சமயம் பாரதி முந்தின இரவு நடந்தனவற்றை அவரிடம் சொல்லி, "அபூர்வபாபு ஒரு பெரிய மனிதர் என்று நான் ஒரு நாளும் நினைக்கவில்லை. ஆனால் இவ்வளவு சாதாரணப்பட்டவர் என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. மரண தண்டனையிலிருந்து அப்பொழுதே தப்பிப் பிழைத்து வந்திருக்கிறார். தம்மை நம்பினவர்களை போலீஸாரிடம் காட்டிக்கொடுத்துவிட்டார். அவரை மானத்திலிருந்து தப்பி வைத்த உங்களிடம் சிறிதும் நன்றியைக் காணோம். ஏதோ கையில் கொஞ்சம் வலிப்பதும் ஐந்நூறு ரூபாய் சம்பளம் கொண்ட வேலை போய்விட்டதும் தான் அவருக்குப் பெரிதாகத் தோன்றுகிறது." என்றாள்.

"அபூர்வனின் விஷயத்தில் நீ பெரிய தவறு செய்கிறாய், பாரதி" என்றார் டாக்டர். "தான் இவ்விதம் நன்றியற்றவிதமாக நடந்துகொள்ளுகிறோமென்று அவன் ஒரு நாளும் அறிந்து கொள்ளமாட்டான். அவன் அவ்வளவு தாழ்ந்தவனுமல்ல. என்னமோ வேலைக்காக வெளியூர் வந்திருக்கிறான், வீட்டில் அம்மா, அண்ணா, பந்துக்கள் எல்லோரும் இருக்கிறார்கள். படித்து பரீக்ஷை பாஸ் செய்தவன். ஏதோ சம்பாதித்து சௌக்யமாக வாழலாமென்பதே அவனுடைய எண்ணம். இதர இந்திய வாலிபர்களைப்போல் அவனும் தேசத்திற்கு நல்லது செய்யவேண்டுமென்றே விரும்புகிறான். ஆகையாலேயே நீ வழிவேண்டுவோரின் சங்கத்தில் சேர், தேசத்தொண்டு செய் என்று சொன்ன சமயம் சரி என்று ஒத்துக்கொண்டான். நீ சொல்வதைச் செய்வதனால் தனக்குத் தீங்கு ஏற்படாதென்று நம்பினான். இந்தத் தூர தேசத்தில் ஆபத்து சங்கடங்கள் ஏற்பட்டால் நீ ஒருத்தி தான் அவனுக்குச் சகாயம் செய்பவள். நீயே அவனை மரணக்குழியில் தள்ளுவாயென்று அவன் கனவிலும் கருதுவானா"? என்றார்.

பாரதி தனது கண்ணீரை ஒளிக்கும் பொருட்டுத் தலை குனிந்தவண்ணம், "அவருக்காகப் பரிந்து பேச நீங்கள் வக்காலத்து வாங்கியிருக்கிறீர்களா? அவர் நேற்று செய்த காரியத்திற்குப்பின் அவரைப்பற்றி நினைப்பதும் தவறு" என்றாள்.

டாக்டர் சிரித்துவிட்டு "ஒரு தவறான காரியம் செய்துவிட்டால் தான் என்ன? பாரதி, நீ பார்க்கவில்லை, நான் பார்த்தேன். அவர்கள் அவனைக் கயிறு கொண்டு கட்டின சமயம் அவன் பிரமித்து பேசமுடியாமலாகிவிட்டான் "இதையெல்லாம் நீ செய்தாயா?" என்று அவர்கள் கேட்டார்கள். ஆமாம், என்றான். "இதற்கு தண்டனை மரணம். நீ மரிக்கவேண்டும்" என்றார்கள். அவன் கண்களைக் கொட்டிக்கொண்டு நின்றான். அக்கண்கள் இங்குமங்கும் தேடலாயின. அவை யாரைத் தேடுகின்றன என்பது எனக்குத் தெரியும். அதற்காகவே உன்னைக்கூப்பிட்டுக் கொண்டுவர ஆளையனுப்பினேன்".

பாரதியால் அதற்குமேல் தாங்க முடியவில்லை. கண்களில் தாரை தாரையாக நீர் பெருக, "இதெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்லுகிறீர்கள்? எனக்கு உங்களைவிட மேல்பட்டவர் வேறு எவரும் கிடையாது. அவருடைய இந்தச் செய்கையினால் அதிக ஆபத்து ஏற்பட்டிருப்பது உங்களுக்கே. அப்படியிருந்தும் எனக்காக நீங்கள் அவரைக் காப்பாற்றவேண்டுமென்று உங்களைச் சேர்ந்தவர்களெல்லாரையும் உங்களுக்கு விரோதமாகச் செய்துகொண்டிருக்கிறீர்கள்!" என்று அழுதாள்.

"அது உண்மைதான்."

"பின் எதற்காக அவரைத் தப்புவிக்க விரும்பினீர்கள்?"

"அபூர்வனை ஏன் தப்பவைத்தேனோ? அபூர்வனையல்லவே! ஓர் உயிர் வதையை நான் தடுத்தேன். பகவான் சிருஷ்டியை நாசம் செய்ய விரஜேந்திரனைப்போன்ற மூடனுக்கு என்ன அதிகாரம்?" என்று சொல்லி டாக்டர் சிரித்துவிட்டு பிறகு மிகக் கருணை நிறைந்த குரலில், "பாரதி, நான் உனக்கு ஒரு கதை சொல்கிறேன் கேள். நீலகாந்த ஜோஷி என்ற ஒரு மகாராஷ்டிர வாலிபனை நீ பார்த்தது கிடையாது. நான் அவனைப் பார்த்தது முதல் எனக்கு அவன் ஞாபகமாகவே இருக்கிறது. தெருவில் ஒரு பிணம் போயிற்றென்றால் அவனுடைய கண்களில் நீர் நிறைந்துவிடும். அவ்வளவு கருணையான உள்ளம் கொண்டவன். ஒருநாளிரவு நாங்களிருவரும் கொழும்பில் ஒரு பார்க்கின் இரும்புக் கிராதியின்மீதேறி உள்ளே குதித்து ஒளிந்துகொண்டிருந்தோம். ஒரு மரத்தடியிலிருக்கும் பெஞ்சியின்பேரில் படுக்கலாமென்று சென்ற சமயம் அதனில் ஏற்கனவே ஒருவன் படுத்திருப்பதைப் பார்த்தோம். "தண்ணி, தண்ணி" என்று அவன் முனகினான். விளக்கை ஏற்றி அவனுடைய முகத்தைப் பார்த்ததும் அவன் மரிக்கும் தருவாயிலிருக்கிறான் என்பதை உணர்ந்தோம். அவனிடமிருந்து வந்த துர்கந்தத்திலிருந்து அவனுக்குக் காலரா கண்டிருக்கிறதென்பது தெரிந்தது. நீலகாந்தான் உடனே அவனுக்கு சிச்ருஷை செய்யத் தொடங்கினான். நான் அவனை நோக்கி, "ஜோஷி, இவன் எப்படியோ பார்க்கின் காவலாளன் கண்களில் படாமல் இங்கே கிடக்கிறான். பொழுதுவிடிந்தால் இங்கே இருக்கக்கூடாது. நம்மைப் பிடிக்க வாரண்டு வெளிவந்திருக்கிறது. இவன் எப்படியும் மரிக்கிறவன். அவனுடன் கூட நாமும் சாகும்படியாகும். வா, போகலாம்" என்றேன். நீலகாந்தன் அழுதவண்ணம், "இந்த நிலைமையில் இவனை எப்படி விட்டுவிட்டு வருவேன் அண்ணா! நீ போ, நான் இங்கேயே இருக்கிறேன்" என்றான். நான் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை."

"பிறகு என்ன ஆயிற்று?"

"அந்த வியாதிக்காரன் நல்லவன், பொழுது விடிவதற்கு முன்பே கண்களை மூடிவிட்டான். அதற்குமேல் ஜோஷி அவ்விடத்தை விட்டு வந்தான்". ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டு டாக்டர் மேலும் சொல்லலானார், "சிங்கப்பூரில் ஜோஷியைத் தூக்கிவிட்டார்கள். வேறு சிலரை அவன் காட்டிக்கொடுத்திருந்தால் அவன் தப்பியிருக்கலாம். ஆனால் அந்த மாதிரி துரோகம் செய்ய அவன் சம்மதிக்கவில்லை. சர்க்கார் எவ்வளவு வற்புறுத்தியும் "எனக்குத் தெரியவே தெரியாது" என்று சொல்லிவிட்டான். இப்பொழுதும் அம்மாதிரி பிள்ளைகள் இந்த தேசத்தில் பிறக்கிறார்கள், பாரதி. இல்லாவிட்டால் நான் சந்யாசியாகத் தவம் செய்யச் சென்றிருப்பேன். நரபலி செய்வது எனக்கு இஷ்டமே கிடையாது, பாரதி".

"இஷ்டம் கிடையாது. ஆனால் அவசியம் ஏற்பட்டால்?"

"அவசியமா? விரஜேந்திரனின் அவசியத்திற்கும் ஸாசியின் அவசியத்திற்கும் வித்யாசமுண்டு. நாழியாகிவிட்டது, நான் போய் வருகிறேன்" என்று சொல்லி டாக்டர் சென்றார்.

(தொடரும்)

225525
சென்னை-600 008

## பாம்பே கோவாப்ரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி

*17—18, ப்ராட்வே, சென்னை*

**முக்கிய அம்சங்கள் :**

- ○ குறைந்த பிரீமியம்
- ○ கணிசமான போனஸ்
- ○ நூற்று ஐம்பது ரூபாயிலிருந்து கூட பாலிஸிகள்
- ○ வைத்திய பரீட்சை இல்லாமலு முள்ள பாலிஸிகள்
- ○ செயலற்றுலும் அதிக பிரீமிய தொகையில்லாத இன்ஷ்யூரன்ஸ்
- ○ பாலிஸிதாரர்களுக்கு பிரதிநிதித்துவம்
- ○ சர்க்காருடைய மேம்பார்வையும், கணக்கு தணிக்கையும்
- ○ வருமான வரி, ஸ்டாம்பு கட்டணம், ரிஜிஸ்ட்ரேஷன், கோர்ட் பீசு கட்டணம் வகையறு சிலவு இல்லாமை.

**1940ம் வருஷத்திய புதிய பாலிஸிகள்**
**40 லட்சத்துக்கு மேல்**

நியமிக்கப்படாத இடங்களில்
தலைமை ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு அடியில் கண்டவருக்கு
எழுதித் தெரிந்துகொள்ளலாம்

**ஸி. ஆர். ராகவாச்சாரி,** எம். ஏ.,
மானேஜர்
சென்னை கிளை ஆபீஸ்.



தந்தி 'Motherland'    போன்: 3501

## மூக்குக் கண்ணாடி

முதலிய வசதிகளுக்கு

○

தென் இந்தியாவில் :: தலை சிறந்தது

## மணிலால் எம். மேதா,

கண்ணாடிகள் உற்பத்தி செய்பவர்
&
ஹோல் சேல் வியாபாரி,

**ப்ராட்வே, :: மதருஸ்.**



★

உங்கள்
விளம்பரங்களுக்குச்
சிறந்தது

## "காவேரி"

★

22 JUL 1942


# இந்தியக்கைத்தொழிலை :: ::

## :: :: நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக்கொண்டு போங்கள். **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பி தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

**தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை**

புரோப்ரைட்டர்கள்:- **வி. எஸ். & சன்ஸ்,**


கும்பகோணம்.

**The Southern India Confectionery Factory.**

*Proprietors:-* **V. S. & SONS.,**

**KUMBAKONAM.**

# எது வேண்டும்?
## சேவையா? சிக்கனமா?
## இரண்டுமே உங்களுக்குக் கிடைக்கும்.



**வெலாக்ஸ்** மிகச் சிறந்து விளங்கும் இந்த ஆறு ஸிலிண்டர் வாக்ஸால் வேகமாகச் செல்லக்கூடியது; சிறந்த சேவை தரக்கூடியது. மணி ஒன்றுக்கு 75 மைல் வேகத்தில் ஓடும். காலன் பெட்ரோலுக்கு அதிக மைல்கள் ஓடும் அற்புதம் இது.

**வைவர்ன்** உங்கள் சிக்கனத்திற்கு ஏற்ற சிறந்த கார் இது நாலு ஸிலிண்டர் வாக்ஸால், சாதாரணமாக ஓட்டினால் காலனுக்கு 35 மைல் செல்லும் வேகமாக ஓட்டினால் மணிக்கு 60 மைல்களுக்குமேல் போகும்.

இன்றே வந்து எம்மைக் காணுங்கள்! இப்புதிய வாக்ஸால் சிக்கனத்துடன் கூடிய சேவையை உங்களுக்கு எப்படித் தருகிறது என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் காண்பிக்கிறோம்.

சிக்கனத்துடன் கூடிய சேவை

- சௌகரியம்!
- பிரயாண சுகம்!
- தோற்றம்!

# வாக்ஸால்

வெலாக்ஸ் '18' ... வைவர்ன் '12'

## சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

மவுண்ட்ரோட், :: சென்னை

## டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்

மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம்.




The Cauveri Colour Press, Kumbakonam.